வளையக்கூடிய ஸ்திதியில் அவள் உடல் உணர்ச்சிகளை உருவாக்கி வைத்திருந்தது. ஆகவே, உபாத்தியாயன் அணைப்பிலேயே முழு சம்மதத்துடன் சித்ரா மாடிப்படிகளில் இறங்கிச் சென்றாள். இவர்களைக் கண்டதும் கூடத்திலிருந்த வீரர்கள் கூச்சலை நிறுத்தினார்கள்.

உபாத்தியாயன் தானும் பூராவாகக் குடித்து விட்டவன் போல் பாசாங்கு செய்து சித்ராவின் கன்னத்தில் எல்லோருக்கும் எதிரில் தன் இதழ்களை ஒருமுறை பொருத்திவிட்டு, "ஏன் நிறுத்திவிட்டீர்கள்? நன்றாகக் குடியுங்கள். இரவில் குதூஹலம்; பகலில் உழைப்பு. இது தான் வீரர்கள் வேலை. டேய்! இங்கே ஒரு கலயத்தில் மது கொண்டு வா" என்று தட்டுத் தடுமாறிக் கூவினான். ஒருவன் மதுக் கலயத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். "நீ போ" என்று கூறிவிட்டு அவன் சென்ற பின் மடியிலிருந்து ஸ்படிகக் குப்பியை எடுத்து மயக்கத் திராவகம் பூராவையும் கலயத்தில் ரகசியமாக ஊற்றினான் உபாத்தியாயன். மீண்டும் மருந்துக் குப்பியை மடியில் மறைத்துக் கொண்டு கலயத்தை உயரத் தூக்கி, "வீரர்களே! இதோ இந்த மது பூராவையும் உங்களுக்கே கொடுக்கிறேன். இது நமது பரிசு" என்று கூறிக்கொண்டு தட்டுத் தடுமாறி நடந்து சென்று அந்தக் கலயத்திலிருந்த மதுவை ஆளுக்கொரு பாத்திரத்தில் ஊற்றிக் கொடுத்தான். சற்று நேரத்திற்கெல்லாம் வீரர்கள் மயக்கத்தால் சாய்ந்ததைக் கண்டதும் உபாத்தியாயன் மிகத் துரிதமாகச் சித்ராவிடம் ஓடி வந்து, "சித்ரா! வா உன் வண்டிக்குப் போவோம்" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான். சித்ராவுக்குப் போக மனமில்லை; சிறிது தயங்கிக் கொண்டு நின்றாள்.

# 19. சுவர்க்க வாசல்

அவள் தயக்கம் அஜித் சந்திரன் மனத்தில் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது. விநாடிக்கு விநாடி மாறும் அந்தப் பெண்ணின் சலன சித்தம் அவனுக்குப் பெரும் புதிராயிருந்தது. பல்தேவ் போன்ற ஒரு கொடிய விரோதி கையில் அகப்பட்டு தத்தளித்து, தப்பினால் போதுமென்று சற்று முன் பறந்த சித்ரா, தப்ப மார்க்கம் ஏற்பட்ட பின் ஏன் தயங்கி நிற்கிறாள் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. கொஞ்சம் யோசித்திருந்தால் உபாத்தியாயனின் கூரிய மூளைக்குக் காரணம், லகுவில் புரிந்திருக்கும். ஆனால், சித்ராவை எப்படியாவது பல்தேவின் கையிலிருந்து தப்ப வைக்க வேண்டுமென்ற ஆத்திரம் அவன் புத்தியை ஆட்கொண்டிருந்தபடியால் வேறு யோசனைக்கு அதில் இடமில்லாதிருந்தது. ஆகவே "ஏன் சித்ரா! என்ன யோசனை?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

சித்ரா தன் அழகிய விழிகளால் அவனை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்தாள். பிறகு அவள் கண்கள் அவன் இடுப்பையே கவனித்தன. அவள் விழிகள் செல்லும் மார்க்கத்தையே கவனித்திருந்த உபாத்தியாயன் புன்முறுவல் செய்தான்.

"இடுப்பில் கச்சையும், கத்தியும் இல்லையே என்று பார்க்கிறாயா சித்ரா? இனிமேல் கத்திக்கு அவசியமில்லை. வண்டியைக் காத்து நிற்கும் ஒரு வீரன் தவிர மற்ற எல்லோரும் மயக்கத்தால் மல்லாந்து கிடக்கிறார்கள். ஒரு வீரனைக் கொல்ல கத்தி அவசியமில்லை. ஏனென்றால் அவன் துணையும் உனக்கு வேண்டும். உன் வண்டியை

ஓட்டுபவனை இவர்கள் எந்த அறையில் அடைத்திருக் கிறார்களோ தெரியாது. அவனுக்குப் பதிலாக இவனை வண்டியை ஓட்டி வரச் சொல்லலாம். இவனுக்குப் பணத்தாசை காட்டி உன்னுடன் அனுப்புகிறேன். இவன் வண்டியை ஓட்டுவதால் ஒரு பலனும் உண்டு. இவன் பல்தேவ் படையைச் சேர்ந்தவனாகையால் ரஸ்தாக்களில் சஞ்சரிக்கும் படைவீரர்களும் வண்டியில் போவது நீதான் என்று சந்தேகிக்க மாட்டார்கள்," என்று விடுவிடுவென்று பேசிக்கொண்டே போனான் உபாத்தியாயன்.

சித்ரா அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆடாமல் அசையாமல் பதுமைபோல் நின்று கொண்டிருந்தாளே யொழிய, இருந்த இடத்தைவிட்டு அசையும் உத்தேசத்தைக் காட்டவில்லை. அவள் இதழ்களிலும் புன்முறுவல் படிந்தது. கண்களில் வெட்கம் ததும்பிக் கொண்டிருந்தது. தன் மனத் திலுள்ள எண்ணத்தை இந்தப் புருஷனிடம் எப்படித்தான் சொல்வதென்று யோசித்தாள். சண்பகத் தோட்டத்தின் சம்பவத்திலிருந்து சங்கிலி போல் தொடர்ந்த அநேக நிகழ்ச்சி களால் திரும்பத் தன் வாழ்க்கையில் மோதித் தன்னைக் கவர்ந்துகொண்ட இந்த உபாத்தியாயன் எவ்வளவோ புத்தி சாலியாயிருந்தும், தான் போக மறுக்கும் காரணத்தைப் புரிந்துகொள்ளாமல், தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு யோசனையைத் தவிர வேறு யோசனையில்லாமல் ஏதேதோ உளறுகிறானேயென்று நினைத்தாள். 'சற்று முன் இவருடன் படியில் நான் இணைந்து இறங்கி வந்ததும் இவர் என் கன்னத்தில்...' என்ற அவள் நினைவுத் தொடர் வெட்கத் தால் இந்த இடத்தில் சற்று அறுந்து நின்று அவள் உடல் பூராவும் இன்ப அலைகளை அள்ளித் தெளித்தது. சிறிது சமாளித்துக் கொண்டு மேலும் அவள் நினைத்தாள்: 'இத்தனையும் சந்தர்ப்பத்தையொட்டிய நடிப்பு என்றுதான் இவர் நினைக்கிறாரா? நல்ல அழகு! அவசியமான கட்டங்



களில் இந்த ஆண் பிள்ளைகள் எவ்வளவு குருடர்களாகி விடுகிறார்கள்?'— இப்படி யோசித்துக் கொண்டு நின்றிருந்த இத்தனை காலமும் அவள் கையைப் பிடித்து நின்ற உபாத்தி யாயன் கையை விடவில்லை. 'விட மறந்துதான் போய் விட்டாரோ' என்று நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டே சித்ரா, சிறைப்பட்டுக் கிடந்த தன் மலர்க்கரத்தை அவன் கைக்குள் லேசாகச் சுழற்றினாள். அந்தப் பூங்கையின் அசைவு உபாத்தியாயனைப் பைத்திய நிலைக்குக் கொண்டு வந்தது. கள்ளைவிட மயக்கம் தரும் அவள் விழிகளின் பார்வை அவன் விழிகளுக்குள் நுழைந்து அவன் உடல் பூராவிலும் அமுதத் துளிகளை வாரி இறைத்தது. அசை வற்று நின்ற அவள் அழகிய உடலும் வெட்கத்தால் நெளியவே இடையில் தவழ்ந்து சென்று கொடியைப் போல் அவள் மேல் படர்ந்திருந்த மேலாடை இடைவெளி கொடுத் தது. இத்தனை அழைப்புகளுடன் அவள் பேச்சும் கலந்து கொண்டது.

"உங்கள் கத்தியை என் பாதுகாப்பிற்காகத் தேடவில்லை. நீங்கள் என்னுடன் வரவேண்டும்; அப்படியிருக்கக் கத்தியை அறையிலேயே வைத்துவிட்டீர்களே என்பதற்காகத்தான் பார்த்தேன்" என்றாள் சித்ரா.

உபாத்தியாயன் தடுமாற்றத்துடன் பேசினான்: "நான் உன்னுடன் எப்படி வர முடியும்? பல்தேவ் திடீரென்று விழித்துக் கொண்டால் அவனுக்கு என் மறைவைப் பற்றி யார் சமாதானம் சொல்லுவார்கள்? உன்னைத் தேட அவன் முயற்சித்தால் அவனுக்கு நீ போகும் மார்க்கத்தைச் சொல்லாமல் தவறான வழியைக் காட்ட இங்கு யாராவது வேண்டாமா?" என்றான் உபாத்தியாயன்.

தனக்காக இவன் எவ்வளவு தூரம் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறான் என்பதை சித்ரா தெரிந்து கொண் டாள். பல்தேவ் எழுந்திருந்து தன் வண்டியைக் காண

வில்லையென்றால் முதல் சந்தேகம் உபாத்தியாயனின் மேல் தான் விழும். பிறகு உபாத்தியாயன் கதியைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த அயோக்கியர்கள் உபாத்தி யாயனைக் கொன்றுவிடுவார்கள் என்பதில் சித்ராவுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. ஆகவே அவள் திட்டமாகச் சொன்னாள்: "உபாத்தியாயரே! நீங்கள் இங்கு தங்குவதால் ஏற்படக்கூடிய அபாயம் எனக்குத் தெரியாதென்று நினைக் கிறீர்களா? நீங்கள் இராமல் நான் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்."

"சித்ரா, உன் பிடிவாதம் இன்னும் மாறவில்லையே! எனக்கு இங்கு என்ன அபாயம்? பல்தேவ் சாதாரணப் படைத்தலைவன், நானோ அவனுக்கு மேற்பட்ட உப சேனாதிபதி. எனக்கு அவன் ஏதாவது தீங்கு செய்தால் தோரமானா அவனையும், அவன் படைகளையும் நிர்மூலம் செய்துவிடுவான்."

"உங்களைப் பல்தேவ் அழித்த பின்புதானே தோரமானா பழி வாங்குவான்?" என்றாள் சித்ரா இடைமறித்து.

"என்னைப் பல்தேவ் எதற்காக அழிக்கப் போகிறான்? நீ தப்பி ஓடியதற்கு நான்தான் காரணமென்று அவன் எப்படி ஊகிக்க முடியும்? தவிர, அவனே உனக்குச் சொன் னானே, அவன் மனைவியைக் காக்க நான் என் உயிரைக் கூடத் திருணமாக மதித்து உங்களிடம் கசையடி பட்ட கதையை. இவ்வளவு என்னிடம் கடமைப்பட்டிருப்பவன் எனக்கு எப்படித் தீங்கு செய்வான்?"

உபாத்தியாயன் சாதுர்யமாகத்தான் பேசினான். ஆனால், அவன் வார்த்தைகள் அவளுக்கு எந்தவிதச் சாந்தியையும் அளிக்கவில்லை.

"உபாத்தியாயரே! என்னை ஒன்றுமறியாத முட்டா ளென்று நினைக்கிறீர்களா? நீங்கள் சொன்ன கடமை, நன்றி,



உத்தியோக பயம் எல்லாம் உடம்பில் நல்ல உணர்ச்சிகள் கெடாதிருக்கும் வரையில்தான். நீங்கள் என் தகப்பனாரை வில்லவரிடமிருந்து காப்பாற்றினீர்களே, அவர் உங்களுடன் நன்றியுடனா இருக்கிறார்? இந்த பல்தேவ் ஒரு காலத்தில் நல்லவனோ என்னமோ, இப்பொழுது பரம அயோக்கியன், கள்ளனும் காமாந்தகனுமான இவனிடம் நீங்கள் கடமை யையும் நன்றியையும் எதிர்பார்க்கவில்லையென்பது எனக்குத் தெரியாதா? ஏதோ என்னைச் சாந்தப்படுத்தி அனுப்பிவிட்டு நீங்கள் இவனிடம் சிக்கிக்கொள்ளத் திட்ட மிடுகிறீர்கள். இவ்வளவு தியாகத்திற்கு நான் எப்படி ஒப்புக் கொள்வேன்? அப்படி ஒப்பினால் நன்றி கெட்டவளாக மாட்டேனா? அப்புறம் பல்தேவுக்கும் எனக்கும் என்னதான் வித்தியாசம்?" என்றாள் சித்ரா.

சித்ராவை சுலபமாக ஏமாற்ற முடியாதென்று தெரிந்து கொண்டான் உபாத்தியாயன். இருந்தாலும் தன் சாமர்த் தியத்தை இன்னும் சற்று உபயோகப்படுத்த முயன்றான். "சித்ரா! இந்த உபாத்தியாயனை என்ன சுத்தப் பைத்தியம் என்று நினைத்துக் கொண்டாயா? ஆனானப்பட்ட அடிலனிடமிருந்து தப்பிய அஜித் சந்திரனுக்கு..." என்ற வார்த்தைகளை அவள் வெட்டி, "அப்பொழுது ஒரு பெண் உதவினாள்" என்றாள்.

"இப்பொழுதும் அந்தப் பெண்தான் உதவுகிறாள். உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பின் பலம் போதுமே எனக்கு இந்த பல்தேவைச் சமாளிக்க. பல்தேவ் சைன்னியம் உலாவும் ரஸ்தாவில் நீயும் உன் தம்பியும் அனாதைகளைப் போல் செல்லும்போது நான் இங்கு பல்தேவிடம் அகப்பட்டுக்கொண்டு உங்களைப் பிடிக்க அனுமதிப்பேனென்று நினைக்கிறாயா? பல்தேவ் கண் ணிலும் சரி, மற்ற மடையர்களின் கண்களிலும் சரி, மண்ணைத் தூவுவது எனக்கு ஒரு பிரமாதமா? சற்று முன்

அகப்பட்ட கூரை விளக்குபோல் எத்தனையோ உபகரணங்கள், உபாயங்கள் உபாத்தியாயனுக்கு அகப்படாதா? தர்க்கத்துக்கு அவகாசமில்லை சித்ரா. தயங்காதே, வா,'' என்று அவள் கையை இறுகப் பிடித்து இழுத்தான்.

அதுவரை அவள் மேல்படியிலும் அஜித் சந்திரன் கீழ்ப் படியிலும் நின்றிருந்தார்கள். அவன் இழுத்ததும் சித்ரா மேல் படியின் முனைக்கு வந்தாள். உபாத்தியாயன் மூச்சு நின்று விடும் போலிருந்தது. அவள் கழுத்துக்குச் சரியாயிருந்தது அவன் முகம். தலையைச் சற்று தாழ்த்தினான். அவளும் குனிந்து அவன் காதில், ''நீங்களில்லாமல் நான் போக மாட்டேன்'' என்று மெல்லச் சொன்னாள். குனிந்தபோது சற்றே சரிந்த மேலாடையாலும், தன் முகத்தின் வெகு அருகில் கொண்டு வரப்பட்ட கவர்ச்சிப் பந்தங்களாலும் பிரமை தட்டிப் போனான் உபாத்தியாயன். அவள் சொல்லிய வார்த்தைகள் அவன் உடம்பில் விவரிக்க இயலாத இன்ப வேதனையையும் அளித்தன. அவள் பேசி விட்டு மீண்டும் படிகளில் ஏறி அறையை நோக்கிச் சென்றாள். படி உச்சியில், அறையின் கதவுக்கருகில் நின்று ஒருமுறை அவனைத் திரும்பிப் பார்த்தாள். உபாத்தியாயன் மின்னல் வேகத்தில் படிகளில் ஏறிச் சென்று அவளை இரண்டு கைகளாலும் முரட்டுத்தனமாக இறுகப் பிடித்துக் கொண்டான். அந்த முரட்டுத்தனத்தை அவள் பெரிதும் விரும்பினாள். ஒரு பக்கமாக அவன் பிடியில் சாய்ந்த அவள் சிரித்தாள். அவள் இடதுகை, மூடியிருந்த அறைக் கதவைத் திறந்தது. ஏதோ சொர்க்க வாசலே திறந்தது போலிருந்தது உபாத்தியாயனுக்கு!

# 20. எதற்கும் பணம் வேண்டும்

சித்ராவின் கட்டழகினாலும் அவள் விழிகளும் உடலசைவுகளும் கொடுத்த காமாஸ்திரங்களினாலும் நிலை குலைந்து நிதான புத்தியை அடியோடு இழந்துவிட்ட உபாத்தியாயன் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே அவளை அறைக்குள் இழுத்துச் சென்றான். அறையில் வெளிச்சம் மருந்துக்குக்கூட இல்லாமல் ஒரே கும்மிருட்டாயிருந்தது. திருட்டுக்கும் காமத்துக்கும் இருட்டு பலமான துணை. ஆனால் காமத்தால் ஏற்கெனவே குருடனாகிவிட்ட அஜித் சந்திரனுக்கு இயற்கையின் இந்தத் துணையில்லாவிட்டாலும் அவன் போக்கு மூர்க்கத்தனமாகவே இருந்திருக்கும். அவன் கரங்களால் அணைக்கப்பட்ட சித்ராவின் மனத்தில் பரிபூரணமான அமைதி குடிகொண்டிருந்தது. அவன் மார்பில் அடைக்கலம் புகுந்திருந்த அவள் முகத்தை அஜித் சந்திரனால் பார்க்க முடிந்திருக்கும். ஹூணர்களின் குரூரமும், கூர்ஜர ஸ்திரீகளின் அழகிய மந்தகாசமும் கலந்திருந்த அவள் முகத்திலிருந்து குரூரம் அடியோடு விலகி மனத்தைக் கவிழ்க்கும் மந்தகாசம் மட்டுமே குடிகொண்டிருந்தது.

அஜித் சந்திரனோ சித்ராவோ நின்றிருந்த இடத்தை விட்டுச் சிறிதும் அசங்கவே இல்லை. அறை நடுவுக்குக்கூட அவர்கள் நகரவில்லை. திறந்த கதவிற்குச் சில அடி தூரத்திலேயே நின்றிருந்தார்கள். அவர்களுடைய உணர்ச்சிகள் பேசிக் கொண்டிருந்ததால் உதடுகள் பேசவில்லை. அறையில் நிரம்பிக் கிடந்த அந்த அந்தகாரத்தில் தன் இஷ்டத்திற்கு இணங்கிய கட்டழகியை ஏந்தி நின்ற உபாத்தியாயனைத்

தவிர வேறு யாராவதாயிருந்தால் கதை விபரீதமாயிருக்கும். ஆனால், வாழ்க்கைச் சோதனைகளால் பண்பட்ட இதய முடைய உபாத்தியாயனின் எண்ணம், 'இவ்வளவு உயர்ந்த பெண், பல்தேவின் கைகளில் சிக்கியிருந்தால் என்ன ஆகி யிருக்கும்; பிறகு என் வாழ்வுதான் எப்படிப் போயிருக்கும்' என்று ஆராய ஆரம்பித்தது. அந்த ஆராய்ச்சியிலிருந்து 'ஆபத்து இன்னும் துளிகூடத் தீரவில்லை' என்ற நினைப்பும் எழுந்தது. ஆபத்து என்ற கத்தரிக்கோலால் துண்டிக்கப்பட்ட காமவலையிலிருந்து விடுபட்ட அஜித் சந்திரன் புத்தி சற்று நிதானத்துக்கு வந்ததால், சித்ராவின் நன்மையோடு தன் கடமையும் கலந்திருக்கிறது என்பதை அவன் அறிந்து கொள்ள அதிக நேரமில்லை. சித்ராவின் மையலில் காலத் தைச் செலவிட்டால், மயக்கத் துளிகள் கலந்த மதுவை யாராவது சில வீரர்கள் பூராவாக அருந்தாமலிருந்து விழித் துக் கொண்டால், தங்கள் இருவர் கதியும் அதோகதிதான் என்பது அஜித் சந்திரனுக்கு நன்றாகத் தெரிந்தே இருந்தது. தவிர, தான் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய முக்கியக் கடமையொன்றும் அவன் நினைவுக்கு வந்தது. எவ்வளவு மக்களின் நன்மை தன் கையில் சிக்கிக் கிடக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தான். அந்த எண்ணத்தால் ஏற்பட்ட கடமை சாட்டையால் சுளீரென்று அடித்து எழுப்பப்பட்ட அஜித் சந்திரன் சித்ராவை அணைத்து நின்ற கரங்களில் ஒன்றை விலக்கி அவளுடைய இரு கன்னங்களையும் அந்தக் கையால் பிடித்து முகத்தைத் தன் முகத்துக்காகத் தூக்கி அவள் காதுக் கருகில் தன் இதழ்களை ஒருமுறை பொருத்தி நீக்கி, "சித்ரா! நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆகவேண்டும். பிடிவாதம் செய்யக்கூடாது, என்ன?" என்று மெல்லப் பேசினான்.

சித்ரா உடனே பேசவில்லை. சிறிது யோசித்துவிட்டு, "உங்களைத் தனியாக விட்டுப் போவதைத் தவிர வேறு எதைச் சொன்னாலும் கேட்கிறேன்" என்றாள்.



"சித்ரா! என் கட்டளைக்கு நீ பணிவதானால் முழுக்கப் பணியவேண்டும்; இல்லாவிட்டால் உன்னிஷ்டப்படி நடக்க வேண்டும். இப்படிச் சொல்லுகிறேன் என்று வருந்தாதே. நான் சொல்வதற்குக் காரணமிருக்கிறது" என்றான் அஜித் சந்திரன்.

"என்ன காரணம்?"

"அதைச் சொல்ல முடியாத நிலைமையில் இருக் கிறேன்."

"என்னிடம் நம்பிக்கையில்லையா?"

"நம்பிக்கை இல்லாமலில்லை. ஆனால் வேறு ஒரு கடமை என் நாவைக் கட்டியிருக்கிறது. உன்னிடமாவது துணிந்து இதைச் சொல்கிறேன். வேறு யாராவதிருந்தால் இதைக்கூடச் சொல்லியிருக்கமாட்டேன்."

"என்ன கடமை அது?"

"மேற்கொண்டு எதுவும் கேட்காதே சித்ரா. வெகு சீக்கிரம் நீயே தெரிந்துகொள்வாய். ஆனால், இப்பொழுது மாத்திரம் நான் சொல்வதைக் கேள். உனக்கு என் மேலிருக்கும் அன்பு உண்மையானால் என் வார்த்தையைத் தட்டாதே. நாம் அசந்தர்ப்பமாக மனத்தைப் பறிகொடுத்து அசட்டுத்தனமாய் நடந்துகொண்டால், தற்காலிக சுகத்துக்காக இரவை இந்த இடத்திலேயே ஓட்டிவிட்டால், பல்தேவுக்குத் தான் லாபம். நீ ஓடிப்போய் நான் இருந்தால் இருவரும் தப்பலாம். ஏனென்றால் பழியை உன்மேல் போட என்னால் முடியும்."

அஜித் சந்திரன் யோசனை எந்த மார்க்கத்தில் ஓடுகிற தென்று சித்ராவால் ஊகிக்க முடியவில்லை. "என் மேல் பழியைப் போடுவீர்களா!" என்றாள்.

"ஆம் சித்ரா! வண்டியைக் காவல் புரியும் பல்தேவின் ஆளுக்கு லஞ்சம் கொடுத்து உன் வண்டியை ஓட்டச்

சொல்லுவேன். பல்தேவ் எழுந்திருந்து தர்மசாலை அமர்க்களப்படும்போது நீதான் வண்டியைக் காவல் செய்தவனுக்கு லஞ்சம் கொடுத்து அழைத்துச் சென்றுவிட்டாய் என்று சொல்லுவேன்" என்றான் உபாத்தியாயன்.

"பல்தேவ் நம்பாவிட்டால்...?" என்று சித்ரா கேட்டாள்.

"ருசு இருக்கும்பொழுது எப்படி நம்பாமலிருக்க முடியும்?"

அவன் சொல்லுவதில் நியாயமிருப்பதை சித்ரா உணர்ந்துகொண்டாலும் பல்தேவ் உபாத்தியாயரை சுலபமாக விடமாட்டான் என்று எண்ணினாள். அவள் அன்புக்குப் பாத்திரமான இன்னொருவன் மீது உபாத்தியாயன் சொல்லம்பு வீசினான். "சித்ரா! நாமிருவரும் சிக்கி அழிவோமென்றே வைத்துக்கொள். உன் தம்பியின் நிலைமை என்ன ஆகும்?" என்று கேட்டான்.

கொஞ்ச நாள் முன்பு இந்தத் தந்திரம் பலித்திருக்கும். ஆனால், இப்பொழுது சித்ரா மசியவில்லை. "உங்கள் உயிரைவிட அவன் உயிர் பெரிதல்ல. அழிவதானால் மூவரும் அழிவோம்" என்றாள்.

"மூவர் அழிவு மட்டும் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் நான் ஆட்சேபிக்கமாட்டேன் சித்ரா! லட்சக்கணக்கான மக்கள் வாழ்க்கையும் என் கையில் சிக்கியிருக்கிறது. உனக்காக மட்டுமின்றி அவர்களுக்காகவும் நான் உயிருடன் இருந்தாக வேண்டும். ஆகவே, அழிவதைப் பற்றிப் பேசாதே, வா" என்று பலவந்தமாக அவளை இழுத்துக் கொண்டு படிகளில் இறங்கிச் சென்றான்.

சித்ராவால் எதுவும் பேச முடியவில்லை. 'லக்ஷக் கணக்கான மக்கள் நன்மை இவரிடம் எப்படிச் சிக்கியிருக்க முடியும்? இவர் என்ன மகாராஜாவா?' என்று ஏதேதோ யோசித்தாள். ஒன்றுக்கும் பதில் கிடைக்காமல் குழம்பிய



மனத்துடன் அவனுடன் சென்றாள். வண்டியைக் காவல் புரிந்தவனை விலை கொடுத்து வாங்குவதில் அஜித் சந்திரனுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை. கொள்ளைக்காரனானதால் பணத்தைக் கண்டதும் வாயைப் பிளந்துவிட்டான். உபாத்தியாயன் அவனிடம் பேசி முடித்ததும் சித்ராவின் கையைப் பிடித்து மிருதுவாகத் தாங்கி வண்டியில் ஏற்றிவிட்டான். வண்டிக்குள் நுழையுமுன் அவனை சித்ரா ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். உபாத்தியாயன் புன்முறுவல் செய்து, "சித்ரா இங்கிருந்த புறப்பட்டு நேராக மாளவ எல்லைக்குச் செல். தோரமானாவின் படை இருக்குமிடத்தில் எனக்குப் பரிச்சயமான பெண்ணொருத்தி இருக்கிறாள். அவள் இருப்பிடம்..." என்று சொல்லிக்கொண்டே வண்டிப்படியில் ஏறி சித்ராவின் காதில் ஏதோ சொன்னான் உபாத்தியாயன். "இப்பொழுது தெரிந்ததா? அந்த இடந்தான். பெண்ணும் அவள்தான். இந்தா, இதை அவளிடம் கொடு" என்று தன் கைவிரலிலிருந்த ஒரு மோதிரத்தையும் அவளிடம் கழற்றிக் கொடுத்தான். "பயப்படாதே. அந்த இடத்தில் உன்னைச் சீக்கிரம் சந்திக்கிறேன்" என்று உறுதி கூறி, "டேய் சீக்கிரம் வண்டியை விடு" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் சித்ராவைப் பார்த்து மன நிதானத்தை இழக்க இஷ்டமில்லாமல் திரும்பி விடுவிடு என்று தர்மசாலைக்குள் நுழைந்துவிட்டான் உபாத்தியாயன். வண்டியை மெள்ளத் திருப்பி ஓசைப்படாமல் வெளியே ஓட்டத் தொடங்கினான் பல்தேவின் வீரன். வண்டி நகருவதை மாடி அறையின் சாளரத்திலிருந்து கவனித்த அஜித் சந்திரன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். வண்டி கண்ணுக்கு மறைந்ததும் அறையின் நடுவிலிருந்த மஞ்சத்தில் நன்றாகக் காலை நீட்டிப் படுத்துக்கொண்டு மிக நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

உபாத்தியாயன் நினைத்தது போலவேதான் எல்லாம் நடந்தது. காலையில் தர்மசாலை அமர்க்களப்பட்டது.

பல்தேவ் வீரர்களை வாயில் வந்தபடி இரைந்து கொண்டிருந்தான். மயக்கம் தெளிந்து எழுந்திருந்த வீரர்கள் அவனுக்குப் பதில் சொல்லமாட்டாமல் விழித்துக் கொண்டு நின்றார்கள். "அந்த உபசேனாதிபதி எங்கே?" என்று கூவினான் பல்தேவ். வீரர்கள் வந்தபோது உபாத்தியாயன் தூங்கிக் கொண்டிருந்தான். இதையறிந்த பல்தேவ் வந்து உபாத்தியாயனை அசக்கி எழுப்பினான். உபாத்தியாயன் வெகு சீற்றத்துடன் எழுந்து, "தூக்கத்திலிருந்து எதற்காக என்னை எழுப்பினாய்!" என்று அதட்டினான்.

அவன் சீற்றத்தைக் கண்டு ஒரு விநாடி மிரண்ட பல்தேவ், "வெளியிலிருந்த வண்டி எங்கே? அடிலன் மகள் எங்கே?" என்று ஆத்திரத்துடன் கூவினான்.

"அடிலன் மகளா! சித்ராதேவியா!" என்று ஆச்சரியப்படுவது போல் துடித்துக்கொண்டு எழுந்திருந்து உபாத்தியாயன் சாளரத்துக்கருகே ஓடி வெளியே பார்த்தான். பிறகு பல்தேவை நோக்கி வந்து, "வண்டிக்கு நீ காவல் வைக்கவில்லையா?" என்றான்.

"வைத்திருந்தேன்," என்று பல்தேவ் பதில் சொன்னான்.

"எங்கே அந்தக் காவலன்?"

"அவனைக் கொண்டு வாருங்கள்" என்று பல்தேவ் ஆணையிட்டான். அவனை யாரும் கொண்டுவர முடியவில்லை.

உபாத்தியாயன் வெறுப்புத் தட்டும் முகத்துடன் அவர்களைப் பார்த்தான். "கொள்ளைக் கூட்டத்தில் ராணுவத்தின் கட்டுப்பாடா இருக்கும்? பணத்துக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கும் வீரர்கள்! ஒரு பெண்ணைக் காவல் புரிய முடியாத கூட்டம்!" என்று கடிந்துகொண்டே, "ஏன் நிற்கிறீர்கள்? பெண் போகும் வண்டியிலே பெரிய பொக்கிஷமும் இருக்கிறதென்பதை மறந்துவிட்டீர்களா?



ஆனால் செம்பு, மரகதம், வைடூரியக்கற்கள் கொண்ட சம்புடத்தைப் பற்றிப் பல்தேவ் உங்களிடம் எங்கே சொல்லியிருக்கப் போகிறான்?" என்று உபாத்தியாயன் பல்தேவ் வீரர்களிடையே மெள்ள விஷயத்தைப் புகுத்தினான்.

பல்தேவின் முகத்தில் அச்சம் குடிகொண்டது. தான் பொக்கிஷத்தை மறைக்க முயன்றது அவர்களுக்கு ருசுவானால் தன் உயிர் ஒரு விநாடியில் பறந்துவிடும் என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே, பேச்சை மறைப்பதற்காக "சீக்கிரம் வண்டியைத் தொடருங்கள். உம்... போங்கள்!" என்று கூச்சலிட்டான். பொக்கிஷம் கைவிட்டுப் போகுமென்ற பயத்தால் பல்தேவும், வீரர்களும் வெகு வேகமாகப் பறந்து கீழே சென்றார்கள்.

அவர்கள் சென்றதும் உபாத்தியாயன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். நான்கு வருஷங்களுக்கு முன்பு ஸ்கந்தகுப்தன் பணமிழந்து கஷ்டப்பட்ட நிலைமையும் சித்ராவைக் காப்பாற்ற வீரனுக்கு லஞ்சம் கொடுத்ததையும் பணத்தாசை காட்டித் தான் பல்தேவை விரட்டியதையும் கோத்துப் பார்த்தான்.

"சாம்ராஜ்யத்தைக் காக்கவும் பணம் தேவை. பெண்ணைக் காப்பாற்றவும் பணம் தேவை. பணத்தின் வலிமை பெரிதுதான்" என்று தர்க்க ரீதியில் தன் எண்ணங்களை உபாத்தியாயன் ஓட விட்டான்.

# 21. ராகுலன் யோசனை

நீலநிற வானவெளியில் மின்னிக் கொண்டிருந்த நக்ஷத்திரங்களுக்குப் போட்டியாக சோணா நதியின் ஜலத்தில் பாடலிபுத்ரத்துக் கோபுர விளக்குகள் பிரதிபலித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. சக்கரவர்த்தி ஸ்கந்தகுப்தன் நோயுற்ற நாலைந்து வருஷங்களாகவே பாடலிபுத்ரத்துக்குப் பழைய யோகம் மீண்டும் அடிக்க ஆரம்பித்து விட்டது. குப்த மன்னர்கள் மிக விஸ்தாரமாகிவிட்ட தங்கள் ராஜ்யத்துக்கு அயோத்தியே சிறந்த தலைநகரமென்று கருதி அதிகார பீடத்தை அங்கு மாற்றிய நாளிலிருந்து பாடலிபுத்ரத்தின் கோபுரங்களிலும் ராஜவிடுதிகளிலும் பெயருக்கு ஓரிரண்டு விளக்குகள்தான் எரியுமே தவிர, இவ்வளவு ஜாஜ்வல்லியமாக அந்த நகரம் சோபித்ததே கிடையாது. பாடலிபுத்ரத்தைப் பிடித்த அதிர்ஷ்டமோ அல்லது குப்தராஜ்யத்தைப் பிடித்த அதிர்ஷ்டமோ, சக்கரவர்த்தி ஸ்கந்தகுப்தன் சமீப காலத்தில் ஆனந்ததேவியின் மகனான தன் தம்பி பூரகுப்தனை அயோத்தியில் இருத்தித் தான் மட்டும் அடிக்கடி பாடலிபுத்ரத்துக்கு வந்து தங்கிக் கொண்டிருந்தான். சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டதன் காரணமாகப் பூரகுப்தன் பெரும்பாலும் அயோத்தியில் தங்கும்படி நேரிட்டதாலும் ஸ்கந்தகுப்தன் தன் தம்பியைப் பலமுறை போர் முனைக்கு அனுப்பி வந்ததாலும் பாடலிபுத்ரத்திலிருந்த ஆனந்ததேவிக்கும் அவள் பிள்ளைக்கும் தொடர்பு இடையிடையே அறுபட்டுக் கொண்டிருந்தது. இதனால் ஆனந்ததேவிக்கு ஏற்பட்ட அல்லல் சொல்லத் தரமல்ல.



பூரகுப்தனை சிம்மாசனத்தில் ஏற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த ஆனந்ததேவியின் சூழ்ச்சிகளை வியாதியென்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டே கத்தரித்து எறிந்து விட்டான் ஸ்கந்தகுப்தன். கூடியவரையில் தாயும் மகனும் சேராதபடி பார்த்துக் கொள்ளவே முக்கியமான ராஜாங்க அலுவல்களுக்கெல்லாம் தம்பியையே அனுப்பினான். ஆனந்ததேவியின் அந்தப்புரமும் வெகு ஜாக்கிரதையாகக் கண்காணிக்கப்பட்டு வந்தது. தனக்கு ராஜமரியாதைகள் ராஜமாதாவுக்குக் கிடைப்பதற்கு மேல் பல மடங்கு அதிகமாகக் கிடைப்பதை ஆனந்ததேவி கவனித்தாள். எங்கு சென்றாலும் பல்லக்கைச் சுற்றி ஆயுதந்தரித்த வீரர்கள் பாரா கொடுத்துச் செல்வதையும், யாருடனும் தான் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காததையும் பார்த்த ஆனந்ததேவி இந்த மரியாதைகளின் சூட்சுமத்தைப் பூரணமாக அறிந்து கொண்டாள். இதற்கு ஏதாவது பரிகாரம் செய்யாவிட்டால் தன் மனக்கோட்டை படுதூளாகி விடும் என்ற முடிவுக்கு வந்தாள். ஆகவே எப்படி ஸ்கந்தகுப்தனை ஏமாற்றித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்பதில் தன் நுண்ணறிவைச் செலுத்தினாள்.

இத்தனை காலமும் ஆனந்ததேவிக்கு ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை. பூரகுப்தனை சிம்மாசனத்தில் வைப்பதற்காகத் தான் செய்த ஏற்பாடுகள் சக்கரவர்த்திக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்பதை ஊகிக்க அவளால் முடியவே இல்லை. ஸ்கந்தகுப்தன் ஒருபுறம் தன்னிடமிருந்து தன் மகனைக் கத்தரிப்பதிலும் மற்றொருபுறம் தோரமானாவைச் சமாளிக்க ஆங்காங்கு சைன்னியங்களை அனுப்புவதிலும் முனைந்திருப்பதைக் கண்டாள். தவிர, தோரமானாவுக்கு எதிராகப் படைகளை அனுப்பிய சமயங்களிலெல்லாம் அவற்றுக்குத் தலைமை வகிக்கத் தன் மகன் பூரகுப்தனையே அனுப்புவதையும் பார்த்தாள். எல்லாவற்றை

யும் கோத்துப் பார்த்ததும் ஆனந்ததேவி சொல்லொணாத்
திகிலை அடைந்தாள். 'திரும்பத் திரும்ப பூரகுப்தன் சைன்
னியங்களைத் தோரமானாவுக்கு எதிராக நடத்திச் சென்றால்
தோரமானா என்ன நினைப்பான்? குப்த ராஜ குடும்பத்
திற்குள் இருந்த பிளவு நீங்கிவிட்டதாகவும் தோரமானாவின்
அழிவை நானும் விரும்புவதாகவும் நினைப்பான். அப்படி
நினைத்தால் ஸ்கந்தகுப்தனோடு பூரகுப்தனையும் சேர்த்து
அழித்துவிடவே தோரமானா தீர்மானிப்பான். தோரமானா
வின் சகாயம் எனக்குக் கிட்டாமல் செய்துவிடவே ஸ்கந்த
குப்தன் இம்மாதிரி நடந்து கொள்ளுகிறான்' என்று ஆனந்த
தேவி நினைத்தாள். 'அப்படியானால் எனக்கும் தோரமானா
வுக்கும் மலைவாசலில் நடந்த சம்பாஷணை யாருக்காவது
தெரிந்திருந்து, ஸ்கந்தகுப்தனுக்கு அந்தத் தகவல் எட்டியிருக்க
வேண்டும். அப்படி யார் சொல்லியிருப்பார்கள்? உதயன்
மலைவாசலிலேயே இருக்கிறான். அவன் சொல்லியிருக்க
முடியாது. நாங்கள் பேசுகையில் உபாத்தியாயனோ மரண
மூர்ச்சையில் இருந்தான்; அவனுக்குத் தெரிந்திருக்க நியாய
மில்லை. ஒருவேளை தெரிந்திருந்தாலும் அவன் சொல்ல
வும் நியாயமில்லை. ஏனென்றால் அவன்தான் சக்கரவர்த்தி
யைக் கைவிட்டுத் தோரமானாவிடம் சேர்ந்துகொண்டு
விட்டானே! சக்கரவர்த்திக்கு அனுகூலமான செய்தியை
அவன் ஏன் சொல்லவேண்டும்?' என இப்படிப் பலவிதமாக
யோசனை செய்துகொண்டே ஆனந்ததேவி தன் சதிச்
செயலை முன்னைவிடத் தீவிரமாகச் செய்வதற்கான
ஏற்பாடுகளில் முனைந்தாள். அவள் ஏற்பாடுகளைக்
கவனிக்கத்தான் அடிக்கடி சக்கரவர்த்தி ஸ்கந்தகுப்தனும்
பாடலிபுத்ரத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தான்.

சக்கரவர்த்தி அடிக்கடி வருகிறார் என்று ஏற்பட்டதால்
பாடலிபுத்ரத்தின் அலங்காரமும் சிறிது அபிவிருத்தியடையத்



தொடங்கியது. நகரப் பிரவேச வாசல்களில் யானைப் படை
களும் குதிரைப் படைகளும் அதிகப்படுத்தப்பட்டன. கோபுர
விளக்குகளுக்கும் எண்ணெய் அதிகமாக அனுமதிக்கப்
பட்டது. அந்த விளக்குகள் பிரதிபலித்ததால் நெருப்புப்
போல் அலை வீசிக் கொண்டிருந்த சோணா நதியின் ஜலப்
பரப்பைக் கவனித்துக்கொண்டிருந்தான் சக்கரவர்த்தி ஸ்கந்த
குப்தன். சக்கரவர்த்தியின் பள்ளியறைச் சாளரத்திலிருந்து
இரவில் பார்த்தால் சோணா நதி கண் கொள்ளாக் காட்சி
யாயிருக்கும். தொலைவிலிருந்து கண்ணுக்குக் கிடைத்த அந்த
விருந்தும் சரி, காஷ்மீரப் பட்டில் இலவம் பஞ்சடைத்த
பள்ளியறை ஆசனத் தலையணைகள் அளித்த சுகமும் சரி,
ஸ்கந்தகுப்தன் மனத்திற்கு எந்தவிதச் சாந்தியும் அளிக்க
வில்லை.

சோணா நதியில் பிரதிபலித்த பாடலிபுத்ரத்தின்
அழகைக் காணக் காண அந்த நகரத்தை நிர்மாணித்த பெரு
மக்களின் பெருமையும், இன்று தான் இருக்கும் சிறுமையும்
அவன் மனத்தில் பெரும் துயரை உண்டாக்கிக் கொண்டிருந்
தன. கேவலம், ராஜ்ய ஆசையால் தன் தம்பியும், சிற்றன்னை
யும் உடைக்க முடியாத குப்தராஜ்யப் பெருமையையே
உடைத்து வருகிறார்களே என்ற ஏக்கமே ஸ்கந்தகுப்தன் கண்
களில் நிரம்பியிருந்தது. சாளரத்துக்கருகிலிருந்த ஆசனத்தில்
சாய்ந்து கொண்டு பாதங்களை எதிரே இன்னொரு பீடத்தின்
மேல் நீட்டிக்கொண்டிருந்த ஸ்கந்தகுப்தன் கூர்ந்து சோணா
நதியின் அலைகளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

கவரி வீசிக்கொண்டிருந்த தாஸி, ஸ்கந்தகுப்தனுக்கு
அருகில் குனிந்து, "என்ன பார்க்கிறீர்கள் மகாராஜா!" என்று
மெள்ளக் கேட்டாள்.

"மௌரியர்கள் பெருமையையும், குப்தர்கள் சிறுமை
யையும் பார்க்கிறேன்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

தாஸி விழித்தாள். ஸ்கந்தகுப்தன் அத்தனை வியாதியிலும் புன்முறுவல் செய்தான். "உனக்குப் புரியவில்லையா பெண்ணே! இப்படி வா. அந்த ஸ்வர்ணா நதியைப் பார். எவ்வளவு கோபுர விளக்குகள் தெரிகின்றன" என்று அவளை அழைத்துச் சுட்டிக் காட்டினான்.

"ஆம். தெரிகின்றன மகாராஜா, அதற்கென்ன?" என்று தாஸி கேட்டாள்.

"அவற்றை ஏற்றி வைத்தது யார் தெரியுமா?"

"நன்றாகத் தெரியுமே, கோபுர வேலைக்காரர்கள்தான்."

"இல்லை, இல்லை. நீ தெரியாமல் பேசுகிறாய். இவற்றை ஏற்றி வைத்தவர்கள் மௌரியர்கள்."

சக்கரவர்த்திக்கு வியாதி முற்றி ஏதாவது உளறுகிறாரோ என்று தாஸி நினைத்தாள். "எனக்குப் புத்தி மாறாட்டமில்லை பெண்ணே. இந்த விளக்குகள் ஒவ்வொரு நாளும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்படியாக மௌரிய மன்னர்கள் செய்து கொண்டிருந்தார்கள். நான் அவற்றைப் புறக்கணித்து விட்டேன். நானும் என் தம்பியும் வேறு முக்கிய வேலைகளில் இறங்கியிருப்பதால் வெளி நாடுகள் வரை வீசிக் கொண்டிருந்த பாரதத்தின் தீப ஒளியைக் காப்பாற்ற எங்களுக்கு அவகாசமில்லை. இந்த மாதிரி எவ்வளவோ நகரங்கள், எவ்வளவோ தீபங்கள் எங்களால் புறக்கணிக்கப்பட்டன. நானாவது இளம் பிராயத்திலிருந்தே யுத்தரங்கத்திலிருந்து விட்டேன். தம்பி பூரகுப்தனாவது இவற்றைக் கவனித்துக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், அவனுக்கு இதற்கேது அவகாசம்? அவ்வளவு ஒத்துழைப்பு தம்பியிடமிருந்து கிடைத்திருந்தால், நான் யுத்தரங்கத்திலிருந்த சமயத்தில் தம்பி நாட்டைக் கவனித்து வலுப்படுத்துவதில் முனைந்திருந்தால், போதிய உதவியைப் போர் முன்னணிக்கு



அவன் அனுப்பிக் கொண்டிருந்தால், ஹூணர்களை இந்தப் பாரத நாட்டிற்குள் கால் வைக்க விட்டிருப்பேனா?" என்று கூறிய ஸ்கந்தகுப்தன் அதிகமாகப் பேசிய அதிர்ச்சியில் மீண்டும் ஆசனத் தலையணையில் சாய்ந்தான். தாஸி அவன் முகத்தில் பன்னீரைத் தெளித்தாள். அந்த தாஸிக்குத் தெரியாத ராஜாங்க ரகசியங்கள் எதுவுமில்லை. ஆகவே, ஸ்கந்தகுப்தன் உள்ளத்திலிருந்து எழுந்த வார்த்தைகளாலும் வீரனான சக்கரவர்த்தி சக்தியற்றுச் சாய்ந்திருந்த கோலத்தாலும், தாஸியின் கண்களிலும் நீர்த் துளிகள் உதிர்ந்தன.

தாஸி என்ற வடமொழிச் சொல்லுக்கு சேவகி அல்லது பணிமகள் என்றுதான் அர்த்தம். இவர்கள் நடத்தையில் எந்தவிதப் பிசகும் சொல்லமுடியாது. ஆகையால் ஆதிகால மன்னர்கள் இவர்களிடம் தீவிர நம்பிக்கை வைத்திருந்தார்கள். இத்தகைய தாஸிகள் தங்கள் உயிரையும் தங்கள் குழந்தைகளின் உயிரையும் கொடுத்துக்கூட மன்னர்களைக் காப்பாற்றிய கதைகள் இந்திய சரித்திரத்தில் ஏராளமாகக் காணக் கிடக்கின்றன. ஆகவே, சக்கரவர்த்தி உள்ளம் திறந்து தாஸியிடம் பேசியது பற்றி ஆச்சரியப்பட வேண்டிய அவசியமே இல்லை.

இப்படித் தாஸியும் தரணியாளும் மன்னனும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் காவலன் உள்ளே நுழைந்து, "பிரதம மந்திரி சக்கரவர்த்தியிடம் பேட்டி கேட்கிறார்" என்று அறிவித்தான். 'உள்ளே வரச் சொல்' என்ற ஆக்ஞை கிடைக்கவே ஆசனத்துக்குப் பின் சென்று பழையபடி கவரி வீசத் தொடங்கினாள்.

பிரதம மந்திரி உள்ளே நுழைந்தார். அவருக்குப் பின் ஈட்டி தாங்கிய இரு வீரர்களுக்கிடையில் ஒரு கைதியும் வந்தான். பிரதம மந்திரி, சக்கரவர்த்திக்கருகில் வந்து வணங்கி, "மகாராஜா! இவன் பெயர் ராகுலன். அடிலனுக்கு

மாப்பிள்ளையாக ஏற்பட்டிருக்க வேண்டியவன்" என்றார். ஸ்கந்தகுப்தன் தன் கண்களைச் சற்று உயர்த்தி ராகுலனைப் பார்த்தான்.

சக்கரவர்த்தியின் கண்கள் தன்னை நன்றாக ஊடுருவி ஆராய்வதைக் கண்ட ராகுலன் நடுங்கினான். அடுத்த விநாடி சக்கரவர்த்தி கேட்ட கேள்வியும் அதற்குப் பிரதம மந்திரி சொன்ன பதிலும் அவன் திகிலை அதிகப்படுத்தின.

"அடிலனா?" என்றான் ஸ்கந்தகுப்தன்.

"ஆம் மகாராஜா! மலைவாசல் குடிகளைத் துன்புறுத்தி, இல்லாத அக்கிரமங்களைச் செய்துவந்தானே அதே அடிலன் தான்" என்று பதில் சொன்னார் பிரதம மந்திரி.

சக்கரவர்த்தி மீண்டும் சிறிது நேரம் பேசவில்லை. பிறகும் மந்திரியையே விசாரித்தார். "இவன் எதற்காகப் பாடலிபுத்ரம் வந்தான்?"

இந்தக் கேள்விக்கு ராகுலனே பதில் சொல்ல ஆரம்பித் தான். "மகாராஜா பாடலிபுத்ரத்துக்குள் நான் மாத்திரம் வரவில்லை. உங்கள் ஜன்ம விரோதியான இன்னொருவனும் வந்திருக்கிறான்" என்றான்.

ராகுலன் வார்த்தைகள் அறையிலிருந்த எல்லோருக்குமே சிரிப்பூட்டின. 'நீ ஏன் வந்தாய்' என்று கேட்டால், 'இன்னொருவனும் வந்திருக்கிறான்' என்று சொல்வதன் அர்த்தம் என்னவென்று சக்கரவர்த்தியைத் தவிர வேறு யாருக்கும் புரியாதிருந்தாலும் பதிலின் விசித்திரத்தைக் குறித்து எல்லோர் இதழ்களிலும் சிறிது புன்முறுவல் படர்ந்தது.

ஆனால், ராகுலன் காரணமில்லாமல் அவ்விதம் பதில் சொல்லவில்லை. இயற்கையாகவே பயங்கொள்ளியான அவன் ஹூணர்களின் பரம வைரியான ஸ்கந்தகுப்தன் சமூகத்தில் நிற்கும்போது தன் கதி என்ன ஆகுமோ என்று



நடுங்கிக் கொண்டிருந்தான். கருணை என்பதை லவலேசமும் அறியாத அவன் மனம் சக்கரவர்த்தி தனக்குக் கருணை காட்டக்கூடும் என்றோ, கருணை காட்டாவிட்டாலும் தன்னை ஹிம்சிக்காமலாவது இருப்பார் என்றோ எண்ண மறுத்தது. ஹூணர்கள் மலைவாசல் குடிகளை நடத்திய முறையிலேயேதான் குப்தர்களும் ஹூணர்களை நடத்து வார்கள் என்று ராகுலன் திட்டமாக முடிவு கட்டிக் கொண்டான். ஆகையால், ஒரு திருடன் மற்றொரு திருடனைக் காட்டிக்கொடுக்கும் முறையில் 'நான் மட்டும் வரவில்லை' என்ற ஓர் உண்மையைச் சக்கரவர்த்தியின் சன்னிதானத்தில் வீசி வைத்தான்.

ராகுலன் பதிலைக் கேட்டதும் ஆயிரம் கேள்விகளைக் கேட்கப் பிரதம மந்திரியின் நாக்கு துடித்தது. ஆனால், சக்கரவர்த்தியின் முன்பு அவருடைய உத்தரவின்றி யாரும் பேசக்கூடாது என்ற முறையை உத்தேசித்து பிரதம மந்திரி மௌனமாக உட்கார்ந்திருந்தார். சக்கரவர்த்தியே ராகுலனைக் கேள்விகள் கேட்டார்:

"அந்த இன்னொருவன் யார்?"

"எனக்குப் பெண்ணைக் கொடுப்பதாக வரவழைத்து இந்த கதிக்குக் கொண்டுவந்த அடிலன்தான்."

சக்கரவர்த்தியின் இதழ்களிலும் புன்சிரிப்பு சற்று ஓடியது. "உன்னுடைய இந்த கதிக்கு அடிலன் என்ன செய்வான்? பெண்ணைக் கொடுத்து உன்னை நல்ல ஸ்திதியில் வைக்க அவனுக்கு இஷ்டந்தான். ஆனால் சரியான சமயத்தில் மலைவாசல் வில்லவர் புரட்சி செய்வார் களென்றோ, மாளிகையைக் கொளுத்துவார்களென்றோ அடிலனுக்கு எப்படித் தெரியும்?" என்றார் சக்கரவர்த்தி.

ஸ்கந்தகுப்தனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டு ராகுலன் மட்டுமல்ல, பிரதம மந்திரி கூட அதிர்ச்சி அடைந்து

போனார். மலைவாசல் புரட்சி பெரிய யுத்தமாயிருந்தால் பிரதம மந்திரிக்குத் தகவல் எட்டியிருக்கும். ஏதோ அடிலன் மேல் ஜனங்களுக்கிருந்த வெறுப்பின் காரணமாகவும், தோர மானாவின் காரணமாகவும் ஏற்பட்ட நிகழ்ச்சி அது. தவிர, தன் அதிகார எல்லையில் நடக்கும் நிகழ்ச்சியையும் வெளியே போகவொட்டாமல் தோரமானா சாமர்த்தியமாக மூடி வைத்திருந்தான். ஆகையால் அச்சிறு புரட்சி நடந்தது யாருக்கும் தெரியாமலே இருந்தது. அதை சக்கரவர்த்தி வாய்விட்டுச் சொன்னதும் பிரதம மந்திரிக்குக் கூடச் சிறிது மனஸ்தாபமாகவே இருந்தது. சக்கரவர்த்தி இத்தகவலைத் தம்மிடம் கூடச் சொல்லாமல் வைத்துக் கொண்டிருக்கிறாரே என்ற துக்கம் பிரதம மந்திரியின் மனத்தில் படர்ந்தது. அந்த சாயை முகத்திலும் தோன்றவே, ஸ்கந்தகுப்தன் அவரைச் சமாதானப்படுத்த, "இது ஒரு பெரிய புரட்சியல்ல மந்திரி, அடிலன் வெகு நாட்களாக அவர்களைத் துன்புறுத்தி வந்தான். வில்லவரே அவனை ஒழிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஹூணர்களிடையே பிரக்யாதி பெற்றுவிட்ட தோரமானா அடிலனை ஒழித்தால் தான் தனக்குத் தலைமைப் பதவி கிடைக்கும் என்று நினைத்தான். ஆகவே, வில்லவரைக் கிளப்பிவிட்டான். ஒரு நாளிரவு அடிலன் மாளிகையை வில்லவர் சூழ்ந்து கொளுத்த ஆரம்பித்தார்கள். அந்த இரவு ராகுலன் கல்யாணத்துக்கு முதல் நாளிரவாக வந்து சேர்ந்தது" என்று விவரித்தான்.

எங்கோ இருக்கும் மலைவாசலில் நடந்த நிகழ்ச்சி களைப் படுக்கையிலிருக்கும் ஸ்கந்தகுப்தன் இவ்வளவு திட்ட மாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பதை நினைக்க ராகுலனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தனக்குத் தெரிந்த தகவல்களையும் சொல்லி, சக்கரவர்த்தியின் தயவை சம்பாதிக்க எண்ணி, மேற்கொண்டு பேசினான்: "மகா



ராஜா! எனக்குக் கல்யாணமாகாததில் வருத்தமே இல்லை. இந்த அடிலன் தங்களுக்கு எவ்வளவு தீங்கிழைத்திருக்கிறா னென்று எனக்குத் தெரியும். தவிர அந்தப் பெண்ணும் ஒழுங்கானவளல்ல. அவளுக்கும், ஏற்கெனவே அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த உபாத்தியாயனுக்கும் தொடர் பிருக்கிறதாகப் பின்னால் தெரிந்து கொண்டேன். வில்லவர் வீட்டைக் கொளுத்தும் போது அந்த உபாத்தியாயன் வந்து எங்களைக் காப்பாற்றினான். உண்மையில் அவன் எங்களைக் காப்பாற்ற வரவில்லை. என் மனைவியாக வாய்க்க இருந்த அந்தப் பிசாசைதான் காப்பாற்ற வந்தான். வில்லவரை விரட்டியடித்த பின் வெகுநேரம் அவள் அவனோடு தோட்டத்தில் போய் பேசிக் கொண்டிருந்தாள். மறுநாள் கல்யாணமாக வேண்டியவள் நடந்து கொள்ளும் முறையா இது?" என்றான் ராகுலன்.

சக்கரவர்த்தி சிரித்தார். பிரதம மந்திரி என்ன சொல்வ தென்று தெரியாமல் மௌனம் சாதித்தார். அடுத்தபடியாக சக்கரவர்த்தி ஹாஸ்யத்திலிறங்கியபோது பிரதம மந்திரிக்குத் தூக்கியே போட்டது என்றுதான் சொல்ல வேண்டும். "அந்தப் பெண்ணுக்காகத்தானே உபாத்தியாயன் குப்த ராஜ்யத்துக்குக் கூடத் துரோகம் செய்து தோரமானா வுடன் சேர்ந்து கொண்டான். பெண்களிடம் அவனுக்குப் பைத்தியம்; பெண்களுக்கும் அவனிடம் பைத்தியம்" என்றார் சக்கரவர்த்தி.

"மகாராஜா உத்தரவு கொடுத்தால் அந்த அயோக் கியனைத் தங்களிடம் சிக்கவைக்க உபாயம் சொல்லுகிறேன்" என்றான் ராகுலன்.

"என்ன உபாயம்?"

"முதலில் அடிலனைப் பிடித்து இங்கே சிறையிலடை யுங்கள்; அவன் பெண்ணுக்குத் தகப்பன் மேல் உயிர்.

தகப்பனைக் காட்டிப் பெண்ணைக் கொண்டு வரலாம். பெண்ணைக் காட்டி உபாத்தியாயனை இழுக்கலாம். பிறகு எல்லோரையும் சேர்த்துக் கூண்டோடு கைலாசமனுப்ப லாம்,” என்று ராகுலன் யோசனை சொன்னான்.

தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ராகுலன் எவ்வளவு பேரை பலி கொடுக்கத் தயாராயிருக்கிறான், எவ்வளவு பாதகத்தைச் செய்யத் துணிகிறான் என்பதை நினைத்த சக்கரவர்த்தி கூடப் பிரமித்தார்— ‘இருக்கட்டும். இவன் எவ்வளவு தூரம் போகிறான் பார்க்கலாம்’ என்று. “அடிலன் இப்பொழுது எங்கே?” என்று விசாரித்தார். ராகுலன் வாய் திறந்து பதில் சொல்லுமுன் சக்கரவர்த்தியின் தலைப் பக்கத்திலிருந்த கதவு திறந்தது. பூரகுப்தன் உள்ளே நுழைந்தான்.

# 22. ரகசிய ஓலை

பூரகுப்தன் பிரவேசம் சக்கரவர்த்திக்கே வியப்பை விளைவித்ததென்றால், அறையிலிருந்த மற்றவர்களின் மனோநிலையை விவரிக்க வேண்டிய அவசியமேயில்லை. பிரதம மந்திரி தமது கண்களை அகல விரித்துப் பூரகுப்த னைப் பிரமிப்புடன் நோக்கினார். கவரி வீசிக் கொண்டிருந்த தாஸியின் பார்வையில் பிரமிப்போடு சந்தேகமும் பலமாகப் படர்ந்தது. ராகுலனுக்குக் காவலாக நின்ற வீரர்கள் மித மிஞ்சிய திகைப்பால் சக்கரவர்த்தியின் தம்பிக்கு தலை வணங்கக்கூட மறந்து இரண்டு சிலைகளைப் போல் நின்று விட்டார்கள். பூரகுப்தன் பாடலிபுத்ரத்துக்கு வந்திருக்கிறான் என்ற தகவல் அந்த நிமிஷம் வரை யாருக்கும் தெரியாதது தான் இத்தனை பிரமிப்புக்கும் காரணம்.

தம்பியைப் பார்த்த சக்கரவர்த்தியின் மனத்தில் என் னென்னவோ ஓட ஆரம்பித்தன. அயோத்தியில் இருக்கும்படி தான் கட்டளையிட்டிருக்க அதை மீறி தம்பி எதற்காக பாடலிபுத்ரத்துக்கு வந்தான்? ராஜப் பிரதிநிதி நகரத்துக்குள் நுழையும்போது சப்திக்கும் டங்கா முதலிய வாத்தியங்களின் சப்தம் இவன் நுழையும்போது ஏன் சப்திக்கவில்லை? வேறு ஏதோ காரியமாக மர்மமாக வந்திருந்தானானால் என்னைப் பார்க்க இங்கு ஏன் வருகிறான்? இந்த மாதிரிப் பல கேள்விகள் சக்கரவர்த்தியின் மனத்தில் எழுந்தன. ஆனால், மனத்தில் எழுந்த எண்ணங்கள் எள்ளளவும் முகத்தில் பிரதிபலிக்காமலே ஸ்கந்தகுப்தன் தன் தம்பியை வரவேற்று, “எப்பொழுது வந்தாய்? இப்படி உட்கார்” என்று தன் பக்கத்திலிருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான்.

பூரகுப்தனும் ஸ்கந்தகுப்தனைப் போல் நல்ல ஆஜானுபாகுவாய்த்தானிருந்தான். சக்கரவர்த்திக்கு நாலைந்து பிராயங்களே சிறியவனாதலால் ஸ்கந்தகுப்தனுக்கும் அவனுக்கும் உயரம், பருமன், முகஜாடை முதலியவற்றில் அதிக வித்தியாசம் தெரியவில்லை. ஆனால், அண்ணன் தம்பி இருவர் கண்களிடை இருந்த வித்தியாசம் மட்டும் அளவிட முடியாததாயிருந்தது. ஸ்கந்தகுப்தன் பார்வையில் யாரையும் ஊடுருவிப் பார்க்கவல்ல தீக்ஷண்யமும் வீரமும் செறிந்து நின்றன. பூரகுப்தன் பார்வையில் அதிக சலனமும், ஒரு பயமும், தீவிர சந்தேகமும் கலந்து நின்றன. ஸ்கந்தகுப்தன் கண்களில் உலக விவகாரங்களையெல்லாம் தாண்டிச் செல்லும் ஒரு தீர்க்கதரிசனம் இருந்தது. பூரகுப்தன் பார்வையில் கருமித்தனமும் லௌகிக விவகாரங்களில் ஆசையும் பட்டவர்த்தனமாகப் பிரதிபலித்தன.

இப்படி மாறுபட்ட குணங்களையுடைய அந்த அண்ணன் தம்பிகளிருவரையும் பிரதம மந்திரி ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். தன் வருகை எத்தகைய அதிர்ச்சியை விளைவிக்கும் என்பதைப் பூரகுப்தனும் அறியாமலில்லை. சக்கரவர்த்தி மேலுக்கு எந்த உணர்ச்சியையும் காட்டாமலிருந்தாலும் அவருடைய மனம் மிக ஆழமானது என்பதையும், தன்னுடைய அபிப்பிராயங்களை நொடிப் பொழுதில் எடை போட்டுவிடக் கூடிய திறமை அவருக்கு உண்டு என்பதையும் பூரகுப்தன் உணர்ந்திருந்தமையால் அண்ணன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்ததும், தான் ரகசியமாக பாடலிபுத்ரத்துக்கு வரவேண்டிய அவசியத்தைப் பிரஸ்தாபிக்க ஆரம்பித்தான். "அவசர ராஜாங்க வேலையாக வரவேண்டியிருந்தது. தவிர என் வருகையை ரகசியமாகவும் வைத்திருக்க அவசியமிருந்தது" என்று பேசத் தொடங்கிய பூரகுப்தனைப் பிரதம மந்திரி இடைமறித்து, "என்ன மர்மமாகத் தாங்கள் வந்தாலும்



கோட்டை வாசலிலுள்ள டமாரங்களாவது முழங்கியிருக்க வேண்டும்" என்று கூறினார்.

"நான் வருமுன்பே தூதர்களை அனுப்பிக் கோட்டை வாசல் டமாரமோ, வாத்தியங்களோ முழங்கக் கூடாதென எச்சரித்து விட்டேன்" என்று விளக்கினான் பூரகுப்தன்.

டமாரங்கள் சப்திக்காத காரணத்தைத் தெரிந்துகொண்ட பிரதம மந்திரி, பூரகுப்தன் வருகைக்கான ரகசியத்தையும் அறிய விரும்பினார். இருந்தாலும் சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக அயோத்தியில் ராஜ்ய நிர்வாகம் செய்து வரும் பூரகுப்தனை நேரடியாகப் பிரதம மந்திரி கேள்விகள் கேட்க முடியாதல்லவா? ஆகவே, சம்பிரதாயமாகப் பேச்சைக் கிளப்பி, "அப்படியா சமாசாரம். அதனால்தான் தங்கள் வருகை அவ்வளவு மர்மமாக இருந்திருக்கிறது. தாங்கள் வந்து வெகு நேரமாகிறதோ?" என்று கேட்டார்.

"அதிக நேரமாகவில்லை. வந்ததும் என் தாயாரைப் பார்த்துவிட்டு, நேராக இங்குதான் வருகிறேன்" என்று பூரகுப்தன் தாயாரைப் பார்த்துவிட்டு வந்ததாகச் சொன்னதும், கவரி வீசிக்கொண்டிருந்த தாஸியின் கண்களும் ஒரு விநாடி மின்னல் வேகத்தில் சந்தித்துப் பழைய நிலையை அடைந்தன. மேலே ஏதோ பேசப் போன பூரகுப்தனைக் கையமர்த்தி நிறுத்திய சக்கரவர்த்தி பிரதம மந்திரியை நோக்கி, "முதலில் இந்த ஹூணன் விஷயத்தை விசாரிப்போம்" என்றார்.

மற்றவர்களோடு பூரகுப்தனும் ராகுலனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். சக்கரவர்த்தி ராகுலனை நோக்கிக் கேட்டார்: "நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே! அடிலன் இப்பொழுது எங்கிருக்கிறான்?"

"என்னுடன் பத்து வீரர்களை அனுப்புங்கள்! அடிலனை இன்னும் அரை ஜாம காலத்தில் தங்கள்

சந்நிதானத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறேன்'' என்றான் ராகுலன்.

சக்கரவர்த்தி அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமலே பிரதம மந்திரியை நோக்கி, "மந்திரி, இவனுடன் சென்று அடிலனைக் குப்த ராஜ்ய விருந்தினர்களுக்கு அளிக்கப்படும் சகல மரியாதைகளுடன் அழைத்து வந்து அரண்மனை அதிதிகிருகத்தில் இருக்கச் செய்யுங்கள். இந்தக் கைதியை மட்டும் சிறையில் தள்ளுங்கள். இன்னொரு நாள் அவகாசப் பட்டால் விசாரிக்கிறேன்'' என்றார்.

சக்கரவர்த்தியின் தீர்ப்பைக் கேட்ட ராகுலன் கதற ஆரம்பித்தான். "மகாராஜா! அடிலன் உங்கள் பரம விரோதி. அடிலனுக்கு விருந்து; எனக்குச் சிறைவாசமா?'' என்று கூவினான். சக்கரவர்த்தி மேற்கொண்டு எதுவும் பேசாமல் ராகுலனை வெளியே அழைத்துச் செல்லும்படி சைகை செய்யவே வீரர்கள் அவனை இழுத்துச் சென்றனர். சக்கர வர்த்தியின் கட்டளையை நிறைவேற்ற எழுந்த பிரதம மந்திரி சிறிது ஏதோ யோசித்து ஆசனத்தின் அருகிலே நின்றார். "என்ன மந்திரி?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"இல்லை. அடிலனை ராஜாங்க விருந்தினனாக உபசரிக்க உத்தரவிட்டீர்கள்...'' என்று இழுத்தார் பிரதம மந்திரி.

"ஆமாம். அதற்கென்ன?''

"அவன் எவ்வளவோ ஜனங்களை ஹிம்சித்திருக் கிறானே.''

"உண்மைதான் மந்திரி. ஆனால், அவன் இப்பொழுது தோரமானாவின் எதிரி.''

சக்கரவர்த்தி சொல்வதன் அர்த்தம் மெள்ள மெள்ளப் புரிய ஆரம்பித்தது பிரதம மந்திரிக்கு. சக்கரவர்த்தி தமது அபிப்பிராயத்தை நன்றாக விவரித்தார். "தோரமானா குப்த ராஜ்யத்தின் எதிரி. அடிலன் தோரமானாவுக்கு எதிரி! ஹூண ராஜ்யத்தை ஹிந்துஸ்தானத்தில் ஸ்தாபிக்கும் சாமர்த்தியம் ஹூணர்களில் தோரமானா ஒருவனுக்குத்தான் உண்டு. அடிலனை நாம் தோரமானாவுக்கு எதிராக உபயோகித்தால் ஹூணர்களிடையே பிளவு உண்டாக்கித் தோரமானாவைப் பலவீனப்படுத்தலாம். தோரமானாவின் கை சளைத்தால் ஹூண ராஜ்யத்தைப் பாரத நாட்டில் ஏற்படுத்துவது பகற் கனவுதான். அடிலன் நமக்கு இப் பொழுது சிறந்த ஆயுதம். அதை நன்றாகப் பாதுகாப்பது நமது கடமை'' என்றான் ஸ்கந்தகுப்தன்.



சக்கரவர்த்தியின் தீர்க்க தரிசனத்தை வியந்த பிரதம மந்திரி, "அப்படியானால் இந்த ராகுலனை எதற்காகச் சிறையில் தள்ளச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினார்.

"இவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பேரை பலியிடத் தயாராயிருந்தான் என்பதைத்தான் அவன் வாயாலேயே கேட்டோமே. இப்பேர்ப்பட்ட அயோக்கியனை குப்த ராஜ்யத்தில் சுதந்திரமாக உலாவ விடுவது தவறு. தவிர இவன் அடிலனை நம்மிடம் காட்டிக் கொடுக்கத் தயாராகயிருக்கும் போது சந்தர்ப்பம் கிடைத்தால் தோரமானாவிடம் காட்டிக் கொடுக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? நமக்கோ அடிலன் தற்சமயம் அரிய சொத்து. அந்தச் சொத்தை அழிக்கும் நோக்கமுள்ள யாரை யும் சிறிது கட்டுப்படுத்தியே வைக்க வேண்டும்'' என்றான் ஸ்கந்தகுப்தன்.

பிரதம மந்திரி சக்கரவர்த்தியின் உத்தரவை நிறை வேற்றச் சென்றார். அவர் அறைக்கு வெளியே சென்றதும், "தம்பி! தக்ஷசீலத்தில் அஜித் சந்திரன் கொடுத்த இருபதி னாயிரம் ஸ்வர்ணங்கள் என்னவாயின?'' என்று பூ

குப்தனை விசாரித்தான் ஸ்கந்தகுப்தன். இடியை எடுத்து வீசியிருந்தால்கூட அவ்வளவு அதிர்ச்சியடைந்திருக்க மாட்டான் பூரகுப்தன். சக்கரவர்த்தியின் கேள்வி அவனை அப்படியே நிலைகுலையும்படியாக அடித்து விட்டது.

"இருபதினாயிரம் ஸ்வர்ணங்களா!" என்று உளறினான் பூரகுப்தன்.

"ஆம்; தக்ஷசீலத்தில் நாம் குவித்திருந்த படைகளைத் திருப்பி அழைத்துச் செல்ல உபாத்தியாயன் கொடுத்த பணம்" என்று கடுமையாகக் கேட்டான் ஸ்கந்தகுப்தன்.

"ஆமாம், கொடுத்தான். இதைப் பற்றி உங்களிடம் சொல்லத்தான் இவ்வளவு அவசரமாகவும் ரகசியமாகவும் வந்தேன். ஆனால், உங்களுக்கு அதைப்பற்றி..." என்ற பூர குப்தன் வார்த்தைகளை இடையில் வெட்டி, "முன்னாடியே தெரிந்துவிட்டதேயென்று ஆச்சரியப்படுகிறாயா! பூரகுப்தா! முடிவாகச் சொல்கிறேன் கேள், இன்னும் மீறினால் ஐந்து வருஷம் நான் உயிருடன் இருப்பேன். பிறகு நீதான் இந்தக் குப்த ராஜ்யத்துக்கு சக்கரவர்த்தி! அகண்ட சாம்ராஜ்யத் துக்கு சக்கரவர்த்தியாக இருப்பவன் பொய் சொல்லக் கூடாது. நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். எதிரிகள் கொடுக்கும் ஸ்வர்ணங்களை நீ சேர்த்து வைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை. பொக்கிஷத்தில் ஸ்வர்ணங் கள் அதிகம் சேர்ந்தால் நான் குறைத்திருக்கும் தங்க மதிப்பை ஏற்றலாம். ஆனால், பின்னால் சக்கரவர்த்தியாகப் போகும் நீ அந்தப் பதவிக்குத் தகுதியை முதலில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

தம்பிக்கு இந்தப் புத்திமதி காதில் ஏறியதாகத் தெரிய வில்லை. எங்கோ தக்ஷசீலத்தில் நடந்தது, படுக்கையாகப் படுத்திருக்கும் சக்கரவர்த்திக்கு எப்படித் தெரிந்தது என்ற ஆராய்ச்சியிலே அவன் மனம் இறங்கியது. தன்மேல் வேவு



பார்க்க சக்கரவர்த்தி ஆள் வைத்திருக்கிறாரோ என்றும் அஞ்சினான். இதற்கெல்லாம் தாயாரைக் கலந்து பேச வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வரவே, "அண்ணா! தக்ஷசீலத்தில் இருபதினாயிரம் ஸ்வர்ணங்கள் வாங்கிய விஷயந்தான் தங்களுக்குத் தெரிந்துவிட்டதே. இதோடு நாம் பலமுறை படைகளைக் குவித்துத் தோரமானாவிடமிருந்து பெற்ற அத்தனை ஸ்வர்ணங்களையும் சேர்த்தால் ஐந்தரைக் கோடி ஸ்வர்ணங்களாகின்றன. நாட்டில் செலாவணி யிலிருக்கும் ஸ்வர்ண நாணயத் தொகையையும் சேர்த்தால் ஸ்வர்ண மதிப்பை பழைய தரத்துக்கு உயர்த்தி விடலாம்" என்று சொல்லிக்கொண்டே ஆசனத்திலிருந்து எழுந்தான் பூரகுப்தன்.

இந்தக் கணக்குகளை ஸ்கந்தகுப்தன் காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை. தோரமானாவை எப்படி ஒழிக் கலாம் என்பதிலேயே அவன் புத்தி வேலை செய்து கொண் டிருந்தது. ஆகவே, தம்பியை நோக்கி, "இதையெல்லாம் உன் காலத்தில் வைத்துக்கொள் தம்பி! இந்த ஸ்வர்ணத்தில் சைன்னியம் சேர்க்க எவ்வளவு தொகை கொடுப்பாய்?" என்று கேட்டான் ஸ்கந்தகுப்தன்.

"சைன்னியம் சேர்ப்பதற்கே ஸ்வர்ணங்களைச் செலவழித்து விட்டால் தங்கத்தின் மதிப்பை எப்பொழுது உயர்த்துவது?" என்று பூரகுப்தன் வினவினான்.

"எதிரிகள் பாரத நாட்டிலிருந்து விரட்டப்பட்டு நாட்டின் மதிப்பு முதலில் உயரட்டும். ஸ்வர்ணத்தின் மதிப்பு தானே உயரும்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

பூரகுப்தனுக்குச் சக்கரவர்த்தியின் யோசனை அவ்வள வாகப் பிடிக்காவிட்டாலும் அப்பொழுது அவன் எதுவும் பேசவில்லை.

"நாளைக் காலையில் வருகிறேன்" என்று அனுமதி பெற்றுப் போய்விட்டான்.

அவன் சென்றதும் தாஸி, சக்கரவர்த்தியிடம் கேட்டாள்: "ஆமாம்! உங்களுக்கு மலைவாசலில் நடந்த புரட்சியும் தக்ஷசீலத்தில் பொன் கிடைத்ததும் எப்படித் தெரிந்தன? யாராவது ஒற்றர்களை வைத்திருக்கிறீர்களா?"

"உனக்குத் தெரியாமல் எந்த ஒற்றன் என்னைப் பார்க்க முடியும்?" என்றான் ஸ்கந்தகுப்தன்.

"பின் எப்படித் தகவல்...?"

சக்கரவர்த்தி தன் தலையணையின் கீழேயிருந்து ஓர் ஓலையை எடுத்துத் தாஸியிடம் கொடுத்து, "இதைப் படித்துப் பார்" என்றார். அதைப் படிக்கப் படிக்க தாஸியின் முகத்தில் சொல்லொண்ணாத வியப்பும் பிரமிப்பும் கலந்து தாண்டவமாடின. அவள், எழுந்த உணர்ச்சியைத் தாங்க முடியாமல் "அப்படியானால் அந்த..." என்று ஏதோ சொல்லப் போகவே அவள் தாஸி என்பதையும் பார்க்காமல் சக்கரவர்த்தி தன் கையாலேயே சட்டென்று அவள் வாயைப் பொத்தி, "உஷ்! பெயரைச் சொல்லாதே!" என்று எச்சரித்தான்.

# 23. தாயும் மகனும்

சக்கரவர்த்தியின் ஆணைப்படி அடிலன் அரசாங்க விருந்தினனாக ஏற்கப்பட்டான். ராஜ தூதர்கள் அவன் பதுங்கியிருந்த இடத்துக்குச் சென்று அவனுக்குச் சக்கர வர்த்தியின் சார்பாக அழைப்பு அளித்தபோது அடிலன் ஏதும் புரியாமல் விழித்தான். எதிரிகளை என்றும் மரியாதை யாக நடத்திப் பழக்கமில்லாத அவனுக்கு இதில் ஏதோ சூதிருப்பதாகவே தோன்றியது. ஆகவே முதலில் வர மறுத்த தன்றி, "நான் இருக்குமிடம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கோபத்துடன் கேட்டான். கோபத்தால் விகாரமடைந்த அவன் முகத்தைப் பார்த்த ராஜ தூதர்களின் தலைவனுக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தாலும் ராஜாங்க விருந்தினனை அவமதிப்பதாலுண்டாகக் கூடிய தண்ட னையை நினைத்துச் சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு "தங்களுக்கு மாப்பிள்ளையாக வர இருந்தாராமே ஒருவர்..." என்று ஆரம்பித்தவுடன் அடிலனுக்குக் கோபம் எல்லை மீறவே அவன் மூர்க்கத்தனமும் அளவுக்கு மிஞ்சி தான் எங்கிருக்கிறோம், யாருடன் பேசுகிறோம் என்பதை யெல்லாம் மறந்து, "யார் ராகுலனா! அந்த மடையனா சொன்னான்? அவனை முதலில் இங்கு கொண்டு வாருங்கள். அவனை வெட்டிவிட்டுப் பிறகு உங்களுடன் வருகிறேன்" என்று இடிபோல் அதட்டினான்.

அடிலனின் ராட்சசக் குரலைக் கேட்டு ராஜதூதர்கள் திகிலடைந்தார்கள். ராஜ தூதர் தலைவன் மட்டும் நிதானத்தை இழக்காமல், "ராகுலனை அழைத்து வருவதற் கில்லை; அவனைச் சிறையில் தள்ளியாகிவிட்டது" என்றான்.

அப்படியானால் என்னையும் சிறையில் தள்ளுவதற்குத் தான் இத்தனை மரியாதையோ?" என்று அடிலன் கேட்டான்.

"ராஜாங்க விருந்தினர்கள் ராஜ மரியாதைக்குரியவர்கள். அவர்களைச் சிறையில் தள்ளுவது குப்த ராஜ்யத்தில் சட்ட விரோதம். ராஜாங்க விருந்தினர்களை அவமானப்படுத்த முயல்பவன் யாராயிருந்தாலும் தண்டிக்கப்படுவான்," என்று ராஜதூதன் வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டான்.

இதெல்லாம் பெரிய நாடகம் போலவே அடிலனுக்குத் தோன்றியது. தன்னிடம் அகப்பட்ட குப்தப் பிரஜைகளை யெல்லாம் தான் தண்டித்திருக்கத் தனக்கு மட்டும் எதற்காக இவ்வளவு மரியாதை கிடைக்கிறது என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை. குப்த ராஜ்யத்தில் அவன் தண்டனையை எதிர்பார்க்கவில்லை. அடைக்கலம் புகுந்த வர்களை ஸ்கந்தகுப்தன் தண்டிப்பதில்லையென்பதைக் கேள்விப்பட்டுத்தான் குப்த ராஜ்யத்துக்குள் வந்தான். ஆனால், தான் ராஜாங்க விருந்தினனாகக்கூடும் என்பதை அவன் சொப்பனத்தில்கூட எதிர்பார்க்கவில்லை. தவிர குப்த ராஜ்யத்தின் தீவிர விரோதியான தன்னைக் காட்டிக் கொடுத்த ராகுலனுக்குச் சிறைவாசமும் தனக்கு மாளிகை வாசமும் ஏன் கிடைக்கிறது என்ற புதிருக்கும் அவனுக்கு விடை கிடைக்கவில்லை. ராஜ தூதர்களிடத்திலிருந்து உண்மையை வரவழைப்பது பிரம்மப் பிரயத்தனம் என்பதும் அவர்கள் முகத்தைப் பார்க்கையிலேயே தெரிந்துவிட்டது. ஆகவே, பேசாமல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான்.

ராஜ தூதர்கள் அவனைக் குதிரைகள் பூட்டிய வாகனத் தில் ஏற்றிச் சென்று அதிதி பவனத்தில் இறக்கினார்கள். வெளிநாட்டு ராஜ தூதர்களும், சிற்றரசர்களும் வந்தால் இறங்குவதற்காக அதிதி பவனங்கள் பலவற்றை அந்தக் காலங்களில் ஹிந்து மன்னர்கள் கட்டி வைத்திருந்தார்கள். இந்த பவனங்களில் இறங்குபவர்களுக்குக் குறுநில மன்னர்



களுக்குள்ள எல்லா மரியாதைகளும் கிடைக்கும். எப்பணி யையும் செய்ய சதா காவல்காரர்கள் கைகட்டி நிற்பார்கள். எந்தவித சௌகரியத்திற்கும் குறைச்சல் இருக்காது. ஆனால், இந்த மரியாதையை ராஜ தூதர்கள் துர் உபயோகப்படுத்தா திருக்க ஒற்றர்கள் கண்காணிப்பு மட்டும் இருந்து கொண் டிருக்கும். மரியாதை கிடைக்கும். அதிதி பவனத்தில் இறக்கப் பட்ட அடிலனுக்குச் சௌகரியங்கள் எவ்வளவோ இருந்தும் மனநிம்மதி மட்டும் சிறிதும் இல்லை. என்ன நோக்கங் கொண்டு ஸ்கந்தகுப்தன் தன்னை இப்படியெல்லாம் கௌரவப்படுத்துகிறான் என்பதை ஆராய்வதிலேயே அவன் மனம் உழன்று கொண்டிருந்தது.

ஸ்கந்தகுப்தன் உத்தரவால் அடிலன் மனம் மட்டுமல்ல இன்னும் இருவர் மனங்களும் பெரிதும் கலங்கியிருந்தன. ஸ்கந்தகுப்தன் உத்தரவின் உள்நோக்கத்தை ஆராய்ந்து ஆராய்ந்து ஒன்றும் புரியாமல், அடியுண்ட வேங்கை போல் அதிதி பவனத்தின் பிரத்தியேக அறையில் அடிலன் நடமாடிக் கொண்டிருந்த அதே இரவில், ஆனந்ததேவியும் பூரகுப்தனும் அதே விஷயத்தைப் பற்றியே பேசிக் கொண் டிருந்தார்கள். மூத்தாள் பிள்ளையிடமிருந்து தீர்க்காலோ சனையுடன் திரும்பி வந்த தன் பிள்ளையை ஆனந்ததேவி மிகுந்த மனவேதனையுடன் பார்த்தாள். பூரகுப்தன் முகத்தில் பீதியும் குழப்பமும் தாண்டவமாடிக் கொண்டிருந்ததை ஆனந்ததேவி ஒரு நொடியில் கண்டு கொண்டாள்! பூரகுப்தன் மௌனமாகவே அவள் அறைக்குள் வந்து அவளுக்குச் சற்றுத் தூரத்திலிருந்த மஞ்சத்தில் அமர்ந்தான். ஆனந்ததேவியும் மௌனமாகவே அவனைக் கவனித்தாள். கடைசியில், பூரகுப்தனே பேச்சை ஆரம்பித்து, "அம்மா, அண்ணா என் மேல் வேவு பார்க்கிறான்" என்றான்.

இதைக் கேட்டு ஆனந்ததேவி ஆச்சரியப்படவில்லை. பூர குப்தனுக்குக் குப்த ராஜ்ய முடிசூட்ட தான் பிரயத்தனப் படுகையில் ஸ்கந்தகுப்தன் மட்டும் சும்மா இருப்பானென்று

அவள் நினைக்கவேயில்லை. இருந்தாலும் விஷயத்தைக் கிரகிக்க, "என்ன! உன் மேல் வேவு பார்க்கிறானா?" என்றாள் ஆச்சரியப்படுவது போல் நடித்துக்கொண்டே.

"ஆம். நான் போகுமிடங்களிலெல்லாம் ஒற்றர்கள் என்னைத் தொடருவதாகத் தெரிகிறது. தக்ஷசீலத்தில் அஜித் சந்திரன் என்னிடத்தில் எவ்வளவு ஸ்வர்ணங்களைக் கொடுத்தான் என்பது கூட அண்ணாவுக்குத் திட்டமாகத் தெரிந்திருக்கிறது" என்றான் பூரகுப்தன்.

இதைக் கேட்டதும் ஆனந்ததேவிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒற்றர்கள் கண்டுபிடிக்கக் கூடியதெல்லாம் ஸ்வர்ணங்களை எதிரிகள் கொடுத்தார்கள் என்பது மட்டும் தான்; எவ்வளவு ஸ்வர்ணங்களைக் கொடுத்தார்கள் என்பது தெரியக் காரணமில்லை; ஏனென்றால் ஸ்வர்ணங்களை தனியாகத் தளபதியிடந்தான் எண்ணிக் கொடுக்கப்படும். அப்படியிருக்க ஸ்கந்தகுப்தன் தொகையை எப்படித் தெரிந்து கொண்டான் என்று திக்பிரமை கொண்டாள். ஒருவேளை பூரகுப்தன் அஜாக்கிரதையால் தெரிந் திருக்குமோ என்ற சந்தேகமும் எழுந்தது. "ஸ்வர்ணங்களை எங்கு, எப்படி எண்ணி வாங்கினாய்?" என்று பிள்ளையைக் கேட்டாள் ஆனந்ததேவி.

"நீ சொல்லியபடிதான் வாங்கினேன். அஜித் சந்திரன் தனியாக என்னுடைய கூடாரத்துக்குப் பணப்பெட்டியுடன் வரவேண்டியதென்றும் என்னிடம் தனிமையில் ஸ்வர்ணங் களை எண்ணிக் கொடுக்க வேண்டியதென்றும் நிபந்தனை போட்டேன். அதன்படிதான் நடந்தது. பணம் எண்ணிய போது எங்கள் இருவரைத் தவிர கூடாரத்தில் வேறு யாரும் கிடையாது. பணம் நம் கைக்கு மாறியதும் ராஜாங்கப் பணப் பெட்டியில் போட்டு என் பெட்டியில் போட்டு என் சொந்த முத்திரையையே அதற்கு வைத்தேன். தவிர, அஜித் சந்திரன் திரும்பிப் போகும்போது யாரிடமும் பேசாமல் போவதற்கு ஏற்பாடுகள் செய்தேன். அயோத்திக்குத் திரும்பியதும் பெட்டி



முத்திரையை நானே சோதித்தேன். நான் வைத்த முத்திரை இம்மியளவும் கலையவில்லை," என்று விளக்கினான் பூரகுப்தன்.

பிள்ளை திறமையாகத்தான் வேலையை முடித்திருக் கிறான் என்று ஆனந்ததேவி தீர்மானித்துக் கொண்டாள். இவ்வளவு திட்டமான ஏற்பாடுகளிருந்தும் எங்கோ இருக்கும் தக்ஷசீலத்தில் நடந்ததைப் படுக்கையில் படுத்தபடி அறியக் கூடிய ஸ்கந்தகுப்தன் திறமையை ஆனந்ததேவி மனத்திற்குள் பெரிதும் சிலாகித்தாள். இந்த பூரகுப்தனுக்குப் பதில் ஸ்கந்த குப்தன் தன் வயிற்றில் பிறந்திருக்கக் கூடாதா என்று சற்று நினைத்தாள். அதனால் ஏக்கம் கலந்த பெருமூச்சு ஒன்றும் அவளிடமிருந்து வெளிவந்தது.

அவள் வேதனையை இன்னும் சிறிது அதிகப்படுத்த பூரகுப்தன் பேசினான்: "அம்மா! நமக்கு இதுவரையில் கிடைத்த ஸ்வர்ணங்களைக் கொண்டு நான் நமது ராஜாங்க ஸ்வர்ண நாணயத்தின் மதிப்பைப் பழைய ஸ்திதிக்கு உயர்த்துவதாகச் சொன்னேன். அண்ணா அதற்கு உடன்பட வில்லை. இந்தப் பணத்தைக் கொண்டு சைன்னியங்களைத் திரட்ட வேண்டுமென்கிறார்" என்றான்.

"திரட்டி என்ன செய்வதாம்?"

"தோரமானாவுடன் போராடுவதாம்."

ஆனந்ததேவி புன்னகை செய்தாள். தோரமானாவை அசைக்க முடியாதென்று அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் பூரகுப்தன் மீண்டும் ஒரு வெடியை வீசினான். "அம்மா! அடிலன் அண்ணாவிடம் சிக்கிவிட்டான் தெரியுமா?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட ஆனந்ததேவி அதிர்ச்சியால் மஞ்சத்தில் சிறிது நேரம் சாய்ந்துவிட்டாள். மெள்ள சமாளித்துக் கொண்டு, "எந்த அடிலன்?" என்று வினவினாள்.

"மலைவாசல் அடிலன்தான்" என்றான் பூரகுப்தன் சிரித்துக்கொண்டே.

அவன் சிரிப்பைக் கண்ட ஆனந்ததேவிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "எதற்காகச் சிரிக்கிறாய் பூரகுப்தா? இதன் விளைவு என்னவென்று உனக்குத் தெரியுமா?" என்று பிள்ளைமீது எரிந்து விழுந்தாள்.

"விளைவா?"

"ஆம்; அடிலனும் ஹூணர்களின் தலைவன். தோரமானாவும் ஹூணர்களின் தலைவன். அடிலனைக் கொண்டு ஹூணர்களிடையே கலகமுண்டாக்க ஸ்கந்த குப்தன் ஏற்பாடு செய்கிறானே, இது உன் அல்ப புத்திக்குத் தெரியவில்லையா? அடிலனுக்கு ராஜாங்க மரியாதைகள் கிடைத்திருக்குமே?"

"ஆம்! அவனை அரசாங்க விருந்தினனாகக் கௌரவிக்கும்படி அண்ணா உத்தரவிட்டிருக்கிறான்."

"சரியான ஆயுதம் கையிலிருக்கும்போது அறிவாளி வேறு எப்படி உத்தரவிடுவான்? அடிலன் ஸ்கந்தகுப்தன் அதிதியென்பதும், அடிலனை ஹூண அதிபதியாக்க ஸ்கந்த குப்தன் முயற்சிப்பதாகவும் இன்னும் சில நாட்களில் நமது ஒற்றர்கள் ஹூணப் பிராந்தியங்களில் செய்தியைப் பரப்புவார்கள். தோரமானாவின் ஹூண எதிரிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அடிலனைத் தலைவனாக்கச் சூழ்ச்சி செய்வார்கள். ஹூணர்கள் பிளவுபட்டு நிற்கும் இடங்களில் குப்த ராஜ்யப் படைகள் தாக்கிச் சிறுசிறு பிராந்தியங்களை மீண்டும் குப்த ராஜ்யத்தில் கொண்டுவர முயலும். அடிலனுக்குச் சரியான ஆதரவு ஹூணர்களிடம் கிடைக்குமானால் ஸ்கந்தகுப்தனே அடிலனை ஹூணர்கள் பிராந்தியத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாலும் சேர்க்கலாம். ஸ்கந்தகுப்தன் ராஜதந்திரத்தின் விளைவுகளைப் பற்றி இப்பொழுது திட்டமாக ஒன்றும் சொல்ல முடியாது.



ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். பாரதத்தின் சமீப காலச் சக்கரவர்த்திகளில் ஸ்கந்தகுப்தன் மிகவும் போற்றப்பட வேண்டியவன்" என்றாள் ஆனந்ததேவி.

தன் தாயார் அண்ணனைப் பற்றி இப்படிச் சிலாகித்துப் பேசுவது பூரகுப்தனுக்குப் பிடிக்கவில்லை. உள்ளூர எழுந்த பொறாமையால் மாறிய அவன் முகத்தைக் கண்ட ஆனந்த தேவியின் இதழ்களில் வெறுப்புக் கலந்த புன்சிரிப்புத் தோன்றியது. மகனைப் பார்த்து மிகக் குரூரமாகச் சொன்னாள்: "பூரகுப்தா! பெற்ற பாசத்தால் உன்னை அரசனாக்கப் பார்க்கிறேன். ஆனால், சக்கரவர்த்தியாயிருப்பதற்கு சக்களத்திப் பிள்ளையே லாயக்கானவன். உனக்குப் பணத்தின் மதிப்பு ஒன்றுதான் தெரியும். ஸ்கந்தகுப்தனுக்கு ராஜ்யமாளத் தெரியும்."

"ஸ்கந்தகுப்தன் பெருமையை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். அடிலனை அரசாங்க விருந்தினனாக்கினான். அவன் இருப்பிடத்தைச் சொன்ன ராகுலனைச் சிறையில் தள்ளினான்."

"யாரது ராகுலன்?"

"அவனுக்கு அடிலன் பெண்ணைக் கொடுப்பதாக ஏற்பாடாகியிருந்ததாம்."

"பெண் இப்பொழுது எங்கே?"

"நான் விசாரிக்கவில்லை."

"ஏன் விசாரிக்கப் போகிறாய்? அது கிடக்கட்டும்; ராகுலனை எங்கே அடைத்திருக்கிறார்கள்?"

"பாதாளச் சிறையில்."

ஆனந்ததேவி ஆசனத்தைவிட்டு எழுந்து ஏதோ தீவிரமாக யோசித்தாள். பிறகு பிள்ளையின் அருகில் வந்து மெள்ள, "இந்த ராகுலனை நாம் எப்படியாவது விடுவிடுக்க வேண்டும்" என்றாள். இதைக் கேட்ட பூரகுப்தன் முகத்தில் திகில் பூராவாகப் படர்ந்தது.

# 24. பாதாளச் சிறையில்

ராகுலனை விடுவிக்க வேண்டுமென்று ஆனந்ததேவி சொன்னதும் பூரகுப்தன் திகிலடைந்தானென்றால் அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. ஸ்கந்தகுப்தன் ராகுலனைச் சாதாரணக் கைதிகளை அடைக்கும் அறையில் தள்ள வில்லை. அரண்மனையிலுள்ள பாதாளச் சிறையில் ராஜீயக் கைதிகளையும் அரசரின் நேர் பார்வையில் இருக்க வேண்டிய பிரமுகர்களையுந்தான் அடைப்பது வழக்கம். இந்தக் காரணத்தால் பாதாளச் சிறையின் சாவியும் அரண் மனை ஸ்தானீகனிடமே இருந்தது. சிறைக்குள் காவல் புரிபவர்களைக்கூட சிறையின் தலைமைக் காவலன், ஸ்தானீ கனிடம் சாவியைக் கேட்டு வாங்கி அவர்களை உள்ளே அனுப்பி மீண்டும் வீட்டைப் பூட்டி சாவியை ஸ்தானீகனிடம் திரும்ப ஒப்படைப்பான். சிறையின் பிரதம வாயிலைப் பல வீரர்கள் இரவும் பகலும் காத்து நிற்பார்கள். இந்தச் சிறை யிலிருந்து யாரையாவது விடுவிக்க வேண்டுமானால், ஸ்தானீகனிடம் சாவியைக் கேட்க வேண்டும். ஸ்தானீகனிடம் சாவியைக் கேட்டால் சக்கரவர்த்திக்கு விஷயம் தெரிந்து விடும்! இவ்வளவு உபத்திரவத்தில் ராகுலனைத் தாயார் விடுவிக்கச் சொல்லுகிறாளே! இது பெரிய ஆபத்திலல்லவா முடியும் என்று பூரகுப்தன் யோசித்தான். ஏற்கெனவே தன் மேல் சந்தேகப்படும் சக்கரவர்த்திக்குத் தான் ராகுலனை விடுதலை செய்தது தெரிந்துவிட்டால் தனக்கும் பாதாளச் சிறை கிடைக்கலாம் என்பதும் பூரகுப்தனுக்குத் தெரியும். ஏனென்றால் ராகுலனைச் சிறையிலடைத்ததற்கும் அடிலனை உபசரித்ததற்கும் குப்த ராஜ்யத்தின் நன்மையே பிரதான காரணமாயிருந்திருக்கிறது. அந்த நன்மைக்கு



இடையூறு செய்பவன் தம்பியாயிருந்தால்கூட ஸ்கந்தகுப்தன் மன்னிக்க மாட்டான் என்பதைத் திட்டமாக பூரகுப்தன் உணர்ந்து கொண்டிருந்தான்.

மகன் முகத்தில் பிரதிபலித்த திகிலை ஆனந்ததேவி கவனித்தாள். அவளுக்கு அவன் மேல் ஏற்கெனவே எழுந்த வெறுப்பு இன்னும் அதிகமாயிற்று. அவன் மனத்தில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்கள் என்னவென்பதும் அவள் கூர்மையான புத்திக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது. முகத்தில் மிகுந்த இகழ்ச்சி தோன்ற ஆனந்ததேவி, "என்ன யோசிக் கிறாய் பூரகுப்தா! பாதாளச் சிறையிலிருந்து ராகுலனை எப்படித் தப்ப வைப்பது என்று திட்டம் போடுகிறாயா?" என்று ஏளனமாகக் கேட்டாள்.

தாயின் மனப்போக்கு பூரகுப்தனுக்குப் புரியாததில்லை. தன் கோழைத்தனத்துக்காகப் பரிகசிக்கிறாள் என்பதை அறிந்த அவன், "அம்மா, பாதாளச் சிறையிலிருந்து ஒரு கைதியை விடுவிப்பது உனக்கு விளையாட்டாயிருக்கலாம்; ஆனால் அதனால் உண்டாகும் விளைவைப் பற்றி யோசித் தாயா?" என்றான்.

ஆனந்ததேவிக்கு வந்த கோபாவேசத்தில் பூரகுப்தன் கொஞ்சம் சிறுபிள்ளையாயிருந்தால் அவனை அவள் அறைந்திருப்பாள். மகன் பெரியவனாகி விட்டதால் கோபத்தை உள்ளடக்கி, "ஒவ்வொரு திட்டத்தை நிறைவேற்று வதிலும் உள்ள கஷ்டங்களை மட்டும் யோசித்துக் கொண் டிருப்பவன் உலகத்தில் எந்தக் காரியத்தையும் சாதிக்க மாட்டான். கஷ்டத்தை உணர்ந்தாலும் அதற்குப் பரிகாரம் தேடுபவனே வெற்றி பெறுவான்" என்றாள் ஆனந்ததேவி.

"கஷ்டங்கள் கழுத்துக்குக் கயிறு கொண்டு வருவதா யிருந்தால்...?"

"கயிறு கொண்டு வராத முறையில் கஷ்டங்களை முதலில் துண்டிக்க வேண்டும். அப்படியே கயிறு வந்தால்

தானென்ன? சாவு அப்படி ஒன்றும் பயங்கரமானதல்ல! பயந்து பயந்து நாளொன்றுக்கு ஆயிரந்தடவை பிராணனை விடுவதைவிடப் பெரிய காரியங்களில் ஈடுபட்டு ஒரேயடியாகச் சாவைத் தேடிக்கொள்வதில் பயங்கரம் எதுவுமே இல்லை. அதுமட்டுமல்ல பூரகுப்தா! குப்த ராஜக்கிரீடம் லேசானதென்று நினைக்கிறாயா? அதை ஸ்தாபிக்க எவ்வளவு லக்ஷம் உயிர்கள் பலியாகியிருக்கின்றன தெரியுமா? அப்பேர்ப்பட்ட மணிமுடி வேண்டுமானால் அதை உன்னிடம் கொண்டு வந்து யாராவது சமர்ப்பிப்பார்களென்று நினைக்கிறாயா? கிரீடத்தைச் சம்பாதிக்க வேண்டும். அதன் விலை மகத்தானது. அதற்கு உன் உயிரைப் போல் ஆயிரம் உயிர்களைப் பலியிடலாம்."

தாயின் இந்த வார்த்தைகளைக் கேட்ட பூரகுப்தன் முகத்தில் பீதி இன்னும் ஒரு மாத்திரை அதிகமாக ஏறியது.

"என் உயிரைப் பலிகொடுத்து யாருக்குக் கிரீடத்தைச் சூட்டப் பார்க்கிறாய்? நீயே சூட்டிக்கொள்ளப் பார்க்கிறாயா?" என்று வினவினான் பூரகுப்தன்.

"உன் தலையைவிட என் தலை கிரீடத்துக்குச் சிறந்தது என்பதில் என்ன சந்தேகம்? உன்னைவிட எனக்கு அறிவு இருக்கிறது. உன்னளவுக்கு நான் பயங்கொள்ளியுமில்லை! ஆனால், உன்னைப் பெற்ற பாசம் அதுவும் ஒரே மகனாய் நீ பிறந்த நல்ல காலம், என் அறிவு, ராஜதந்திரம் இரண்டையும் உனக்காகச் செலவிடுகிறேன். முட்டாள் மாதிரி ஏதாவது பேசிக் கொண்டிருக்காதே. ராகுலனை நாம் விடுவித்துத்தான் ஆகவேண்டும். அதுவும் துரிதமாக நடந்தேற வேண்டும்."

"ராகுலனை விடுவிப்பதால் நமக்கென்ன லாபம்?"

"லாபமில்லாமலா இந்தக் காரியத்தில் நுழைவேன். ஸ்கந்தகுப்தன் போடும் திட்டத்தைப் பற்றி நாம் தோரமானாவை எச்சரிக்க வேண்டும். தோரமானாவுக்குச் செய்தி கொண்டு செல்லக்கூடியவன் ராகுலன் ஒருவன்தான்."



"தோரமானாவுக்குச் செய்தியனுப்பப் போகிறாயா?" இதைச் சொன்ன பூரகுப்தன் ஒரு விநாடி ஸ்தம்பித்துப் போனான். "அம்மா! இது ராஜ துரோகமல்லவா?" என்று பதறிக்கொண்டு கேட்டான்.

"ராஜ துரோகமல்ல, ராஜ தந்திரம்" என்றாள் ஆனந்த தேவி நிதானமாக.

"இது என்ன ராஜ தந்திரம்? நமது ராஜாங்க திட்டங்களை எதிரிக்குக் காட்டிக் கொடுப்பது ஒரு ராஜ தந்திரமா?"

"நமது ராஜாங்க திட்டங்களை நமக்கு அனுகூலமாக மாற்றிக் கொள்வது ராஜ தந்திரம்!"

பூரகுப்தன் முகத்தில் கோபம் பொங்கி எழுந்தது. அவன் உடம்பில் ஓடிக்கொண்டிருந்த மூதாதைகளின் ரத்தம் கொதிக்கவே அவன் முகத்திலிருந்த பயம் கலைந்து கோபத் தணல் வீசியது. "அம்மா! உன் ராஜ தந்திரம் எனக்கு மிகவும் புதிதாக இருக்கிறது. நமது ராஜாங்க திட்டங்களை எதிரிக்குச் சொல்லுவது ராஜதந்திரம் என்று எந்த உபாத்தியாயரும் சொல்லிக் கொடுக்கவில்லை. இதற்கு ஒருநாளும் நான் உடன்பட மாட்டேன்" என்றான்.

பிள்ளையின் முகத்தில் ஏற்பட்ட கோபத்தைப் பார்த்த ஆனந்ததேவிக்கு மிகவும் சந்தோஷமாகவே இருந்தது. மகனை மிகுந்த மகிழ்ச்சியுடன் முதுகில் தட்டிக் கொடுத்து, "பூரகுப்தா! நான் மாத்திரம் குப்த ராஜ்யத்தின் நன்மையில் அக்கறையில்லாதவளா? அப்படி அக்கறையில்லையென்றால் மலைவாசலில் நான் தோரமானாவைச் சந்தித்த அன்றே இங்குள்ள படைபலத்தைப் பற்றியும் அவை அணிவகுத்து நிற்குமிடங்களைப் பற்றியும் தெளிவாக அவனுக்கு எடுத்துச் சொல்லி, குப்த ராஜ்யத்தை என்றோ காற்றாகப்

பறக்க அடித்திருப்பேன். அப்படி நான் ஏன் செய்யவில்லை? குப்த ராஜ்யத்தின் சாதக பாதகங்களை ராஜ மாதாவான என்னை மட்டும் பாதிக்காமல் விட்டுவிடுமா? என்னுடைய திட்டங்களுக்குத் தகுந்த காரணமிருக்கிறது?" என்றாள்.

"என்ன காரணம்?"

"என் மகன் சக்கரவர்த்தியாக வேண்டும் என்பது ஒரு காரணம். ஹூணர்களை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்பது இரண்டாவது காரணம். இந்தக் காரியங்களைச் சாதிக்க சிலசமயம் நாம் எதிரிகளை உறவாடிக் கெடுக்க வேண்டியிருக்கிறது. இதற்குத்தான் ராஜ தந்திரம் என்று பெயர். நமது குப்த ராஜ்யத்துக்கு இப்பொழுது வேண்டியது வியாதியஸ்தனான அரசனல்ல. திடகாத்திரமாக உலாவக் கூடியவனும் நேரிடையில் காரியத்தைச் சாதிக்கக் கூடிய வனுமான மன்னன் தேவை. அதற்குக் குப்த வம்சத்தில் உருப்படியாக நீ ஒருவன்தான் இருக்கிறாய். தவிர, நமது தங்க நாணயத்தின் மாற்றை ஸ்கந்தகுப்தன் குறைத்ததிலிருந்து வெளிநாட்டு வர்த்தகம் பெரிதும் குறைந்துவிட்டது. வர்த்தகம் பெறாத நாணயத்தின் மாற்று உயர வேண்டும். ஸ்வர்ணங்கள் அதிகமாகக் கிடைக்கக் கிடைக்க ஸ்கந்த குப்தன் படை திரட்டுவானேயொழிய ஸ்வர்ண மதிப்பை உயர்த்தமாட்டான்! படை திரட்டி மக்களைப் பலிகொடுத் தால் மட்டும் ஹூணர்களை விரட்ட முடியாது. கையில் மிகுந்திருக்கும் ராஜ்யப் பிரதேசம் ஸ்திரப்பட வேண்டும். நீ ஸ்வர்ணத்தின் மதிப்பை உயர்த்தி அதைப் பிரகாசமடையச் செய்தால் உன்னைப் 'பிரகாச ஆதித்யன்' என்று உலகம் புகழும். மக்கள் க்ஷேமமடைவார்கள். இதுதான் என் லக்ஷியம்" என்று விவரித்தாள் ஆனந்ததேவி.

பூரகுப்தன் புத்திசாலியாயிருந்தால் தன் தாயார் ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கோரி இத்தனை திட்டங்களை வகுக்கவில்லையென்பதை உணர்ந்து கொண்டிருப்பான்.



ராஜ்யத்தைக் கைப்பற்றவே அவள் சதி செய்கிறாளென்ப தையும் தன் சாமர்த்தியத்தால் அதற்குச் சரியான காரணங் களைக் கற்பிக்கிறாள் என்பதையும் அறிந்திருப்பான். ஆனால், சாதாரண அறிவுடைய பூரகுப்தன் ஆனந்ததேவி யின் தயக்கத்தின் உண்மை நிலையைக் கண்டுபிடிக்க முடியாமல் அவள் இஷ்டத்திற்கு இறுதியில் இணங்கினான்.

மகன் மனம் மாறிவிட்டதை நொடியில் அறிந்து கொண்ட ஆனந்ததேவி, "பூரகுப்தா! அந்தப்புரத்திலிருந்து பாதாளச் சிறைக்கு ஒரு வழி இருக்கிறது; அதைத் திறந்து விடுகிறேன். ராகுலனுக்கு வேண்டிய துணிமணி, வாள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு அதன் மூலம் செல். அந்த வழியின் கோடிக்கதவின் தாழ்ப்பாளை மெள்ளத் திறந்தால் பாதாளச் சிறைக்குள் இருப்பாய். இன்று உள்ளே காவல் புரிபவர் என் ஆட்கள். உன்னைக் கண்டதும் ராகுலன் அறையைத் திறந்து விடுவார்கள். அவனிடம் நான் கொடுத்த ஓலையைக் கொடுத்து ஜாக்கிரதையாகத் தோர மானாவிடம் கொடுக்கச் செய்" என்று கூறிவிட்டு, ஆனந்த தேவி எழுது கருவிகளைக் கொண்டு வந்து ஓர் ஓலையை எழுதி அதற்கு முத்திரையும் வைத்தாள். பூரகுப்தன் ராகுல னுக்கு உடைகளையும் வாளையும் எடுத்துக் கொண்டான். ஆனந்ததேவி ஒரு பந்தத்தைக் கொளுத்தி மகனிடம் கொடுத்துத் தன் அறையின் ஒரு கோடிக்குச் சென்று கீழே யிருந்த விரிப்பை அகற்றி ஒரு கதவைத் திறந்தாள். கீழ் நோக்கிப் படிகள் ஓடின. பூரகுப்தன் ஒரு கையில் பந்தமும், மற்றொரு கையில் ராகுலனுக்குத் துணிமணி, வாள் முதலிய வற்றையும் தாங்கிச் சுரங்கவழியே இறங்கிச் சென்றான். ஆனந்ததேவி சொன்னபடி சுரங்கக் கோடியில் கதவு இருந்தது. பந்தத்தை ஒரு மூலையில் சாத்திவிட்டுக் கதவைத் திறந்து சிறைச்சாலைக்குள் சென்றான். ஆனந்ததேவியின் வீரர்கள் அவனை எதிர்கொண்டழைத்து ராகுலன் இருந்த இடத்தைக் காட்டினார்கள்.

பூரகுப்தனால் தட்டியெழுப்பப்பட்ட ராகுலன் திடுக்கிட்டுப் படுக்கையிலிருந்து கீழே குதித்தான். "உஷ்... பேசாதே! இதோ உனக்கு வேண்டிய உடையும் வாளும் இருக்கின்றன; அணிந்துகொள். இந்த ஓலையைத் தோர மானாவிடம் சேர்த்துவிடு. இங்கிருந்து நேராக நீ மாளவ எல்லைக்குச் செல்ல சகல ஏற்பாடுகளும் தயார்" என்றான் பூரகுப்தன்.

சிறையிலிருந்து தப்பினால் போதும் என்ற ஸ்திதியிலிருந்த ராகுலன் உடைகளை அணிந்து கொண்டான். அவனுடன் மீண்டும் சுரங்க வழிக்குள் வந்த பூரகுப்தன் சுரங்கக் கதவைத் தட்டி, "ராகுலா! உன்னை யாரென்று எனக்குத் தெரியும். அனாவசியமான கேள்விகளைக் கேட்காதே! நாளைக்கு உன்னைச் சிரச்சேதம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ஆகையால் நான்தான் எப்படியாவது இன்றே தப்புவிக்க ஏற்பாடுகளைச் செய்தேன். சுரங்கத்துக்கு வெளியே வந்ததும் அந்தப்புரத்தின் தோட்டத்துக்குப் போ. அங்குதான் குதிரை லாயமிருக்கிறது," என்று விளக்கினான் பூரகுப்தன்.

"புரிந்தது" என்று தலையசைத்தான் ராகுலன்.

இதே சமயத்தில் அரண்மனையின் மற்றொரு புறத்தில் பஞ்சணையில் படுத்துக் கிடந்த ஸ்கந்தகுப்தன் தாஸியை நோக்கிச் சிரித்து, "இத்தனை நேரம் பூரகுப்தன் ராகுலனைத் தப்ப வைத்திருப்பான். ஆகையால் நீ நமது ஓலையை எழுதிவிடு" என்றான்.

"ராகுலனைத் தப்ப வைத்திருப்பானா!"

"ஆம்; பாதாளச் சிறையின் உள்ளே காவல் புரியும் ஆட்களின் பட்டியல் அன்றாடம் என்னிடம் வந்து போவது உனக்குத் தெரியுமா?"

"தெரியும்."



"இன்று வந்த பட்டியலில் அறைக்குள் காவல் புரியும் வீரர்களின் பெயர்கள் இரண்டும், ஆனந்ததேவியின் காவலாட்களின் பெயர்களாயிருந்ததைக் கவனித்தேன்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

இதைக் கேட்ட தாஸி அசந்து போனாள்.

"ராஜ மாதா ராகுலனை விடுவிக்கக் காரணம்?" என்று கேட்டாள்.

"ராஜ்ய ஆசை" என்றான் ஸ்கந்தகுப்தன். "அது கிடக்கட்டும்; நான் சொன்னபடி ஓலையை எழுதிவிடு. ராகுலன் மாளவ எல்லைக்கு ஆனந்ததேவியின் செய்தியுடன் போவதில் எனக்கும் அனுகூலமிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி என் போர்த் தந்திரங்களை அமைத்துக் கொள்ளலாம்! ஆகையால் சீக்கிரம் ஓலையை எழுது."

தாஸி வேறொன்றும் பேசாமல் ஓலையை எழுதினாள்.

"விலாசம் என்ன மகாராஜா!"

"நேற்று ஓலை காட்டினேனே அவன் விலாசந்தான்."

"அவன் விலாசமா?"

"ஆம்! இப்பொழுது குப்த ராஜ்யம் நிலைத்து நிற்பது ஸ்கந்தகுப்தனாலல்ல. அந்த தியாகியால்தான். அவன்..."

தாஸி அரசன் வாயைப் பொத்தி, "பெயரைச் சொல்லாதீர்கள் மகாராஜா. இந்த அரண்மனை சுவர்களுக்குக் கூட காதுகள் உண்டு போல் தோன்றுகிறது" என்று சொல்லிச் சிரித்தாள்.

தன் பாடத்தைத் தனக்கே தாஸி திரும்பிப் படிப்பது பற்றி ஸ்கந்தகுப்தனும் சிரித்தான்.

# 25. தோரமானாவின் அந்தரங்க அதிகாரி

பாடலிபுத்ரத்திலிருந்து மாளவத்தின் எல்லைக்குச் சென்று தோரமானாவைச் சந்திப்பதென்றால் சாதாரண மான வேலையல்ல. இதிலுள்ள கஷ்டம் எவ்வளவென்பதை ராகுலன் பூரணமாகத் தெரிந்து கொண்டான். அவன் பாடலி புத்ரத்தை விட்டுக் கிளம்பி வருவதற்கான ஏற்பாடுகளை ஆனந்ததேவி செய்துவிட்டாள். அவள் உத்தரவுப் பிரகாரம் நகரத்தின் மேற்கு வாசல் அதிகாரிகள் ராகுலனை எந்தவிதப் பரிசோதனையுமின்றி வெளியே செல்ல அனுமதித்து விட்டார்கள். அங்கிருந்து புறப்பட்டது முதல் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்த ஒரு வார காலம் ராகுலனுக்குப் பெரிய நரக வேதனையாயிருந்தது. ஒரு நகரத்துக்குள் புகுந்து புறப்படுவதற்குள் ராஜ்யாதிகாரிகள் ஆயிரத்தெட்டுக் கேள்விகளைக் கேட்டார்கள். அவனைத் துருவித் துருவிச் சோதனை போட்டார்கள். இத்தனை சோதனைகளிலும் உதவியாயிருந்தது, ஆனந்ததேவியின் ராஜமுத்திரையோடு கூடிய கடிதந்தான். அந்தக் கடிதத்தைக் காட்டித்தான் ராஜ தூதன் என்று அறிவிக்கும் வரை அவனை அதிகாரிகள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு ஓர் அடிகூட எடுத்து வைக்க அனுமதி தர மறுத்தார்கள். இத்தனை சோதனையிலும் ராகுலன் குப்த ராஜ்யத்திற்குள் மிக மரியாதையாகவே நடத்தப்பட்டான். அவனை எந்த நகரத் திலும் எந்த அதிகாரியும் மரியாதைக் குறைவாக நடத்தவே யில்லை. அவனை விசாரித்தவர்களும் சோதனை போட்ட வர்களும் இது யுத்த காலமாதலால் தாங்கள் அவ்விதம் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறதென்றும், மற்றபடி அவன்



தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாதென்றும் கேட்டுக் கொண்ட பின்பே தங்கள் பணியைச் செய்தார்கள். மரியாதை, அதிகாரம் இரண்டும் சம அந்தஸ்தில் குப்த ராஜ்யத்தில் உலாவுவதை ராகுலன் கண்டான். ஸ்கந்தகுப்தன் படுத்த படுக்கையாயில்லாமல் தோரமானாவைப் போல் உலாவக்கூடிய ஸ்திதியிலிருந்தால் ஹூணர்கள் ஹிந்துஸ் தானத்தில் அடி எடுத்து வைத்திருக்க முடியாதென்பதை ராகுலன் தன் அனுபவத்திலிருந்து நன்றாகத் தெரிந்து கொண்டான்.

இப்படி ஊருக்கு ஊர் சோதனைக்குள்ளாகிப் பல கஷ்டங்களைப் பட்டு சாம்பல் நதித் தீரத்துக்கு வந்த ராகுல னுக்கு அந்த நதியைத் தாண்டித் தோரமானாவிடம் எப்படிப் போவது என்பது மட்டும் புரியவில்லை. தென்மேற்கிலிருந்து கிளம்பி யமுனையை நோக்கி வடகிழக்காகப் பாயும் சாம்பல் நதியின் மேற்குக் கரையில் தோரமானா தன் படைகளை நிறுத்தியிருந்தான். குப்த ராஜ்யப் படைகள் கிழக்குக் கரை யில் நின்று கொண்டிருந்தன. இடையில் ஓடிக்கொண்டிருந்த சாம்பல் நதி இரண்டு படைகளின் கண்காணிப்புக்கும் உள்ளாகியிருந்தது. சாம்பல் நதியின் மேற்குக் கரையில் தோர மானா படைகளை நிறுத்தியதற்குக் காரணம் உண்டு; நதி யைத் தாண்டினால் மாளவ நாடு அவன் கையில் சிக்கக் காத்துக் கிடந்தது. நதிக்கு அடுத்தாற்போல் நாகர்கள் பிராந்தியம். அந்தச் சிறு நிலப்பரப்பைத் தாண்டினால் மாளவம். நாகர்கள் பிராந்தியம் மிக அல்பமானது. ஜனங் களும் அதிகமில்லாத பிரதேசம். அதைக் கடந்து மாளவத்தை ஆக்கிரமிப்பது மிகச் சுலபமான வேலை. தவிர, படை களுக்குச் சாம்பல் நதி ஓர் இயற்கையான எல்லைக் கோட்டையும் பாதுகாப்பையும் வகுத்துக் கொடுத்தது. ஆகவே, சாம்பல் நதியையே தன் கடைசி எல்லையாகக் கொண்டான் தோரமானா. இந்த நிலைமையில் சாம்பல்

நதியைத் தாண்டி தோரமானாவின் படைகளை அடைந்து தோரமானா எங்கிருக்கிறான் என்பதை விசாரித்தறிந்து, அவனிடம் கடிதத்தைக் கொடுக்க வேண்டும். இந்த வேதனை யைப் பற்றி நினைக்கும்போதே ராகுலனுக்குப் பிராணன் போய்விடும் போலாகிவிட்டது. குதிரையை மெள்ளத் தட்டி விட்டுக் கொண்டே சாம்பல் நதியின் படகுத் துறைக்கு வந்து சேர்ந்தான். அங்குள்ள ஒரு படகுக்காரனிடம் “அக்கரைக்குப் படகு விட முடியுமா?” என்று கேட்டான். படகுக்காரன் இவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “படகு விடலாம். ஆனால் அக்கரைக்குப் போய்ச் சேருவது சுலபமல்ல” என்று பதில் கூறினான்.

“போய்ச் சேர்வதில் அப்படி என்ன கஷ்டமிருக்கிறது?”

“அக்கரையிலிருக்கும் ஹூணப் படையினர், படகு போகும்போது சில சமயங்களில் விளையாட்டாகத் தீப் பந்தங்களையும் ஈட்டிகளையும் படகை நோக்கி விட்டெறி வார்கள். அவற்றால் படகிலிருப்பவர்கள் மடியாதிருந்தால் கண்டிப்பாய் அக்கரை போய்ச் சேர்ந்துவிடலாம்” என்றான் படகுக்காரன். ராகுலனுக்கு உடம்பு ஒரு முறை நடுங்கிற்று. படகுக்காரன் சொல்வதில் எந்தவிதத் தவறுமில்லை யென்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஹூணர்களுக்கு இந்த மாதிரிப் பிறரை ஹிம்ஸித்து விளையாடுவதில் ஒரு விசேஷ திருப்தி உண்டு. அந்தத் திருப்திக்குத் தான் பலியாகி விட்டால் என்ன செய்வதென்று யோசித்தான்.

அவன் முகத்தில் பிரதிபலித்த பயச் சாயையைக் கண்ட படகுக்காரன், “எஜமான்! இந்த மாதிரி தினசரி நடப்ப தில்லை. ஏதாவதொரு நாள் அவர்கள் குஷியாயிருக்கத் தோரமானா அனுமதி கொடுப்பான். அன்றுதான் இந்தக் கூத்து நடக்கும். மற்ற நாட்களில் சாதாரணப் படகுப் போக்குவரத்துக்கு ஹூணர்கள்கூட அதிக இடைஞ்சல்



செய்யமாட்டார்கள். அக்கரையில் இறங்கியதும் உங்களைச் சோதனை போடுவார்கள். நீங்கள் போர் வீரராயில்லாமல் சாதாரண பிரஜையாயிருந்தால் ஊருக்குள் செல்ல அனுமதிப்பார்கள். ஹூணர்கள் இப்படியிருப்பார்களா என்று ஆச்சரியப்படாதீர்கள். தோரமானா அவர்களுக்குத் தலைவனான பின் ஹூணர்கள் எவ்வளவோ கட்டுப் பாட்டுக்குள் வந்துவிட்டார்கள். அதுவும் எங்கள் பழைய உபசேனாதிபதி அவர்களோடு சேர்ந்துகொண்ட பின் தோர மானாவின் சைன்னியக் கட்டுப்பாடு குப்த ராஜ்ய சைன் னியக் கட்டுப்பாட்டை விடப் பலத்துவிட்டது. இருந்தாலும் பிறவிக் குணம் போகுமா? ஆகையால், ஒரிரு நாட்களில் ஹூணர்கள் வெறிக்கும் தோரமானா இடங் கொடுக் கிறான்,” என்று படகுக்காரன் ராகுலனுக்கு நிலைமையை விவரமாக எடுத்துச் சொன்னான்.

படகுக்காரனின் சொற்கள் ராகுலனுக்கு எந்தவிதத் தைரியத்தையும் ஊட்டவில்லை. ‘எப்படியும் அக்கரை போவது ஆபத்து ஆபத்துதான். போய் இறங்கிய பின்புதான் உயிர் நம்முடையது’ என்ற நினைப்பில் ஏதேதோ யோசித்து, “அக்கரை போவதற்கு வேறு ஏதும் வழியில்லையா?” என்று கேட்டான்.

படகுக்காரன் அவனைப் பார்த்துப் பலமாகச் சிரித்துக் கொண்டே, “நதியைத் தாண்ட வேண்டுமானால் படகு ஒன்றுதான் வழி. எதிர்க்கரையில் எந்த மூலையில் நீங்கள் போய் இறங்கினாலும் படைகள் இருக்கத்தான் செய்யும். இத்தனை அபாயத்திலும் சாதாரண ஜனங்கள் அக்கரைக் கும் இக்கரைக்கும் போய்க்கொண்டுதானிருக்கிறார்கள். உங்களுக்குத் தைரியமிருந்தால் சொல்லுங்கள். நான் படகு விடத் தயார்” என்றான். அவன் சொல்லிக் கொண்டிருந்த போது சூரியனும் மலைவாயிலில் மறைந்து இருள் மெல்ல சூழத் தொடங்கியது.

சாம்பல் நதியின் எதிர்க்கரையில் தீபங்கள் உலாவ ஆரம்பித்தன. தூரத்திலிருந்த கூடாரங்களிலும் விளக்குகள் தெரிந்தன. படை வீரர்களின் இராக்கால எச்சரிக்கை முழக்கங்கள் துவங்கின. வெகுநேரம் குதிரைமீது சாய்ந்து கொண்டு யோசித்த ராகுலன், "சரி, உன் படகைக் கொண்டு வா" என்றான். சிறிது நேரத்தில் தயாரான படகில் தானும் ஏறிக்கொண்டு குதிரையையும் ஏற்றினான் ராகுலன். படகுக் காரனோடு நீரில் கோல் ஆழ்த்திப் படகை உந்த இன்னும் நான்கு ஆட்களும் ஏறிக்கொண்டனர். படகு பாதி நதியில் போகும்போது படகுக்காரன் தன் சகாக்களை நோக்கி, "தெய்வத்தை நினைத்துப் படகைத் தள்ளுங்கள். அபாய எல்லை சமீபித்து விட்டது" என்றான். ராகுலன், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். திடீரென எதிர்க்கரையில், "படகு, படகு" என்ற கூச்சல் கிளம்பியது. தீப்பந்தங்கள் படகு வரும் கரையோரமாக வந்து நின்றன. அந்தப் பந்தங்களில் பளபளத்தன, ஹூணர்களின் வாட் களும் ஈட்டிகளும்.

படகிலிருந்து அக்கரையில் இறங்கிய ராகுலன் அமைதி யாகப் பெருமூச்சு விட்டான். படகுக் கூலியைக் கொடுத்து முடிந்ததும் படகுக்காரன் குதிரையையும் இறக்கி ராகுல னிடம் ஒப்படைத்தான். ஹூணர்கள் நடத்திய சோதனை மிகக் கொடுமையாக இருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த கூடாரத்துக்குள் சில வீரர்கள் அவனை அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த அவர்கள் தலைவன் அவனை விசாரித்தான். சில கேள்விகள் கேட்ட பின் ராகுலன் சட்டை களை வீரர்கள் முரட்டுத்தனமாகக் கழற்றிச் சோதித்தார்கள். இந்த அனுபவத்துக்கும் குப்த ராஜ்ய அனுபவத்துக்கும் ஏராளமான வித்தியாசமிருந்தது. காட்டுமிராண்டிகளுக்கும், நாகரிக மக்களுக்கும் உள்ள வித்தியாசந்தான் அது. குப்த ராஜ்யத்தில் சோதனை போடு முன்பு சோதனையிடப்படு



கின்ற மனிதனுக்கு ஆசனம் கொடுப்பார்கள். 'கொஞ்சம் மேல் சட்டையைக் கழற்றித் தருகிறீர்களா?' என்று மரியாதை யாகக் கேட்டு வாங்குவார்கள். ஆனால், ஹூண வீரர்கள் ராகுலனுக்கு எந்தவித மரியாதையும் காட்டவில்லை. அவனுக்கு உட்கார ஆசனமளிக்கவில்லை. சட்டையை அவர்களே கழற்றியபின் அதிலிருந்த சாமான்களையும் அவசரமாக எடுத்துத் தங்கள் தலைவனுக்கு எதிரிலிருந்த மஞ்சத்தில் எறிந்தார்கள்.

தலைவனான ஹூணன், ராகுலன் பையிலிருந்து ஸ்வர்ணங்களை ஆவலுடன் எடுத்துக்கொண்டு "ஹி... ஹி... ஹி..." என்று பயங்கரமாகச் சிரித்து சந்தோஷப்பட்டான். வெகுநேரம் அந்த அட்டூழியங்களைப் பொறுத்துக் கொண் டிருந்த ராகுலன், "சோதனை முடிந்து விட்டதா?" என்று சற்று அதிகாரமான குரலில் கேட்டான். அவன் அதிகாரக் குரலைக் கேட்ட வீரர்களின் தலைவன் ஆச்சரியத்துடன் சிறிதுநேரம் பார்த்துவிட்டு, "ஏன், என்ன அப்படி அவசரம்?" என்று விசாரித்தான்.

"நான் அவசர வேலையாக உங்கள் தலைவர் தோர மானாவைப் பார்க்க வேண்டும்" என்றான் ராகுலன்.

"என்ன வேலையாகப் பார்க்க வேண்டும்?"

"அதை உன்னிடம் சொல்வதற்கில்லை. இதோ இதைப் பார்" என்று சொல்லிக்கொண்டே இடுப்பில் சொருகியிருந்த செய்திச் சுருளை வீரர்கள் தலைவனிடம் நீட்டினான் ராகுலன்.

வீரர்கள் தலைவன் அதை மிகுந்த ஜாக்கிரதையுடன் கவனித்துவிட்டு, "இதில் குப்த ராஜ்ய முத்திரைகள் இருக் கின்றன. இதை யார் கொடுத்தது உன்னிடம்?" என்று கேட்டான்.

"அதைத் தோரமானாவிடம்தான் நேரில் சொல்ல வேண்டும்."

"அப்படியானால் நீ ஒரு வார காலம் காத்திருக்க வேண்டும். சேனாதிபதி தோரமானா முக்கிய அலுவலாக மூலஸ்தானத்துக்குப் போயிருக்கிறார். திரும்பி நதி தீரத்து பாசறைக்கு வர இன்னும் ஒரு வாரம் நிச்சயமாக ஆகும். தவிர, இந்த மாதிரிச் செய்திகளை யாரும் நேரிடையாகச் சேனாதிபதியிடம் சேர்க்க முடியாது. ஆகையால் இந்தச் செய்தி சேர வேண்டிய இடத்திற்கு உன்னை அனுப்பு கிறேன்."

இப்படிச் சொல்லிவிட்டு வேறு இரண்டு ஹூண வீரர்களை வரவழைத்தான். "இவர் குப்த ராஜ்யத்திலிருந்து அவசரச் செய்தி கொண்டு வந்திருக்கிறார். இவரைக் கொண்டு போய் சேனாதிபதியின் அந்தரங்க அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு வா" என்று உத்தரவிட்டான். வீரர்களைத் தொடர்ந்து கூடாரத்துக்கு வெளியே வந்த ராகுலனைக் குதிரை மீது ஏறும்படி வீரர்கள் கட்டளையிட்டார்கள். "இங்கிருந்து எவ்வளவு நேரம் பயணம் செய்ய வேண்டும்? நான் ஒரு வாரப் பிரயாணத்தால் மிகவும் அலுத்திருக்கிறேன். கொஞ்சம் ஆகாரம் அருந்திப் பயணத்தைத் துவக்கலாமா?" என்று ராகுலன் கேட்டான். வீரர்களில் ஒருவன், "ஆகாரம் கிடைக்க இன்னும் அரை காதம் பயணம் செய்ய வேண்டும். நீங்கள் போய்ச் சேர வேண்டிய இடம் மூன்று நாள் பிரயாணமிருக்கிறது" என்றான். ராகுலன் மிகுந்த ஆயாசத் தோடு குதிரையில் ஏறி அந்த இரண்டு வீரர்களிடம் இல்லாத கஷ்டங்களைப் பட்டு மூன்று நாள் பயணத்துக்குப் பின் நீலதுர்க்கத்துக்கு வந்து சேர்ந்தான்.

சாம்பல் நதிக்கு வடமேற்கில் ஸிந்துவின் உபநதியான சதத்ருவுக்குத் தென்கிழக்கில் நடுமத்தியிலிருக்கும் ஓர்



ஊரைத் தோரமானா தன் தற்காலிகத் தலைநகரமாக்கிக் கொண்டிருந்தான். தூரப் பார்வைக்கு நீலமாகத் தெரியும் நாலைந்து சின்னஞ்சிறு மலைகளுக்கு இடையேயிருந்த தாலும் பழுதாகிக் கிடந்த ஒரு கோட்டையும் அந்த ஊரில் இருந்ததாலும் அதை ஜனங்கள் நீலதுர்க்கம் என்றழைத்து வந்தார்கள். தோரமானா இதைத் தன் தற்காலிக நகரமாக்கிக் கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. மாளவத் திற்கும் அதற்கும் தூரம் மிகக் குறைவென்பது ஒன்று. இரண்டாவது, மலைவாசல் முதலிய பிராந்தியங்களில் ஒரு கண்ணை வைத்திருப்பதற்கும் அந்த இடம் வசதியானது என்பது. இந்த இரண்டு காரணங்களாலும் தலைநகரமாக்கிக் கொண்ட நீலதுர்க்கத்தை வெகு விரைவில் மிக வசீகரமான இடமாக்கி விட்டான் தோரமானா.

நீலதுர்க்கத்திற்கு வந்ததும் ஹூண வீரர்கள் ராகுலனை நகரத்தின் நடுவிலிருந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றார் கள். மாளிகையைச் சுற்றி பலமான காவலிருந்தபடியால் ஒவ்வோர் இடத்திலும் தாமதப்பட்டே உள்ளே நுழைய வேண்டியதாயிற்று. ராகுலனை உள் கூடத்தில் உட்கார வைத்துவிட்டு வீரர்கள் மட்டும் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியின் அறைக்குள் நுழைந்தார்கள். சற்று நேரத்திற் கெல்லாம் வீரர்கள் வந்து ராகுலனை அறைக்குள் வரும்படி சமிக்ஞை செய்து, "அதிகாரியிடம் தலைவணங்கிக் கொண்டே செல், அவர் அனுமதிக்குப் பின் தலையை உயர்த்திப் பதில் சொல்" என்று சம்பிரதாயத்தைச் சொல்லி எச்சரித்தார்கள். ராகுலன் கூடத்தைத் தாண்டி அடுத்த அரங்கில் நுழைந்தான். அந்தரங்க அதிகாரியின் அறை கூடத்தை விடச் சற்று உயரத்திலிருந்தது. கூடம் விட்ட இட திலிருந்து உயரே ஓடிய சில படிகளுக்கு மேல் ஒரு கத இருந்தது. அந்தக் கதவின் முன்பாக நின்று கொண்டிருந் ஒரு பணிப்பெண் செய்திச்சுருளை ராகுலன் கையிலிருந்

வாங்கி முத்திரைகளைப் பரிசோதித்த பின்பு, அவனிடம் சுருளைத் திரும்ப அளித்து உள்ளே செல்லும்படி ஆக்ஞாபித்தாள். ராகுலன் வீரர்கள் தொடர அவர்கள் முன்பே எச்சரித்தபடி தலையை வணங்கிக்கொண்டே அறைக்குள் நுழைந்தான். தலையை நிமிர்த்தியதும் எதிரேயுள்ள ஆசனத்தில் புன்சிரிப்புடன் ஓர் அழகி உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

"நான் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியைப் பார்க்க வந்தேன்" என்றான் ராகுலன்.

பக்கத்திலிருந்த வீரர்களில் ஒருவன், "டேய் முட்டாள்! ஏதாவது உளறாதே! இவர்தான் அந்தரங்க அதிகாரி. செய்தி ஓலையைக் கொடு" என்றான்.

ராகுலன் திக்பிரமையுடன் ஓலையை நீட்டினான். அந்தரங்க அதிகாரி கைநீட்டி வாங்கி அதன் முத்திரைகளைக் கவனித்தாள். அந்தச் சமயத்தில் அறையின் கோடியிலிருந்த ஒரு கதவு திறந்தது. "காமினி" என்று கூப்பிட்டுக் கொண்டே அஜித் சந்திரன் உள்ளே நுழைந்தான். அந்தரங்க அதிகாரி திரும்பிப் பார்த்து, "உபாத்தியாயரா! வாருங்கள்" என்றாள்.

# 26. காமினியின் புது உருவம்

திடீர் திடீரென இருமுறை ஆச்சரியத்தால் தாக்கப்பட்ட ராகுலன் இறுதியில் திகைப்பையே அடைந்தான். தோரமானாவின் அதிகாரி என்பவன் யாராவது ஹூணனாயிருப்பான்; அவனிடம் பேசித் தனது நிலைமையைச் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்த ராகுலனுக்கு அந்த அதிகாரி ஒரு பெண் என்று தெரிந்ததும் அளவு கடந்த ஆச்சரியத்துக்கு இலக்கானதோடு நம்பிக்கையையும் இழந்தான். அத்துடன் அந்தப் பெண் ஹூணர்கள் ஜாதியாகவுமில்லாமல் ஹிந்துஸ்தானப் பெண்ணாக இருக்கவே அவன் நாடி பாதி தளர்ந்து விட்டது. அத்துடன் அவளைக் காமினி என்று சொந்தமாக அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவன் தன் திருமணத்துக்குப் போட்டியாகவும், தன் மனைவியாக வரவிருந்தவளின் காதலரங்கத்தில் வெற்றி வீரனாகவும் திகழ்ந்த அந்தப் பாழாய்ப்போன உபாத்தியாயன் என்பதை அறிந்த ராகுலனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த உயிரும் போய்விட்டது. திக்பிரமை பிடித்து நின்று கொண்டிருந்தான்.

உள்ளே நுழைந்த உபாத்தியாயன் நேராகக் காமினியிடம் வந்து அவள் கைகளிரண்டையும் பிடித்துக்கொண்டு, "என்ன காமினி! இவன் யார்? ஏதாவது முக்கிய விசாரணையாயிருந்தால் சொல்லிவிடு. சற்று நேரம் கழித்து வருகிறேன்" என்றான்.

"அப்படியொன்றும் முக்கிய விசாரணையில்லை. குப்த ராஜ்யத்திலிருந்து ஏதோ செய்தி கொண்டு வந்திருக்கிறான். அதுவும் சேனாதிபதியின் சொந்தப் பெயரில் விலாசமிடப்

பட்டிருப்பதோடு ராஜ முத்திரைகளும் வைக்கப்பட்டிருக் கின்றன. ஆகையால், நான் சுருளை உடைத்து ஓலையைப் படிப்பதற்கில்லை," என்று சொல்லிக்கொண்டு திரும்பி ராகுலனை நோக்கினாள்.

உபாத்தியாயனும் ராகுலனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். அந்தப் பார்வையைத் தாங்கமாட்டாத ராகுலன் தலையைக் கீழே தொங்கப் போட்டுக்கொண்டான். உபாத்தி யாயன் பார்வையிலிருந்து ஊகிப்பதானால, உபாத்தியாய னால் அவனைச் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையென்றே தோன்றியது. சித்ராவைக் காப் பாற்றுவதாகச் சென்ற அந்த இரவில், மெய்சிலிர்க்கும் படியான வில்லவரின் புரட்சிக்கு இடையில் பல ஹூணர் களின் கூட்டத்தில், மாளிகையில் ஏதோ ஒரு தடவை பார்த்த அந்த மனிதனை அஜித் சந்திரன் சரியாக யார் என்று புரிந்து கொள்ள முடியாமலிருந்தால் அது வியப்படையக்கூடிய விஷயமல்ல. தவிர, சுமார் ஒன்பது நாள் பயணத்தில் புழுதி யும் வியர்வையும் ராகுலன் முகத்தைப் பரம விகாரமாக அடித்திருந்தன. அத்துடன் ஹூணப் பிரபுக்கள் படாடோப உடையில் ராகுலன் வரவில்லை. குப்த ராஜ்யத்தில் சாதாரண வீரர்கள் அணியும் உடையிலேயே வந்திருந்தான். பூரகுப்தன் ராகுலனைச் செய்தியுடன் அனுப்பியிருந்தாலும் தன்மேல் எந்தச் சந்தேகமும் விழக்கூடாது என்பதற்காக ராஜ தூதர்கள் அணியும் உடையை அவனுக்குக் கொடுக் காமல் சாதாரண வீரர்கள் அணியும் உடையையே அளித் திருந்தான். அதனால்தான் ராகுலன் பல நகரங்களில் சோதனைக்குள்ளாகி, இல்லாத இம்சையெல்லாம் பட்டு நீலதுர்க்கத்துக்கு வந்து சேரவேண்டியதாயிற்று. ராமேசுவரத் துக்குப் போயும் சனீஸ்வரன் விடவில்லையென்ற கதையாக நீலதுர்க்கத்துக்கு வந்தும் ராகுலன் ஜாதகம் பழைய ஸ்திதி யிலேயே இருந்தது.



உபாத்தியாயன் நிதானம் நிறைந்த தன் வழக்கமான பார்வையை அவன்மீது வீசினான். அந்தப் பார்வையோடு அஜித் சந்திரன் இதழ்களில் புன்முறுவலும் அரும்பியது. காமினி, உபாத்தியாயன் உதடுகளில் தோன்றிய புன் சிரிப்பைப் பார்த்தாள். "எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நானும் சிறிது காலம் குப்தர்களிடம் சேவை செய்து இருக்கிறேனென்பது உனக்குத் தெரியுமல்லவா?"

"எனக்கு மட்டுமா தெரியும். புருஷபுரத்து வில்லவர் எல்லோருக்கும் தெரியும். அடிலன் சாட்டைக்குத் தெரியும். அதைவிட உங்கள் உள்ளத்தைச் சாட்டை கொண்டு அடித்த சித்ராதேவியின் எழிலுக்குக் கூடத் தெரியும்," என்று சொல்லிவிட்டுக் காமினி பலமாகச் சிரித்தாள்.

எதிரே குதிர்போல் நின்றுகொண்டிருந்த ராகுலன் மனம் பெரிய எரிமலையாகிக் கொண்டிருந்தது. ஆனால் காமினியோ உபாத்தியாயனோ அவன் ஒருவன் இருக்கிறான் என்பதைக் கவனிக்கவேயில்லை. காமினி, மஞ்சத்தில் தன் பக்கத்தில் உட்காரும்படி உபாத்தியாயனை அழைத்தாள். உபாத்தியாயனும் அவளுக்கு வெகு அருகில் உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்து, "காமினி! ஐந்து வருஷங் களில் நீ எவ்வளவு தூரம் மாறிவிட்டாய்! உன்னை இப்பொழுது உன் பாட்டனார் பார்த்தால்கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாது. காட்டுப் புஷ்பம் போல் எழில் வாய்ந்த கள்ளங்கபடமற்ற வில்லவர் பெண் காமினி எங்கே! எழில் அப்படியே இருந்தாலும் கபடமே அஸ்திவாரமான ராஜாங்க தந்திரங்களைக் கையாண்டு சேனாதிபதி தோர மானாவின் அந்தரங்கக் காரியதரிசியாக விளங்கும் இந்தப் புது அழகி எங்கே? காலத்தின் கரங்கள், நிகழ்ச்சிகளின்

வேகம் மனிதர்களை எவ்வளவு தூரம் மாற்றிவிடுகிறது, காமினி!" என்றான் உபாத்தியாயன்.

காமினி உடனே பதில் சொல்லவில்லை. யாரோ ஒரு சாதாரண வீரன் தான் கொடுத்த செய்திக்குப் பதில் அளிக்கக் காத்திருக்கும்போது, தன் சொந்த விவகாரங்களை உபாத்தியாயன் அவன் எதிரில் எதற்காகப் பேசுகிறான் என்பதை காமினியால் ஊகிக்க முடியவில்லை. ஆனால், ஆழ்ந்த காரணம் இல்லாமல் உபாத்தியாயன் பேசமாட்டான் என்பதை காமினி சென்ற ஐந்து வருஷ அனுபவத்தில் தெரிந்து கொண்டாளாகையால் அவளும் மிக சகஜமாகச் சம்பாஷணையில் கலந்து கொண்டாள்.

"எல்லாம் உங்கள் தயவுதானே உபாத்தியாயரே" என்றாள் காமினி.

"என் தயவு என்ன காமினி! உன்னைக் காப்பாற்றியது சேனாதிபதி தோரமானா. அடிலன் கையிலிருந்து உன்னை விடுவிக்க நான் முயன்றேன். தோற்றேன். தோரமானா உன்னை அடிலனிடமிருந்து உன் மானத்துக்குப் பங்கமில் லாமல் விடுவித்தார்; உன்னைக் காப்பாற்றி உனக்குப் பெரிய அந்தஸ்தையும் கொடுத்தார்."

"ஹூணர்களில் தோரமானா ஓர் அதிசயப் பிறவி. எதிரிகளைச் சித்திரவதை செய்யாமலும், ஸ்திரீகளை ஹிம்சிக்காமலும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளக் கூடியவர். தோரமானா மட்டும் முன்பே ஹூணர்கள் தலைவராயிருந்தால் இத்தனை நாள் குப்த ராஜ்யம் காற்றில் பறந்திருக்கும்..." என்று பேசிக்கொண்டே போன காமினி யின் கண்கள் ஏதோ கனவு காண்பவை போல் மாறி விட்டன. அவள் பழைய உலகத்தில் சஞ்சரிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட அஜித் சந்திரன், மௌனமாக மஞ்சத்தில் சாய்ந்துகொண்டு அவளைப் பேச விட்டான்.



காமினி நிற்காமல் பேசிக்கொண்டே போனாள்: "ஆம்! குப்த ராஜ்யம் காற்றில் பறந்திருக்கும். தோரமானா எங்கே? அந்தப் பதர் அடிலன் எங்கே? அந்தப் பழைய காட்சிகள் இப்பொழுது கூட என் கண்முன் நிற்கின்றன. உபாத்தி யாயரே! கல்யாண ஊர்வலத்திலிருந்து துராக்கிருதமாக என்னைத் தூக்கிச் சென்ற அடிலன், அவன் மாளிகைக்குப் போனதும் தன் வீரர்களைப் பார்த்து, 'இவளை என் பள்ளியறையில் தள்ளுங்கள்' என்று ஆணையிட்டுவிட்டு என்னைப் பார்த்துப் பயங்கரமாக சிரித்தான். அந்தச் சிரிப்பை இன்றைய இந்த என் நிலையில் நினைத்துக் கொண்டாலும் பயமாகத்தானிருக்கிறது. சிரித்துக்கொண்டே அடிலன் காமவெறி நிரம்பிய கண்களுடன் சொன்னான்: 'அடி! உனக்குக் கல்யாணம் இன்று எப்படியும் நடக்கும். ஆனால், மாப்பிள்ளை அந்த மடையனல்ல. வீரனான அடிலன் இருக்கிறேன், பயப்படாதே' என்றான். அதைக் கேட்டு சப்த நாடியும் ஒடுங்கிய என்னை வீரர்கள் இழுத்துச் சென்று ஓர் அறையில் தள்ளினார்கள். அன்றிரவு உங்களை அடித்ததாலுண்டான குழப்பத்தாலும், சோர்வாலும் அடிலன் என் அறைக்கு வரவில்லை. ஆனால், வெகு ஜாக் கிரதையாகத் தோரமானா வந்தார். 'பெண்ணே புறப்படு' என்ற வார்த்தைகளை அவர் மெதுவாகச் சொன்னதில் தொனித்த அன்பு இப்பொழுதும் என் இதயத்தில் கனிகிறது. அவர் உதவியால் நான் மாளிகையிலிருந்து மறைந்தது, அடிலனுக்குப் பெரிய விந்தையாயிருந்திருக்க வேண்டும். அவர் அப்படி என்னைக் காப்பாற்றியதால் வில்லவருக்கு அவரிடம் எவ்வளவு நம்பிக்கை, மரியாதை இல்லாவிட்டால் அவர் தூண்டுகோலின் மேல் அடிலன் மாளிகையைக் கொளுத்த முன் வருவார்களா!"— என்று சொல்லிக் கொண்டே போன காமினியின் சிந்தனை அலைகளை உபாத்தியாயன் இடையில் வெட்டினான்.

"நீயும் தோரமானாவும் அடிலன் மாளிகையைக் கொளுத்த முற்பட்டதை நான் கெடுக்க இருந்தேனே காமினி" என்று குறுக்கே பேசி வைத்தான் உபாத்தியாயன்.

காமினி கனவுலகத்தை விட்டு நனவுலகத்துக்கு வந்து சேர்ந்தாள். "என்ன உபாத்தியாயரே? என்னை மீண்டும் பழைய கதையைச் சொல்லவிட்டீர்களே! அந்தக் கதையை ஆரம்பித்தால் நான் உணர்ச்சி வயப்பட்டுப் பேசுகிறேன் என்பதைத் தெரிந்துகொண்டு எத்தனை தடவைதான் வேடிக்கைப் பார்ப்பீர்கள்" என்றாள் சிரித்துக்கொண்டே.

"அந்தக் கதையைத் திரும்பத் திரும்பக் கேட்பதில் எனக்கு விருப்பம் காமினி. ஏனென்றால் சேனாதிபதி தோரமானாவிடம் உனக்குள்ள ஆழந்த பக்தியை அந்தக் கதையை நீ சொல்லும் வேகத்தில் நிரூபிக்கிறாய். நீ சேனாதிபதியவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறாய் என்பதை யாரும் மறுக்க முடியாது" என்றான் அஜித் சந்திரன்.

"உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மட்டும் மறுக்க முடியுமா? மலைவாசல் சம்பவங்கள் இருக்கட்டும். இந்த ஐந்து வருஷங்களில் நீங்கள் அளித்துள்ள கல்வியறிவு, ராஜ விவகாரங்களைக் கையாளும் முறைகள் இவற்றிற்கு நான் கடமைப்பட்டவளில்லையா? காட்டுப் பெண்ணை, நாட்டுப் பெண்ணாக்கி, நவநாகரிகத்தில் சிக்க வைத்த பாத்யதை..."

"தோரமானாவுக்குத்தான். அவர் உத்தரவுப்படிதான் நான் உன்னை இந்தப் பதவிக்குத் தயார் செய்தேன். இந்த உண்மையை மறைக்க முடியுமா காமினி! ஆயிரம் ஹூணர்களின் ஈட்டிகளைவிட என்னை நம்பலாம் என்பது சேனாதிபதிக்கு நன்றாகத் தெரியும். தவிர, நான் பேசும் போதெல்லாம் நீ சொந்தக் கதைகளைப் பேசுகிறாயே தவிர, ராஜாங்க விவகாரங்களைப் பற்றிப் பேச்சு உண்டா? உதாரணமாகக்



கேட்கிறேன். சேனாதிபதி தோரமானா திடீரென்று எதற்காக மூலஸ்தானபுரம் போயிருக்கிறார், சொல் பார்க்கலாம்?" என்று கேட்டான்.

காமினியின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. அவள் நேராகப் பதில் சொல்லவில்லை. "உங்களுக்குச் சேனாதிபதி இடும் உத்தரவுகளை நீங்கள் என்னிடம் சொல்வீர்களா?" என்று பதிலுக்குக் கேட்டாள்.

"கண்டிப்பாய்ச் சொல்வேன். நீ எஜமானரின் அந்தரங்க அதிகாரியல்லவா?" என்றான் அஜித் சந்திரன்.

காமினி பதில் சொல்லாமல் மஞ்சத்திலிருந்து எழுந்திருந்து சற்று நேரம் அஜித் சந்திரனை மௌனமாகப் பார்த்துவிட்டு, "நீங்கள் சொல்வது வாஸ்தவம். உபாத்தியாயரே! ராஜாங்க விவகாரங்களில் நான் எஜமானருக்கு எப்படித் துரோகம் செய்ய முடியும்? கட்டிய கணவனும் காப்பாற்றப் பின்வாங்கிய சமயத்தில் காப்பாற்றியவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நான் இழந்தால் எனக்கு நரகத்தைத் தவிர வேறு என்ன கிடைக்கும்?" என்றாள்.

அடிலன் குரூரத்தால் பாரத மக்களை எப்படி விரோதித்துக் கொண்டான். தோரமானா அன்பினாலும், நிதானத்தாலும், எப்படிப் பாரத மக்களில் பாதிப் பேரைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டான் என்ற இரண்டையும் சீர் தூக்கிப் பார்த்த அஜித் சந்திரன், தோரமானா இந்துஸ்தானம் முழுவதையும் ஆக்ரமிக்க அதிகநாள் ஆகாது என்று நன்றாக அறிந்துகொண்டான். தோரமானாவுக்கு அகப்பட்டிருக்கும் அந்தரங்க அதிகாரியின் எஜமான விசுவாசத்தை யாரும் அசைக்க முடியாதென்பதையும் புரிந்து கொண்டான். உபாத்தியாயன் ஏதோ யோசிப்பதைக் கண்ட காமினி, "என்ன உபாத்தியாயரே! சித்ராதேவியைப் பற்றி யோசிக்க ஆரம்பித்துவிட்டீர்களா! நான் என்ன

செய்யட்டும்! உங்கள் காதலியைத் தேட ராஜமார்க்கங் களிலுள்ள எல்லாப் படைகளுக்கும் உத்தரவு அனுப்பியிருக் கிறேன். நீங்கள் நேராக என்னிடம் வரச் சொன்னவள், தம்பியுடன் எங்கு அந்தர்த்தனமாகியிருப்பாள்!" என்று கேட்டாள்.

சித்ராதேவியின் பெயர் இரண்டாவது தடவை பிரஸ்தாபமானதோடு அவள் உபாத்தியாயனை சமீபத்தில் சந்தித்திருக்கிறாள் என்பதையும் கேள்விப்பட்ட ராகுலன் கவிழ்ந்திருந்த தன் தலையைச் சரேலென உயர்த்தி, காமினி யையும் உபாத்தியாயனையும் பார்த்தான். காமினி அவனைக் கவனிக்கவில்லை. ஆனால் எதையும் தப்பவிடாத உபாத்தி யாயன் கண்கள் மட்டும், ராகுலன் திடுக்கிட்டதைக் கண்டு கொண்டன.

# 27. அவன் யார் ?

தூதன் திடுக்கிட்டதைக் கண்ட உபாத்தியாயன் சற்று நேரம் ஏதோ சிந்தித்தான். பிறகு காமினியை நோக்கி, "காமினி! தூதனை ஏன் நிற்க வைத்திருக்கிறாய்? அவனை அனுப்பிவிடுவதுதானே" என்றான். காமினி ஆச்சரியம் தோய்ந்த கண்களுடன் உபாத்தியாயனைப் பார்த்தாள். தூதனுக்குப் பதில் சொல்ல விடாமல் தன்னிடம் இத்தனை நேரம் பேச்சுக் கொடுத்துப் பழைய கதைகளையெல்லாம் கிளறி விட்டதல்லாமல், தூதன் காத்திருப்பதற்குப் பழியைத் தன் மேலேயே உபாத்தியாயன் போடுகிறானே என்று நினைத்தாள். காமினி பழைய மலைவாசல் காட்டு புஷ்பமாக இருந்திருப்பாளானால் இந்த நினைப்பு ஏற்பட்டதற்கு உபாத்தியாயன் மேல் ஆயிரம் கேள்விகளைத் தொடுத்திருப் பாள். வார்த்தைகள் பிரளய வேகத்தில் உபாத்தியாயன் மீது குவிந்திருக்கும். ஆனால் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் அதிகமாக உதிரவில்லை; உபாத்தியாயன் போக்கினால் ஏற்பட்ட நினைப்பு சிந்தனையில் தோன்றியதை முகமே பிரதிபலித் தது. அவள் அழகிய உதடுகளில் தோன்றிய விஷமப் புன் முறுவல் அவள் சற்றும் உபாத்தியாயனிடம் ஏமாறவில்லை யென்பதை ஊர்ஜிதம் செய்தது. அந்தப் புன்முறுவலைத் தொடர்ந்த வார்த்தைகளில் சிறிது ஏளனமே கலந்திருந்தது. "தவறுதான் உபாத்தியாயரே? தூதனைக் காக்க வைத்து விட்டு ஏதோ மனம் போனபடியெல்லாம் பேசிவிட்டேன். மன்னியுங்கள்?" என்று சொல்லிவிட்டுக் காமினி, தூதனைக் காவல் புரிந்திருந்த வீரர்களில் ஒருவனை அருகே வரும்படி சமிக்ஞை செய்தாள். பயபக்தியுடன் நெருங்கிய வீரனிடம்,

சேனாதிபதியவர்கள் வருமளவும் தூதனைக் காத்திருக்கச் சொல்லுங்கள். தூதனுக்கு வேண்டிய சகல சௌகரியங் களையும் செய்து கொடுங்கள்" என்று உத்தரவிட்டாள்.

வீரர்களும் ராகுலனும் வெளியே சென்ற பின்னர் காமினி உபாத்தியாயனைப் பார்த்து, "இது என்ன நாடகம் உபாத்தியாயரே?" என்று கேட்டாள்.

உபாத்தியாயன் ஒரு விநாடி மௌனம் சாதித்தான். பிறகு காமினியைப் பெருமை நிறைந்த விழிகளுடன் நோக்கி னான். "காமினி! நீ குருவுக்கு மிஞ்சிய சிஷ்யையாகிவிட்டாய். பிறர் உணர்ச்சிகளைப் படிப்பதில் நான் இனிமேல் உன்னிட மிருந்துதான் பாடம் சொல்லிக்கொள்ள வேண்டும்" என்றான்.

"இது சுய ஸ்தோத்திரமல்லவா!"

"எப்படி சுய ஸ்தோத்திரமாகும்?"

"சிஷ்யை கெட்டிக்காரியென்றால் உபாத்தியாயர் பெருமைதானே முதலில் உயரும்."

"உண்மைதான், உபாத்தியாயனுக்கும் மீறிய சக்தி சிஷ்யனுக்கு உண்டானால்..."

"அதுவும் உபாத்தியாயர் அருள்தான். சாதாரணமாக வித்தை பூராவும் சீடனுக்குத் தானம் செய்யும் குருமார்கள் மிகக் குறைவு. சீடன் தனக்கு எப்பொழுதும் ஒருபடி கீழேயே இருக்க வேண்டுமென்று குறுகிய மனப்பான்மையுடன்தான் ஆசிரியர்கள் நடந்து கொள்கிறார்கள். வித்தை முழுவதும் கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயனுக்குப் பெருந்தன்மை மட்டுமல்ல, தீவிரத் துணிச்சலும் இருக்கும்."

"துணிச்சலா?"

"ஆம்! தன்னம்பிக்கையால் ஏற்படும் துணிச்சல்! என்ன சொல்லிக் கொடுத்தாலும் சீடன் த்ன்னை மிஞ்ச முடியாது என்ற தன்னம்பிக்கை சில உபாத்தியாயர்களுக்குத் துணிச்ச



லைக் கொடுக்கிறது. ஆகவே ஒளிவு மறைவு இன்றி வித்தை பூராவும் கற்றுக் கொடுக்கிறார்கள்."

"சிற்சில சமயங்களில் என் உபாத்தியாயரைப் போல் சிஷ்யைகளிடம் அகப்பட்டுக் கொள்கிறார்கள்" என்று சொல்லி, காமினி குலுங்கச் சிரித்துக்கொண்டே மஞ்சத்தில் சாய்ந்துகொண்டாள்.

காமினியை பிரமிப்புடன் பார்த்தான் உபாத்தியாயன். தன்னைத் துருவித் துருவி நன்றாக அவள் ஆராய்ந் திருப்பதைக் கண்டுகொண்ட உபாத்தியாயன் அவளிட மிருந்து விஷயத்தை மறைப்பதில் பிரயோஜனமில்லை யென்பதைத் தெரிந்துகொண்டவனாய், "காமினி, வேண்டு மென்றுதான் உன் பழைய கதையைக் கிளறினேன்" என்றான்.

"எதற்காக?"

"வந்திருக்கும் தூதன் கூர்ஜரன் என்பதைக் கவனித் தாயா?"

"வந்ததுமே கவனித்தேன்."

"நான் உள்ளே வந்ததுமே என்னைக் கண்டு அவன் திகிலடைந்தான்."

"அதையும் கவனித்தேன்."

"குப்த ராஜ்ஜியத்திலிருந்து வரும் தூதன் ஒரு கூர்ஜரன். கூர்ஜரர்கள் ஹூணர்களுடன் படையெடுத்திருப்பவர்கள். இவன் கொண்டு வந்திருக்கும் செய்தியோ ராஜ முத்திரை களுடன் கூடிய அந்தரங்கச் செய்தி. அவன் என்னைக் கண்டு திகைத்ததிலிருந்து ஏற்கெனவே அவன் என்னை அறிந்திருக்க வேண்டும். எனக்கும் அவனை எங்கோ பார்த்திருப்பதாக நினைவிலிருக்கிறது. குப்த ராஜ்யத்தில் நான் இருந்தபோது ராஜதூதர்களாக ஹூணர்களோ கூர்ஜரர்களோ யாரும் கிடையாது. இங்கிருக்கும் தூதர்கள்

அனைவருக்கும் என்னைத் தெரியும். ஆகவே, நான் இவனைச் சந்தித்திருப்பதானால், அந்த நாட்களில் மலைவாசலில்தான் சந்தித்திருக்க வேண்டும். மலைவாசலில் இருந்தவனாயிருந்தால் உன் கல்யாண ஊர்வலமும் நான் அடிபட்ட பாகமும் அமர காவியங்களாகி விட்டனவே, அவை இவனுக்குத் தெரிந்துதானே இருக்க வேண்டும்? தெரியுமா என்பதைக் கவனிக்கத்தான் உன்னைப் பேசத் தூண்டினேன்'' என்றான் உபாத்தியாயன்.

"என் கதையிலிருந்து, உங்களுக்குப் பலன் ஏதாவது கிடைத்ததா?'' என்று காமினி கேட்டாள்.

"நிரம்ப கிடைத்திருக்கிறது காமினி,'' என்று உபாத்தியாயன் பதில் சொன்னான். "அவனுக்கு என்னைத் தெரியும் என்பது மட்டுமல்ல, என் விவகாரங்கள் சகலத்திலும் வந்திருக்கிற தூதன் சிரத்தை கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்து கொண்டேன். அவனுக்கு என்னிடம் மட்டுமல்ல, சித்ராதேவியிடமும் அதிக சிரத்தையிருப்பதாகத் தெரிகிறது'' என்று உபாத்தியாயன் தெரிவித்தான்.

"அப்படியா?'' என்று கேட்டாள் காமினி.

"ஆம் காமினி! சித்ராதேவியின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்ட முதல் தடவையே தூதன் பெரிதும் சங்கடப்பட்டான். அவள் என்னைச் சந்தித்தாள் என்பதை நீ குறிப்பிட்டதும் அவன் உடம்பே ஒருமுறை தூக்கிவாரிப் போட்டதைக் கண்டேன்'' என்றான் உபாத்தியாயன்.

"இவ்வளவு விஷயங்களை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இதில் ஒரு அம்சத்தைக் கூட நான் கவனிக்கவில்லை. உங்கள் சிஷ்யை உங்களை விட மிஞ்சிவிட்டதாகக் குறை கூறுகிறீர்கள்'' என்று காமினி கூறினாள், லேசாகச் சிரித்துக் கொண்டே.



"என் நல்ல காலம் நீ உன் பழைய கதையின் கனவில் லயித்திருந்தாய். இல்லாவிட்டால் அவன் முக உணர்ச்சிகளோடு என்னையும் சேர்த்து ஒரேயடியாக எடை போட்டிருக்க மாட்டாயா?'' என்று உபாத்தியாயன் கூறினான்.

கூரிய இரு கத்திகள் உராய்வதைப் போல் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருந்த காமினி, உபாத்தியாயன் இவர்கள் சம்பாஷணையை, வெளியே பலமாகக் கேட்ட குதிரைகளின் காலடிச் சத்தம் சடக்கென வெட்டி நிறுத்தியது. காமினி சரேலென்று ஆசனத்திலிருந்து எழுந்திருந்து சாளரத்துக்குச் சென்று வெளியே எட்டிப் பார்த்தாள். மீண்டும் உள்ளே திரும்பிய அவள் முகத்தில் மகிழ்ச்சி எல்லையற்றுத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. "உபாத்தியாயரே! சேனாதிபதியே வந்து விட்டார். இன்னும் இரண்டு நாட்களாவது ஆகும் என நினைத்தேன். என்ன காரணத்தாலோ இதற்குள் திரும்பிவிட்டார்'' என்றாள். உபாத்தியாயனும் சரேலென எழுந்து சாளரத்துக்குச் சென்று வெளியே நோக்கினான். சுமார் நூறு பேர் கொண்ட குதிரைப் படையொன்று வீதிக்குள் வந்து கொண்டிருந்தது. அதன் முகப்பில் பெரிய வெள்ளைப் புரவியில் கவசமணிந்து மிகக் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான் தோரமானா.

அடுத்த சில நிமிஷங்களில் மாளிகையின் அரண் கதவுகள் பெருத்த ஓசையுடன் திறக்கப்பட்டன. தோரமானா மாளிகைக்குள் நுழைந்த சில விநாடிகளுக்கெல்லாம் காமினிக்கு அழைப்பு வந்தது. கூப்பிட வந்த வீரனிடம் "இதோ வருகிறேன்'' என்று சொல்லியனுப்பிவிட்டு "உபாத்தியாயரே! எஜமானரைப் பார்க்க நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டாள். வருகிறேன் என்பதற்கு அடையாளமாகத் தன் தலையை அசைத்த உபாத்தியாயன் பின்தொடர குப்த ராஜ்யத்திலிருந்து வந்த செய்திச் சுருளை

கையிலெடுத்துக் கொண்டு தோரமானாவின் இருப்பிடத்திற்குப் புறப்பட்டாள் காமினி. மாளிகையின் பல அடுக்குகளைக் கடந்த பின்னர், வீரர்களால் பலமாகக் காவல் புரியப்பட்ட தோரமானாவின் அறைக்கருகில் வந்ததும் உபாத்தியாயனைச் சற்று வெளியிலேயே இருக்கும்படி சொல்லிவிட்டுக் காமினி மட்டும் உள்ளே சென்றாள்.

கொஞ்ச நாழிகைக்குப் பிறகு, காமினியே வெளியில் வந்து உபாத்தியாயனை உள்ளே அழைத்துச் சென்றாள். தோரமானா அறையின் நடுவிலிருந்த பெரிய மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்தான். உள்ளே நுழையும் வரை அவன் தலையை அலங்கரித்திருந்த இரும்புக்கவசம் மஞ்சத்தில் அவனுக்குப் பக்கத்தில் கிடந்தது. ஆடைகளையோ மார்புக் கவசத்தையோ தோரமானா, களையவில்லையென்பதை உபாத்தியாயன் கவனித்தான். அப்படி அவன் கவனித்ததை நொடியில் கண்டுகொண்ட தோரமானா, "கவசத்தைக் களையக் கூட நேரமில்லை அஜித். விஷயம் முக்கியமாக இருக்கவே காமினியை உடனே கூப்பிட்டனுப்பினேன். நீங்களும் இருப்பதாகக் காமினி சொன்னாள். ஆகவே உங்களையும் கலந்தாலோசிக்கலாமென்றுதான் கூப்பிட்டேன்" என்றான். அத்துடன் எதிரிலிருந்த மஞ்சத்தில் இருவரையும் உட்காரும்படியும் உத்தரவிட்டான். உபாத்தியாயன் அமர்ந்ததும் தன் கையிலிருந்த குப்த ராஜ்ய ஓலையை உபாத்தியாயனிடம் கொடுத்து, "இதைப் படியுங்கள்" என்றான்.

மிக்க மரியாதையுடன் ஓலையை வாங்கிய உபாத்தியாயன் சுருளைப் பிரித்து அக்கறையுடன் படித்தான். ஓலையைப் படிக்கப் படிக்க அவன் முகத்தில் ஆச்சரிய ரேகை பலமாகப் படர்ந்தது.

அவன் படித்து முடிக்கு மட்டும் தோரமானா உபாத்தியாயன் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.



உபாத்தியாயன் ஓலையை முடித்துவிட்டு, "இதை எழுதியிருப்பது ஆனந்ததேவியல்லவா?" என்றான் ஆச்சரியத்துடன்.

"ஆனந்ததேவிதான். அந்த மகாராணிக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் அஜித்!"

"வாஸ்தவம் மகாராஜ்! நீங்கள் கடமைப்பட்டிருப்பது ஒருபுறமிருக்கட்டும், அவர்கள் உதவியில்லாவிட்டால் நான் அடிலனிடம் பட்ட அடியால் அன்றே மடிந்திருக்க வேண்டியவனாயிற்றே" என்றான் அஜித் சந்திரன்.

அஜித் சந்திரன் பேசிய தோரணையிலிருந்தே அவன் நிஜமாகத்தான் பேசுகிறானா அல்லது தங்களைப் பார்த்து நகைக்கிறானா என்பதைத் தோரமானாவால் ஊகிக்க முடியவில்லை. உபாத்தியாயன் அபிப்பிராயத்தைச் சோதிக்க இன்னும் ஒரு கேள்வி கேட்டான். "இப்பொழுது அடிலன் குப்த ராஜ்ய அதிதியாகையால் அவனை எனக்கெதிராக உபயோகித்து ஹூணப் படையில் பிளவை உண்டாக்க ஸ்கந்தகுப்தன் முயலலாமல்லவா?"

"முயன்றாலும் பலன் ஏதுமிருக்காதே."

"அது நமது அபிப்பிராயம்? ஆனால் ஸ்கந்தகுப்தனும் சாதாரணமான ராஜ தந்திரியல்ல. குப்த ராஜ்யத்தைப் பிடித்த கெட்ட காலம் ஸ்கந்தகுப்தன் படுத்த படுக்கையாகக் கிடக்கிறான். கால் காசுக்கு உதவாத பூரகுப்தன் திடசாலியாக உலாவுகிறான். இந்த ஒரு நிலை நமக்கு அனுகூலமே தவிர, படுத்துக் கிடந்தாலும் அறிவாளியின் செயலில் ஒரு தீர்மானமும் விவேகமும் இருக்கும். அடிலனை ஸ்கந்தகுப்தன் எவ்விதமாக நம்மீது உபயோகப்படுத்துவான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆகவே, நாம் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே தோரமானா ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான்.

உபாத்தியாயனும் காமினியும் கூடவே எழுந்தார்கள். தங்களுக்கு அத்துடன் பேட்டி முடிவாகிவிட்டதென்பதை உணர்ந்து கொண்ட இருவரும், "நாங்கள் வரலாமா மகாராஜ்" என்று அனுமதி கேட்டார்கள். "அஜித்! நீங்கள் போய் வாருங்கள். காமினி, நீ ஒரு நிமிஷம் இரு" என்று சொல்லிய தோரமானா வாயிற்படி வரை போன உபாத்தியாயனைத் திரும்பக் கூப்பிட்டு, "அஜித்! இந்த ஓலையைக் கொண்டு வந்த தூதன் மேல் ஒரு கண் இருக்கட்டும்" என்றான். "உத்தரவு மகாராஜ்" என்று உபாத்தியாயன் விடைபெற்று வெளியே சென்றதும் தோரமானா, தகப்பன் பெண்ணைத் தட்டிக் கொடுப்பது போல் காமினியின் அழகிய முதுகில் தட்டிக் கொடுத்து, "காமினி! யாருக்கும் சொல்லாத ஒரு ரகசியத்தை இன்று உனக்குச் சொல்லப் போகிறேன்" என்றான்.

காமினி தோரமானாவை ஏறிட்டுப் பார்த்தாள். வீர ரசம் ததும்பி நின்ற தோரமானாவின் கண்களில் அன்று எல்லையற்ற மகிழ்ச்சியும் பிரதிபலிப்பதைக் கண்டாள்.

"என்ன ரகசியம் மகாராஜ்?"

"அடுத்த வாரம் மாளவத்தின் மேல் படையெடுக்கப் போகிறேன்" என்றான் தோரமானா நிதானமும் கம்பீரமும் கலந்த குரலில்.

காமினி திகைப்படைந்து நின்றாள். "மலைவாசலிலிருந்து நீண்டு கிடக்கும் ஹூண ஆதிக்கத்தை மாளவத்துக்கு நீட்ட தற்சமயம் நம்மிடம் பலமிருக்கிறதா மகாராஜ்!" என்று கேட்டாள்.

"படை பலமிருக்கிறது. ஆனால் பலவீனமுமிருக்கிறது. இங்கிருக்கும் செய்திகள் எப்படியோ அவ்வப்பொழுது ஸ்கந்தகுப்தனுக்குத் தெரிகின்றன."

"உங்களைப் போல் இந்த மகாராஜாவும் ஒற்றர்களை வைத்திருப்பார்!"



"ஒற்றர்களுக்குக் கிட்டும் விஷயங்களைப் பற்றி நான் பேசவில்லை. யாருமறியாத உனக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்த தகவல்கள் ஸ்கந்தகுப்தனுக்கு எப்படியோ தெரிகின்றன."

"என்னிடம் சந்தேகமா மகாராஜ்?"

"உன்னிடம் சந்தேகப்படுவதானால் உன்னிடமா இதைச் சொல்வேன் காமினி? இங்கிருந்து தகவல்களை அனுப்புபவன் வெறும் ஒற்றனல்ல. ராஜ தந்திரத்தை நன்றாக அறிந்தவன்! தவிர, குப்த ராஜ்யாபிவிருத்தியில் சிரத்தையுள்ளவனாவுமிருக்க வேண்டும். அவனை நாம் கண்டு பிடிக்க வேண்டும்! சரித்திரத்தின் முக்கியமான ஓர் அரங்கத்தில் இன்று நாம் நிற்கிறோம் காமினி. ஹூண சாம்ராஜ்யத்தை நான் அந்த நாட்டில் ஸ்தாபிப்பதும் அல்லாததும் என் மாளவப் படையெடுப்பில் தெரிந்துவிடும். அதற்கு இடையூறாக இருக்கும் இந்த மனிதன் யார்?" என்று தோரமானா காமினியிடம் பேசிவிட்டு ஒரு கேள்வியையும் கேட்டான்.

"யார்?" காமினியும் கேட்டாள்.

"நிச்சயமாகத் தெரியாது. ஆனால், ஒரு சந்தேகமுண்டு. இப்படி வா" என்று அவள் காதுக்கருகில் குனிந்து தோரமானா ஒரு பெயரை உச்சரித்தான்.

அந்தப் பெயரைக் கேட்ட காமினி முகத்தில் சொல்லவொண்ணாத வியப்பும் திகைப்பும் கலந்து தாண்டவமாட, "உபாத்தியாயரா!" என்று கூவிவிட்டுக் கல்லாய்ச் சமைந்து ஆசனத்தில் தொப்பென விழுந்தாள்.

# 28. உபாத்தியாயன் சேவை

மஞ்சத்தில் மயக்கமுற்று விழுந்த சமயத்திலும், புதிதாக எறியப்பட்ட தாமரைப் புஷ்பம் போல் கண்ணைப் பறிக்கும் எழிலுடன் காணப்பட்ட காமினியைத் தோரமானா மிகுந்த பரிதாபத்துடன் பார்த்தான். அவளுக்கு வேண்டிய சைத்தியோபசாரங்களைத் தானே செய்து, அவளை மெல்லப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தான். உபாத்தியாயனிடத்தில் அவளுக்கு உள்ள பாசமும் பக்தியும் தோரமானாவுக்குத் தெரியாததல்ல. அதைவிடப் பத்து மடங்கு நன்றியைத் தன்னிடம் காமினி வைத்திருக்கிறாள் என்பதையும் ஹூண சேனாதிபதி அறிந்தே இருந்தான். என்ன நேரிடுவதாயிருந்தாலும் தன் அபிப்பிராயங்களும் திட்டங்களும் காமினியின் மனத்தை விட்டு இம்மியளவுகூட வெளியே போகாது என்ற உறுதியும் தோரமானாவுக்கு உண்டு. ஆகையினால்தான் தன் மனத்தில் சில நாட்களாக எழுந்திருந்த ஒரு சந்தேகத்தைக் காமினியிடம் வெளிப்படையாகச் சொன்னான். தன் வார்த்தைகள் காமினியை இவ்வளவு தூரம் பாதிக்கும் என்று மாத்திரம் தோரமானா எதிர்பார்க்கவில்லை. ஆகவே காமினிக்கு ஏற்பட்ட சோகத்தைக் கண்டு சிறிது அசந்தே போனான் தோரமானா.

எஜமானனுடைய சைத்தியோபசாரங்களால் காமினி மெள்ளக் கண்விழித்தாள். விழித்த கண்களில் சிறிது பயமும் காணப்பட்டது. தோரமானா அவளருகில் வந்து உட்கார்ந்து கொண்டு "காமினி! உபாத்தியாயனுக்கு என்னால் ஏதாவது ஆபத்து நேரிடுமென்று பயப்படுகிறாயா?" என்று கேட்டுவிட்டு, பயத்தை அறுக்கும் வகையில் ஒரு புன்முறுவலையும் உதடுகளில் வரவழைத்துக் கொண்டான்.



காமினி எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டாள். "என் அபிப்பிராயம் எஜமானருக்குத் தெரியாததன்று! உபாத்தியாயர் என் உயிரைக் காப்பாற்ற முயன்றார். நீங்கள் என் உயிர், கற்பு இரண்டையும் காப்பாற்றினீர்கள்! காப்பாற்றியது மட்டுமல்ல, என்னென்னவோ விபரீதங்கள் விளையும் ஹூண சைன்னியத்துக்கிடையில் என்னை இன்னும் யோக்கியமானவளாகக் காலங் கழிக்க வகையேற்படுத்தியிருக்கிறீர்கள். உங்கள் இருவருக்குள்ளும் பரஸ்பரம் சந்தேகம் வந்து இருவரில் யாருக்குத் தீங்கு நேர்ந்தாலும் என் மனம் என்ன பாடுபடும் என்று தங்களுக்குத் தெரியாததல்ல. என் கண்களில் எது குத்தப்பட்டால் என்ன? என் சம்பந்தப்பட்டவரை துன்பம் சமம்தானே?" என்றாள் காமினி.

தோரமானா அவள் மென்மையான கைகளில் ஒன்றை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு ரகசியமாய்ச் சொன்னான்: "காமினி! ஆதாரமில்லாமல் நான் சந்தேகம் கொள்பவன் அல்லவென்பது உனக்குத் தெரியாதா? அதுவும் சென்ற நான்கு வருஷங்களில் எனக்கு இணையற்ற சேவை செய்திருக்கும் உபசேனாதிபதியின் மேலா சந்தேகப்படுவேன்? உபாத்தியாயன் நேர்மையானவன் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. என் கட்டளைகளை நூற்றுக்கு நூறு நிறைவேற்றி வைத்திருக்கிறான் என்பதிலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், என் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அவன் செய்யும் முடிவுகளால் யாருக்கு லாபம் என்பதை யோசித்துப் பார். பலமுறை குப்தப் படைகளைத் திருப்பியனுப்பிவிட்டான். இதனால் சின்னஞ்சிறு மோதல்களைத் தவிர்த்தோம் என்பது உண்மைதான். சிறுசிறு மோதல்களைத் தவிர்த்ததால் ஹூண சைன்னியத்தை மாளவத்தின் எல்லை வரையில் திடமாக ஊன்ற வைக்க முடிந்தது என்பதும் வாஸ்தவம். ஆனால் இந்தப் பலனை

அடைய எத்தனைப் பணம் செலவழித்திருக்கிறோம் என்பதைக் கவனி. அடிக்கடி எதிரிப்படைத் தலைவர்களிடம் லக்ஷக்கணக்கான ஸ்வர்ணங்களை அஜித் சந்திரன் கொடுத் திருக்கிறான். சென்ற நான்கு வருஷங்களில் குப்த ராஜ்யப் படைத்தலைவர்களிடம் சேர்ந்திருக்கும் பணத்தைக் கணக்குப் பார்த்தால் நமக்கு எதிராகச் சரியான சைன்னியத்தைத் திரட்டுவதற்கு வேண்டிய பணம் அவர்களிடம் கிடைத் திருக்கிறது."

"குப்த ராஜ்யத்தில் அப்படி ஏதும் படை திரட்டுவதாக நமக்குச் செய்தி கிடைக்கவில்லையே" என்று பதில் சொன்னாள் காமினி.

"வாஸ்தவம் காமினி! ஆனால், போதிய பணம் சேர்ந்த பிறகு படை திரட்டலாம் என்று காத்திருக்கலாம். இப் பொழுது போதிய பணம் கிடைத்துவிட்டால் படை திரட்ட முற்படலாம். அவர்கள் படை திரட்டித் தயாராவதற்கு முன் நான் மாளவத்திற்குள் புகுந்துவிட வேண்டும். மாளவத் தின் நிலைமை தற்சமயம் எப்படியிருக்கிறது என்பதற்கு நம்மிடம் தகவல் இல்லை" என்று தோரமானா சொன்ன போது காமினி போர் நிலைமை எவ்வளவு தகராறானது என்பதைப் புரிந்துகொண்டாள்.

அகல விரிந்த அவள் விழிகளில் தென்பட்ட திகிலைக் கண்ட தோரமானா, "ஆம் காமினி! நிலைமை மிக சங்கட மானதுதான். சென்ற நான்கு வருஷங்களில் தக்ஷசீலத்திலும் இதர இடங்களிலுமே குப்த ராஜ்யப் படைகள் குவிந்தன. அங்கேயே அஜித் சந்திரன் நமது கவனத்தையெல்லாம் திருப்பி விட்டிருந்தான். அப்பொழுதுதெல்லாம் பணபல மற்ற குப்த ராஜ்யம் என்ன செய்துவிடும் என்று அசட்டை யாக இருந்தோம். பணபலம் ஏற்பட்ட பின்பு குப்த ராஜ்யப் படைகளின் தாக்குதல் வடக்கில் காணோம். தெற்கில் மாளவத்தில் அவை குவிக்கப்படவில்லையென்பது என்ன



நிச்சயம்? அப்படிக் குவிக்கப்பட்டிருந்தாலும் நாம் அவற்றை அழிக்க முடியும். ஆனால், பணபலத்தால் படைபலம் பெருக்கப்பட்டு வடக்கிலும் குப்தர்கள் தாக்கினால் நாம் இருபுறத்திலும் போரிட வேண்டியிருக்கும். ஆகவே, இப் பொழுது உடனே மாளவத்தைத் தாக்கியாக வேண்டும். எதிரிக்கு அவகாசம் கொடுக்காமல் துரிதமாக நடவடிக்கை யெடுப்பதிலிருக்கிறது நமது வெற்றி. இந்த மாதிரி அவசியத்தை உபாத்தியாயன் வெகு தந்திரமாக ஏற்படுத்தி யிருக்கிறான்" என்று விவரித்தான்.

"உபாத்தியாயரைக் கூப்பிட்டு நேரிடையாக விசாரித்து விடுவதுதானே" என்று காமினி கேட்டாள்.

"விசாரணைக்கு என்ன இருக்கிறது காமினி? என் கட்டளையை மீறி எந்தக் காரியத்தையும் உபாத்தியாயன் செய்யவில்லையே. எதிரி சைன்னியங்களைச் சமாளிக்க அனுப்பினேன். வெற்றிகரமாகவே திரும்பி வந்தான். பணச் செலவாயிற்று. யுத்தத்தில் பணம் செலவாவது சகஜம். குற்றம் என்று நிர்ணயிக்க முயன்றால் நேரிடையான குற்றம் எதையும் உபாத்தியாயன்மேல் ஸ்தாபிக்க முடியாது. உபாத்தி யாயனின் நான்கு வருடகால சேவையின் பலனை எடுத்துக் கொண்டால் ஹூண சைன்னியம் திண்டாட்டத்திலிருக் கிறது. அடிலனைப் போல் விசாரணை ஏதுமின்றி உபாத்தி யாயனை அடித்துக் கொல்லலாமென்றாலோ சைன்னியத் தில் பிளவு ஏற்படும். என் சைன்னியத்தில் ஹூணர்கள், ஹிந்துக்கள் இரு தரப்பாரும் இருக்கிறார்கள். நான் ஆக்கிர மித்துள்ள இடங்களில் நியாயம், விசாரணை முதலிய வற்றுடன் நிர்வாகம் நடத்துவதால் குடிமக்களும் ஹூண ராஜ்யத்தில் வாழ்வது அபாயமில்லை என்று நம்பியிருக் கிறார்கள். அப்படி மக்களின் நம்பிக்கையின் மேல் சாம்ராஜ்யத்தை நிர்மாணித்து வருவதால்தான் என் முயற்சி ஹூணர்களின் முதல் படையெடுப்பைவிட அதிகம் பலன்

அளித்திருக்கிறது. அந்த நம்பிக்கைக் கோட்டையைத் தகர்ப்பது, நான் நிர்மாணித்து வரும் சாம்ராஜ்யத்தின் அஸ்தி வாரத்தையே தகர்ப்பதாகும். அது முடியாது காமினி. தந்திரத் திற்குப் பதில் தந்திரம் செய்வதில்தான் பலன் இருக்கிறது."

"இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்? எனக்கு ஏதாவது கட்டளை உண்டா?"

"உன் உதவிதான் எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் முக்கியம் காமினி!"

"உத்தரவிடுங்கள் எஜமான். உங்கள் அடிமை நிறை வேற்றத் தயாராயிருக்கிறேன்" என்றாள் காமினி.

தோரமானா மிகுந்த யோசனையுடன் மஞ்சத்திலிருந்து எழுந்து அறையில் உலாவிக்கொண்டே, "காமினி! இன்னும் ஒரு வாரத்தில் நான் மாளவத்தில் பிரவேசிக்கப் போகிறேன். இதற்கிடையில் உபாத்தியாயனை யுத்தரங்கத்திலிருந்து தொலை தூரம் அனுப்பிவிட வேண்டும். ஆகவே மலைவாச லுக்குச் சென்று அங்குள்ள வில்லவர் புரட்சி செய்யாதவாறு பார்த்துக் கொள்ள உபாத்தியாயனை நியமிக்கப் போகிறேன். அங்கு உபாத்தியாயன் ஏதும் விஷமம் செய்யாதிருப்பதற்கு அவனிடம் தற்சமயம் பரம விரோதம் கொண்டுள்ள ஒருவனை உபாத்தியாயன் மேல் கண் வைத்திருக்க ஏவப் போகிறேன். நீயும் மலைவாசல் போய் வா காமினி! அவர்கள் இருவரையும் நீ ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்" என்றான்.

"அந்த இன்னொரு மனிதன் யார்?" என்று காமினி விசாரித்தாள்.

"கொஞ்சம் தைரியப்படுத்திக்கொள். சொல்கிறேன். மீண்டும் மூர்ச்சையாகி விடாதே!" என்றான் தோரமானா.

"பெயரைச் சொல்லுங்கள் எஜமான்" என்றாள் காமினி, திடமாக.



"பல்தேவ்" என்று நிதானமாக உச்சரித்தான் தோர மானா. காமினி தன் மார்பில் கையை வைத்துக்கொண்டு ஏதோ கேட்க வாயெடுத்தாள்.

அதற்குள் தோரமானாவே சொன்னான்: "உன் கணவன் பல்தேவ் என்னிடந்தான் சேவை செய்கிறான். அவனைப் பற்றி உன்னிடம் பிரஸ்தாபிக்காததற்குக் காரணம் உண்டு காமினி. அவன் பெரிய கொள்ளைக்காரனாகி விட்டான். உனக்குக் கணவனாயிருக்க லாயக்கில்லாத கயவனாகி விட்டதால் நான் அவன் இருப்பதையே உன்னிடம் மறைத்து விட்டேன். சமீபத்தில் உபாத்தியாயன் காதலி சித்ராதேவி யைக் கற்பழிக்க முயன்றவனும் உன் கணவன் பல்தேவ்தான். கையிலகப்பட்ட புறாவைத் தன்னிடமிருந்து தப்பவைத்த அஜித் சந்திரன் மீது பழி வாங்க பல்தேவ் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கிறான். அந்த சந்தர்ப்பத்தை நானே அவனுக்கு அளிக்கிறேன். எப்படி தோரமானாவின் தந்திரம்?" என்று கூறிவிட்டு, தோரமானா இடிஇடியென்று பயங்கரமாகச் சிரித்தான். என்ன பக்குவப்பட்டாலும் ஹூணன் ஹூணன்தான் என்ற நினைப்பை அந்தச் சிரிப்பு நன்றி மிகுந்த காமினியின் உள்ளத்திலும் எழுப்பியது.

"அடுத்த சில நாட்களில் மலைவாசலில்..." என்று முணுமுணுத்தாள்.

"பிரமிக்கத் தக்க காரியங்கள் நடக்கும். பார்ப்பதற்குத் தான் நான் இருக்க மாட்டேன்" என்றான் தோரமானா.

அந்த சமயத்தில் ஏதோ சந்தேகம் கேட்பதற்காக "மகராஜ்!" என்று கூப்பிட்டுக் கொண்டு உபாத்தியாயன் திடீரென்று அறைக்குள் நுழைந்தான்.

# 29. 'யமலோகம் போகலாம்!'

காமினியின் முகத்திலிருந்து சரேலெனத் திரும்பிய தோரமானாவின் கண்கள் உபாத்தியாயன் முகத்தில் ஒரு விநாடி சந்தேகத்துடன் நிலைத்தன. உபாத்தியாயன் திடும் பிரவேசம் காமினியின் முகத்தில்கூடச் சிறிது சந்தேகச் சாயையைப் படரவிட்டது. உபாத்தியாயன் அந்த இருவர் பார்வைகளிலும் தொனித்த சந்தேகத்தைக் கவனிக்கத்தான் இல்லையோ, கவனித்துத்தான் பொருட்படுத்தவில்லையோ தெரியாது. "மகராஜ்! மூலஸ்தானபுரத்திலிருந்து முக்கிய செய்தி வந்திருக்கிறது" என்று தான் வந்த காரியத்தைப் பளிச்சென்று தெரிவித்துவிட்டு மேலே பேச தோரமானாவின் உத்தரவுக்கு எதிர்பார்த்து நின்றான்.

இந்தத் தகவல் தோரமானாவின் சந்தேகத்தை நிவர்த்தித்ததாக தெரியவில்லை. தானும் காமினியும் பேசியதை உபாத்தியாயன் ஒட்டு கேட்டிருப்பானோ என்பதை ஆராய்வதிலேயே உள்ளம் நிலைத்திருந்ததால் தோரமானா உடனே பதில் சொல்லாமல் அறையில் சிறிது நேரம் உலாவினான். அவன் கேட்க வேண்டிய கேள்வியைக் காமினியே கேட்கத் தொடங்கி, என்ன செய்தி உபாத்தியாயரே?" என்று விசாரித்தாள்.

"மூலஸ்தானபுரத்துக்கு நேர் எதிரில் வைதஸ்தா நதியின் அக்கரையிலிருக்கும் குப்த ராஜ்யப் படைகள் இன்னும் இரண்டு நாட்களில் மூலஸ்தானபுரத்தைத் தாக்கப் போகின்றன" என்றான் உபாத்தியாயன்.

இந்தச் செய்தி தோரமானாவின் சந்தேகத்தைக் கூடக் கிழித்தெறிந்திருக்க வேண்டும். "என்ன?" என்று ஆக்ரோஷத்துடன் உபாத்தியாயனைப் பார்த்தான் தோரமானா. அந்த





ஆக்ரோஷத்தால் சிறிதும் பாதிக்கப்படாத உணர்ச்சியுடன் வெகு சாவதானமாகக் கையிலிருந்த ஓலையைத் தோரமானாவுக்காக நீட்டி, "இதைக் கொண்டு வந்திருக்கும் தூதன் அறைக்கு வெளியே பேட்டிக்காகக் காத்திருக்கிறான்" என்றான் உபாத்தியாயன். ஓலையைப் பார்த்து மளமளவென அதன் மேல் கண்களை ஓட்டிய தோரமானா சிறிது நேரம் ஏதோ சிந்தித்தான். பிறகு உபாத்தியாயனை நோக்கி, "இந்தப் புதிய ஆபத்தை நாம் உடனே சமாளிக்க வேண்டும்" என்றான்.

"மூலஸ்தானபுரத்திலிருக்கும் சைன்னியத்தின் தராதரம் தங்களுக்கு தெரியும்..." என்று எதையோ வலியுறுத்த இஷ்டப்படுபவன் போல் உபாத்தியாயன் இழுத்தான்.

தோரமானா நின்ற இடத்திலேயே பெருமூச்செறிந்தான். "ஆம், நன்றாகத் தெரியும். அங்கிருப்பது சைன்னியமன்று; அத்தனை பேரும் கொள்ளைக்காரர்கள். படைத்தலைவன் எல்லோரையும்விடப் பெரிய கொள்ளைக்காரன். அயோக்கியனை யார் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கி விடலாம். மூலஸ்தானபுரம் வேவு பார்க்கும் எல்லைதானே என்றுதான் அவனை அங்கே இருக்க அனுமதித்தேன். இப்பொழுது அது யுத்தரங்கமாவதானால் அவன் அங்கே இருப்பதே பெரிய ஆபத்து. அவனை எப்பொழுதோ தொலைத்திருப்பேன். ஆனால், காமினியை உத்தேசித்து" என்று விடுவிடுவென்று பேசிக்கொண்டு போன தோரமானாவை உபாத்தியாயன் தடுத்து, "மகராஜ்" என்று எச்சரிக்கும் பாவனையில் மேலே பேசவிடாமல் குறுக்கிட்டான்.

தோரமானா பேச்சை நிறுத்தவில்லை. "இனிமேல் ரகசியத்துக்கு அவசியமில்லை அஜித். பல்தேவ் மூலஸ்தானபுரத்திலிருக்கும் தகவலையும் அவன் உள்ள நிலைமையையும் காமினிக்குச் சொல்லி விட்டேன். காமினியின் அதிர்ஷ்டம்

அவ்வளவுதான். அவளுடைய அழகுக்கும் அவள் புத்திக் கூர்மைக்கும் எவ்வளவோ நல்ல புருஷன் கிடைத்திருக் கலாம்...'' என்று மேலும் ஏதோ பேசப்போன தோர மானாவை இம்முறை காமினி தடுத்தாள்.

"எஜமான்! தாங்கள் என் புருஷனைப்பற்றி என் முன்னிலையிலேயே தூஷிப்பது நியாயமா?'' என்று காமினி முகஞ்சினாள்.

தோரமானாவுக்கு அப்பொழுதிருந்த மனோநிலையிலும் காமினியின் சொற்கள் ஆச்சரியத்தை விளைவித்தன. "உன் புருஷனா!'' என்று வியப்புடன் கேட்டான்.

"ஆம் எஜமான்! அவர் எப்படியிருந்தாலும் என் புருஷன். நான் இந்து ஸ்திரீ. உங்களுக்கு என் மனோபாவம் புரிவது கஷ்டம்'' என்றாள். அந்த சமயத்தில் அவள் கண் களில் நீர் தேங்கி நின்றது.

"இந்து ஸ்திரீகளின் போக்கு விசித்திரமாயிருக்கிறது! முட்டாள்களையும், பேடிகளையும் மணப்பதும் ஆயுள் முழுவதும் அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதும் விநோதத் திலும் விநோதம்! காமினி! உன் நிலைமையில் ஒரு ஹூண ஸ்திரீ இருந்தால் பல்தேவ் ஒன்று இன்னும் சிறையில் அடைபட்டுக் கிடப்பான்; அல்லது அவன் உயிரே எமனூர் போய்ச் சேர்ந்திருக்கும்'' என்று தோரமானா இரைந்தான்.

உபாத்தியாயன் இதழ்களில் புன்முறுவல் தோன்றியது. "அவ்வளவு பௌருஷம் இந்து ஸ்திரீகளுக்கு ஏற்படுவது கடினம் மகராஜ்'' என்றான்.

பௌருஷம் என்ற சொல்லால் ஹூண ஸ்திரீகள் புருஷத்தன்மை வாய்ந்த காட்டுமிராண்டிகள் எனக் குறிப் பிடுவதைப் புரிந்துகொள்ளத் தோரமானாவுக்கு விநாடி நேரம்கூடப் பிடிக்கவில்லை. ஆகவே, அவனும் உபாத்தியாய னுக்குத் திருப்பிக் கொடுத்தான். அவன் இதழ்களில் மிக



இகழ்ச்சியான புன்முறுவல் தவழ்ந்தது. "வாஸ்தவம் உபாத்தி யாயரே! இந்து சமூகத்தில் புருஷர்களுக்கே பௌருஷம் இல்லையே. பெண்களுக்கு எங்கிருந்து வரப்போகிறது!'' என்று சொல்லிவிட்டு உபாத்தியாயனைத் தன் கூரிய விழி களால் நோக்கினான்.

உபாத்தியாயன் பதில் ஏதும் சொல்லவில்லை. ஹிந்துஸ் தானத்தின் ஒரு பகுதி ஹூணர்களிடம் சிறைப்பட்டுக் கிடக்கும் இந்த சமயத்தில் இந்துக்களின் பௌருஷத்தைப் பற்றி என்ன பேசக் கிடக்கிறது என்று உபாத்தியாயன் மௌனம் சாதித்தாலும் தோரமானாவின் இகழ்ச்சி அவன் மனத்தை வாள் கொண்டு அறுத்தது. தவிர, குப்த ராஜ்யத் துக்கு எதிராகத் தோரமானாவின் உபசேனாதிபதியாக வாள் பிடிக்கும் தான் எந்த சமாதானத்தைத்தான் சொல்ல முடியும் என்றும் உபாத்தியாயன் நினைத்தான். இவ்வாறு துன்ப உணர்ச்சிகள் இதயத்தைக் கவிந்து கொண்டாலும் உபாத்தி யாயன் அவற்றை வெளிக்காட்டாமல் தீவிர யோசனையில் இறங்கினான். சொற் போரிடும் அந்த இருவரிடை நுழைய இஷ்டப்படாத காமினி மௌனமாகவே நின்றிருந்தாள்.

அவள் நிலையைக் கண்டு பரிதாபங்கொண்ட தோர மானா, "அஜித்! இந்துக்கள் ஹூணர்களைப் பற்றி அனாவசியத் தர்க்கம் இப்பொழுது அவசியமில்லை. அவசிய மான காரியத்தைக் கவனிப்போம். மூலஸ்தானபுரத்து பாதுகாப்பைப் பல்தேவிடம் ஒப்படைப்பது சாத்தியமில்லை ஆகையால், நீங்கள் சென்று அந்தப் படையின் தலைமை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அவன் உத்தரவில் இருந்த மர்மத்தைப் புரிந்துகொண் அஜித் சந்திரன், காமினி இருவரும் திகைத்துப் போனார்கள் எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாத கொள்ளைக்கார சைன் யத்துக்குத் தன்னைத் தலைவனாக்கினால் தன் கதி என்

வாகும் என்பது அஜித் சந்திரனுக்குத் தெரியும். கொள்ளையடித்துப் பழகிய வீரர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது. தவிர, தனக்கு அடுத்தபடி அங்கு தலைமை வகிப்பவன் தன்னைப் பழிவாங்க சமயத்தை எதிர்பார்த்திருக்கும் பல்தேவ். கொள்ளைக்காரர்கள் பல்தேவ் சொற்படி கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் உட்பட்டு நடக்க மாட்டார்கள். அந்த சைன்னியத்தையும் தனக்குக் குழி வெட்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ள படைத் தலைவனையும் வைத்துக்கொண்டு குப்த ராஜ்யப் படைகளைச் சமாளிக்க முடியாது. தோல்வியடைந்தால் அதை சாக்காகக் கொண்டு தோரமானா தன்னை விசாரணைக்குக் கொண்டு வந்து ஒழித்துவிடுவான். கொள்ளைக்காரர்களுக்கு இடங் கொடுத்த குற்றத்திற்காக விசாரித்து தோரமானா தன்னையழித்தால் ஜனங்கள் அதை நியாயம் என்றே நினைப்பார்கள். 'ஒரு பெண்ணுக்காகத் தேசத் துரோகியான அஜித் சந்திரன் போன இடத்தில் கொள்ளைக்காரனாகவும் மாறிவிட்டான்' என்று சரித்திரத்திலிருந்து அழிக்க முடியாத பழியைத் தன்மீது சுமத்திவிடுவார்கள். தோரமானாவின் ஓர் உத்தரவு தன்னை அதோகதியான நிலைக்குக் கொண்டு வரப்போவதை அஜித் சந்திரன் புரிந்து கொண்டான். காமினிக்கும் அது பளிச்சென்று விளங்கத்தான் செய்தது.

ஆகவே காமினி கேட்டாள்: "கொள்ளைக்காரச் சைன்னியத்தை ஒழுங்கில் வைக்க அங்குள்ள படைப் பிரிவிலிருந்து ஒரு பகுதியை உபாத்தியாயர் மூலஸ்தானபுரத்துக்கு அழைத்துப் போகலாமல்லவா?" என்று.

தோரமானாவின் அடுத்த வார்த்தைகள் அந்த நம்பிக்கையையும் உடைத்தெறிந்தன. "அதெப்படி முடியும் காமினி? நான் சற்றுமுன் சொன்னதை மறந்துவிட்டாயா? இங்கிருக்கும் படைப் பிரிவுகள் அத்தனையும் எனக்குத் தேவையாயிருக்குமே, உபாத்தியாயரைப் போன்ற உபசேனாதிபதிக்குச்



சைன்னியத்தில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது ஒரு பிரமாதமல்ல. தவிர, உபாத்தியாயருக்கிருக்கும் பத்து மெய்க் காவலர்கள் அவருக்காக உயிரையும் விடத் தயாராகயிருக்கிறார்கள். அவர்களிடம் கொள்ளைக்காரர்களைப் பகிர்ந்து கொடுத்தால் போகிறது" என்று தோரமானா மேலும் தர்க்கத்தில் இறங்க இஷ்டமில்லாமல், "உபாத்தியாயரே! நீங்கள் மூலஸ்தானபுரம் போய் அங்குள்ள படைகளின் தலைமையை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் உத்தரவுப்படி நடக்கும்படி பல்தேவுக்கு ஓலை எழுதி அனுப்பிவிடுகிறேன். மூலஸ்தானபுர நிலைமை சரிப்பட்டவுடன் அங்கிருந்து புருஷபுரம் சென்று மலைவாசலைக் கவனித்துக் கொள்ளுங்கள். வெகுசீக்கிரம் அவ்விடத்தில் எதிரிகள் நடவடிக்கை தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என விடுவிடு வென்று உத்தரவிட்டான்.

இந்த உத்தரவைக் கேட்ட அஜித் சந்திரன் முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றவில்லை. அதற்குப் பதில் ஆழ்ந்த சிந்தனையே தெரிந்தது. அதே சமயத்தில் உள்ளே நுழைந்த காவலன், "குப்த ராஜ்யத்திலிருந்து செய்தி கொண்டு வந்த தூதனைக் காணவில்லை மகராஜ்" என்றான்.

"காணவில்லையா?" என்றான் தோரமானா.

"ஆம் மகராஜ்! தூதர்கள் தங்கும் மாளிகையில்தான் அவனை இருத்தினோம். இப்பொழுது பார்த்தால் அறை காலியாகக் கிடக்கிறது."

"தூதன் பெயர் என்ன?" என்று தோரமானா கடுமையாகக் கேட்டான்.

"ராகுலன்" என்று பதில் சொன்னான் உபாத்தியாயன்.

"ராகுலன்!"

பிரமித்துப் போனான் தோரமானா.

"அடிலன் மாப்பிள்ளையாக வரவேண்டியவன்'' என்றான் அஜித் சந்திரன், தொடர்ந்து.

"இத்தனை நேரம் என்னிடம் அதை ஏன் சொல்ல வில்லை?'' என்று தோரமானா வினவினான்.

"சந்தர்ப்பமில்லை. தாங்கள் மேன்மேலும் உத்தரவிட்டுக் கொண்டிருந்தீர்கள். என் மூளை ஒரே குழப்பமாயிருந்தது'' என்று உபாத்தியாயன் பதில் சொன்னான்.

குழப்பம் என்பது உபாத்தியாயனுக்கு எந்த சமயத்திலும் கிடையாது என்பதை நன்றாக அறிந்திருந்த காமினி, "என் அறையிலிருந்த சமயத்தில் என்னிடம் கூடச் சொல்ல வில்லையே?'' என்று கேட்டாள்.

"அப்பொழுது நிச்சயமில்லை. அவனைப் பார்த்தபோது எங்கோ பார்த்த ஞாபகமாயிருந்தது. ஒருமுறை இரவில் பார்த்ததுதானே'' என்று உபாத்தியாயன் சமாதானம் சொன்னான்.

அந்த சமாதானத்தை காமினியும் நம்பவில்லை; தோர மானாவும் நம்பவில்லை. உபாத்தியாயன் ஒருமுறை யாரை யாவது பார்த்தால் அப்புறம் ஆயுளில் அவர்களை மறக்க மாட்டான் என்பது அவ்விருவருக்கும் தெரியும். ஆகவே, ஒரு கணம் ஏதோ யோசித்த தோரமானா, "சரி! ராகுலனைக் கைது செய்ய உத்தரவு அனுப்புங்கள், நீங்கள் மூலஸ்தான புரம் கிளம்பலாம்'' என்று முடிவாகச் சொன்னான்.

'யமலோகத்துக்குக் கிளம்பலாம்' என்று சொல்வது போலிருந்தது உபாத்தியாயனுக்கு.

## 30. விவசாயி வீட்டு விருந்தினர்

சாம்ராஜ்ய சிருஷ்டியென்பது சாதாரண காரியமல்ல! அசாதாரண புருஷர்கள்தான் சரித்திரத்தில் அந்தக் காரியத் தைச் சாதித்திருக்கிறார்கள். வெகு தூரத்திலிருந்து வந்து இன்னொரு நாட்டில் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பதென்றால் அதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. படையெடுத்து வந்த சைன்னியம், யுத்தத்துக்குப் பின் சளைத்த வீரர்கள் மீண்டும் சொந்த ஊர் திரும்ப இஷ்டப்படுவார்கள். அடிமைப்பட்ட மக்கள் எந்தக் காரியத்திலும் ஒத்துழைக்காமல் தொல்லை கொடுப்பார்கள். சொந்த வீரர்களைக் கண்டிப்பாலும், அடிமைப்பட்ட மக்களை அன்பினாலும் அடக்கியாளக் கூடிய திறமை வாய்ந்த தலைவனே சாம்ராஜ்யத்தைத் திடமாக ஸ்தாபிக்கிறான். சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பவன் ஸ்தல மக்களின் ஒத்துழைப்பை எவ்வளவு தூரம் பெறு கிறான் என்பதைப் பொறுத்திருக்கிறது சாம்ராஜ்யத்தின் ஆயுட்காலம்! அடிமைப்பட்ட மக்களின் ஆதரவைப் பெறாத சாம்ராஜ்யாதிபதி எரிமலையின் உச்சியில் உட்கார்ந்திருப்ப வனுக்குச் சமானம்! எந்த நிமிஷத்திலும் எரிமலை வெடித்து அவனை உருத்தெரியாமல் அழித்துவிடலாம். நல்ல கட்டுப் பாடுள்ள சைன்னியத்துடன் படையெடுத்து வரும் வீரனுக்கே இவ்வளவு தொல்லைகளும் ஆபத்தும் இருக்கின்றன வென்றால் கட்டுப்பாடு சிறிதுமில்லாதவர்களும் வெறி பிடித்தவர்களுமான ஹூணர்களைத் திரட்டி பாரத நாட்டில் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முற்பட்ட தோர மானாவின் நிலைமையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்! உள்ள ஆபத்தைத் தோரமானா நன்றாக அறிந்திருந்தான்.

தீர்க்கதரிசனமும் மிகக் கூர்மையான புத்தியும் நிறைந்த தோரமானா இந்த ஆபத்தைத் தணிக்க இரண்டு வழிகளைக் கையாண்டான். முதன் முதலாக ஹூணர் சைன்னியத்தில் ஹிந்துக்களையும் சேர்த்துக் கொண்டான். வெற்றி கொண்ட பிராந்தியங்களிலும் இந்து முறைப்படி விசாரணைகள் நடத்தி, பின்பே குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை விதித்தான். தன் ஆதிக்கத்திற்குள்ளிருந்த மக்களுக்கு வெறியர்களால் ஆபத்தில்லை என்ற ஒரு நிம்மதியை ஏற்படுத்தினான். ஒரேயடியாகப் பாரத நாட்டின் மேல் பாய சில ராஜ்யங்களை வெற்றி கொள்வதும் வெற்றி கொண்ட பிராந்தியங்களைத் திடப்படுத்துவதும் பிறகு மேற்கொண்டு விஸ்தரிப்பதுமாகச் சிறிது சிறிதாக ஹூண சாம்ராஜ்யத்தை இந்துஸ்தானத்தில் பரப்பினான். ஹூணர்கள் சாம்ராஜ்ய சிருஷ்டியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது ஆசிரியர் வின்ஸன்ட் ஸ்மித், தோரமானா, ஹூணர்களின் வழிகளை விட்டு ஹிந்து மன்னர்களைப் போல் நடந்துகொண்டான்; மகாராஜா என்ற பெயரையும் சூட்டிக்கொண்டான் என்று கூறுகிறார். ஸ்தல மக்களையும் ஹூணர்களையும் சமரசப் படுத்திக்கொண்டு போனதால் தோரமானா ஹூணர்கள் சொப்பனத்தில்கூட நினைக்க முடியாத அவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தைப் பாரத நாட்டில் ஸ்தாபித்தான்.

தோரமானாவின் இந்த சமரச மனப்பான்மையால் ஹூண சாம்ராஜ்யம் ஸ்திரப்பட்டும் திடப்பட்டும் வருவதை அஜித் சந்திரன் கவனித்தான். தோரமானாவின் சாமர்த்தியத்தோடு ஆனந்ததேவியின் சூழ்ச்சியால் குப்த ராஜ்யத்திற்குள்ளே ஏற்பட்ட பிளவும் ஹூண சாம்ராஜ்யத்தின் விஸ்தரிப்புக்கு நல்ல ஆதாரமாயிருந்து வருவதும் அஜித் சந்திரனுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. இத்தகைய ராஜ்ய அலைகள் தன் வாழ்க்கையில் அடிக்கடி விளைவித்து வரும் தொல்லையும் அஜித் சந்திரன் மனத்தில் தீவிரமாக



எழுந்து நின்றது. ஆகவே தோரமானாவின் கட்டளைப்படி தன் மெய்க்காவலாளருடன் மூலஸ்தானபுரத்தை நோக்கிப் பிரயாணம் செய்த மூன்று நாட்களும் உபாத்தியாயன் யாருடனும் பேசாமல் ஆழ்ந்த யோசனையுடனேயே குதிரை மீது அமர்ந்து சென்றான்.

உபாத்தியாயனைத் தவிர வேறொரு மனிதனாயிருந்தால் மூலஸ்தானபுரத்தை நோக்கிச் செல்லாமல் வேறெந்த மார்க்கத்திலாவது தப்பியோடியிருப்பான். எப்பேர்ப்பட்ட அபாயம் வந்தாலும் நிதானத்தை இழக்காத உபாத்தியாயன் மனம் எங்கு ஓடலாம் என்பதில் லயிக்கவில்லை! வரப் போகும் ஆபத்தை எப்படிச் சமாளிக்கலாம் என்பதைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. அந்த எண்ணங்களுடன் சித்ராவைப் பற்றிய நினைப்பும் கலந்துகொண்டது! தன் யோசனைப்படி தோரமானாவின் இருப்பிடம் வந்து காமினியுடன் தங்க வேண்டியவள் ஏன் தப்பி ஓடிவிட்டாள்? தப்பித்தான் ஓடினாளா அல்லது வேறு யாரிடமாவது சிக்கிக் கொண்டாளா? எந்தத் திக்கிலும் தப்ப மார்க்கமில்லையே! சைன்னியத்தில் யாரிடம் சிக்கினாலும் காமினி உத்தரவுப்படி அவள் நீலதுர்க்கம் கொண்டுவரப்பட்டிருப்பாளே. ஆகவே அவள் யாரிடமும் அகப்படவில்லை; எங்கோ தப்பியோடி மறைந்து வசிக்கிறாள்; தப்பியோடினாள் என்றால் தன்னிடம் வர அவளுக்கு இஷ்டமில்லையோ? அப்ப
யானால் மூலஸ்தானபுரத்தில் அந்த அறையில் அந்
இரவில் நடந்ததெல்லாம் வெறும் நாடகமா? இப்ப
யெல்லாம் உபாத்தியாயன் நினைத்துப் பார்த்தான். இதை
பற்றி நினைக்க நினைக்க உபாத்தியாயன் மனத்தில் துன்ப
புயல் வீச ஆரம்பித்தது. அதை இயற்கையும் உணர்ந்
கொண்டுதானிருக்க வேண்டும். வானம் கறுத்தது. இ
மின்னல் குமுறலாக வையகம் அதிர்ந்தது. சற்று நேரத்
கெல்லாம் பெரிது பெரிதாக விழுந்த தூறலும் சுழற்றியடித்

காற்றும், புயலும் மழையும் கலந்து வீசப்போவதைச் சுட்டிக் காட்டின.

அஜித் சந்திரன் ஒருமுறை ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். அதைக் கவனித்த மெய்க்காவலர் தலைவனான முகுந்தன், “நல்ல மழையோடு புயலும் கலக்கும் போலிருக்கிறது மகராஜ்!” என்றான். ‘ஆம்’ என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த உபாத்தியாயன், “ரஸ்தாவுக்கருகில் தங்க ஏதாவது இடம் இருக்கிறதா?” என்று விசாரித்தான்.

“கூப்பிடு தூரத்தில் ஒரு கிராமமிருக்கிறது” என்றான் முகுந்தன்.

“சரி, அங்கேயே போய் இரவைக் கழிப்போம்” என்று கூறிய உபாத்தியாயன், முகுந்தன் காட்டிய குறுக்குப் பாதை வழியாகக் குதிரையை நடத்தினான். இதர வீரர்களும் பின் தொடர்ந்தனர். அவர்கள் கிராமத்தை அடைவதற்கும் மழை தீவிரமாகப் பிடித்துக் கொள்வதற்கும் சரியாயிருந்தது. முதலில் இருந்த வீட்டையடைந்ததும் உபாத்தியாயன் கதவைத் தட்டினான். ஒரு கிழவி வந்து கதவைத் திறந்தாள்.

“அம்மா! நானும் எனது வீரர்களும் மழையில் சிக்கிக் கொண்டோம். இரவு தங்க இடம் கொடுத்தால் மிகவும் புண்ணியமாயிருக்கும்” என்று அஜித் சந்திரன் தாழ்மையாகக் கேட்டான்.

கிழவி அஜித் சந்திரனையும் அவன் பின்னால் நின்ற வீரர்களையும் கவனித்தபின், “ஐயா! நாங்கள் ஏழை விவசாயிகள். உங்களைப் போன்ற பெரிய மனிதர்களை உபசரிக்க எங்களுக்கு வசதி இல்லை. உங்கள் குதிரைகளைக் கட்ட இந்த வீட்டில் இடம் கிடையாது. தவிர என் கணவரும் ஊரிலில்லை” என்றாள்.

“அம்மா! நீங்களோ வயதானவர்கள். கணவரில்லா விட்டால் என்ன? நாங்கள் ஏற்கெனவே களைத்திருக்



கிறோம். என் வீரர்கள் குதிரைகளுடன் அதோ உங்கள் வீட்டுக் கொல்லையில் தெரியும் மாட்டுக் கொட்டிலில் இரவைக் கழிப்பார்கள். எனக்கு உள் கூடத்தில் தங்க அனுமதி கொடுத்தால் போதும்... தயவு செய்யவும்” என்று அஜித் சந்திரன் மன்றாடினான்.

மிகுந்த வற்புறுத்தலினாலும் அனுமதி மறுப்பதால் லாபமில்லை என்ற காரணத்தாலும் அந்த ஸ்திரீ ஒருவாறு சம்மதிக்கவே அடுத்த சில நிமிஷங்கள் அஜித் சந்திரன் அந்தச் சிறு வீட்டின் கூடத்தில் தன் துணிமணிகளைப் பிழிந்து உலர்த்தினான். வீட்டுச் சொந்தக்காரி வேலைக்காரி மூலம் கொடுத்தனுப்பிய விவசாயியின் கிழிந்த உடைகளை அணிந்துகொண்டு சட்டியில் தணல் கொண்டுவரச் சொல்லி மஞ்சத்தில் உட்கார்ந்து கால்களையும், கைகளையும் நெருப்பில் காய்ச்சி, தேகத்தைச் சிறிது உஷ்ணப்படுத்திக் கொண்டான். அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் வீட்டு எஜமானி வேலைக்காரியை வைத்துக்கொண்டு அன்னம் பரிமாறினாள்.

சாப்பிட்டு அவன் கையை அலம்பிக் கொண்டிருக்கும் போது வாயிற்கதவை யாரோ தடதடவென்று தட்டும் சப்தம் கேட்டது. “சீக்கிரம் கதவைத் திற; இல்லாவிட்டால் கதவை உடைத்து விடுவேன்” என்று இரைந்தது ஓர் அதிகாரமான குரல். அந்தக் குரல் எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது உபாத்தியாயனுக்கு. அந்த அதட்டலைக் கேட்டுத் திகில் பிடித்து நின்ற வீட்டு எஜமானியையும் வேலைக்காரியையும் பார்த்த உபாத்தியாயன், “நான் இருக்கும் வரையில் உங்களுக்கு எந்த ஆபத்தும் நேரிடாது” என்று உறுதி கூறி, “அம்மா! நீங்கள் போய்க் கதவைத் திறவுங்கள்” என்றான். அதேசமயத்தில் வேலைக்காரியையும் பார்த்து, “நீ பின்பு மாகச் சென்று மாட்டுத் தொழுவத்திலிருக்கும் என் வீர

களை வாயிற்பக்கம் வந்து தயாராயிருக்கச் சொல். என் குரலைக் கேட்டதும் உள்ளே நுழைய வேண்டுமென்று உத்தரவிடு" என்று உத்தரவிட்டான். இரண்டு ஸ்திரீகளும் அவன் உத்தரவுகளை நிறைவேற்ற சென்றபின் உபாத்தியாயன், மஞ்சத்தைக் கூடத்தின் கோடியில் இழுத்துப் போட்டுக் கொண்டான். கோடியிலிருந்த விளக்கைக் கூடத்தின் நடுவில் வைத்துவிட்டுப் பிறகு மீண்டும் மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் வெளிச்சம் மிக மங்கலாயிருந்தது.

வீட்டு எஜமானியான கிழவி கதவைத் திறந்ததும் ஒருவன் மிக ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தான். அவனுக்குப் பின்னால் எந்தவித ஆர்ப்பாட்டமுமில்லாமல் அமைதியாக நுழைந்தான் இன்னொரு வாலிபன். விளக்கு வெளிச்சத்தில் இருவரையும் கவனித்த உபாத்தியாயன் அசந்தே போனான். ஏனென்றால் முதலில் வந்தவன் ராகுலன்; பின்னால் வந்தவன் சித்ராதேவியின் தம்பி!

இருவரையும் உள்ளே விட்ட கிழவி கதவைத் தாழ்ப்பாள் போடாமல் சும்மா சாத்திவிட்டு உள்ளே வந்தாள். அதற்குள் கூடத்தின் கோடியில் யாரோ இருப்பதைப் பார்த்த ராகுலன், "யார் அவன்?" என்று கிழவியை அதட்டினான்.

"அம்மா! அவர்கள் உடையைக் களைந்து வேறு உடை அணியட்டும். நீ போய்ப் பாலைக் கொண்டு வா" என்று சொல்லிவிட்டு, "ஐயா! இந்த வீட்டில் நானும் என் தாயாரும் தான் இருக்கிறோம்; எனக்கு உடல்நிலை சரியில்லை. எழுந்து தங்களை உபசரிக்கக்கூட முடியாத நிலைமையில் இருக்கிறேன்" என்றான் உபாத்தியாயன் குரலை நன்றாக மாற்றிக் கொண்டு. அவன்மேல் விளக்கு வெளிச்சம் சரியாகப் படாததாலும் அவன் அணிந்திருந்தது விவசாயியின் கிழிந்த உடையானபடியாலும் ராகுலனுக்கோ சித்ராவின்



தம்பிக்கோ உட்கார்ந்திருப்பவன் யார் என்று சரியாகத் தெரியவில்லை. இத்தகைய நிலையில் வேறு உடையணிந்து கிழவி கொண்டுவந்த பாலை அருந்திய அவ்விருவரும் மஞ்சத்தில் உட்கார்ந்ததும், "பாழும் மழை வந்து கதையைப் பாதியில் நிறுத்தி விட்டதே. அந்த உபாத்தியாயன் கண்ணில் நான் எப்படி மண்ணை நன்றாய்த் தூவினேன் என்பதை விளக்கமாகச் சொல்கிறேன் கேள்" என்று ராகுலன் ஆரம்பித்தான்.

உபாத்தியாயன் புருவங்கள் ஒரு விநாடி நெற்றியில் உயர்ந்து நின்றன. ராகுலன் சொல்ல ஆரம்பித்த கதையைச் சித்ராதேவியின் தம்பியைவிட மிகக் கவனமாக உபாத்தியாயன் கேட்கலானான்.

# 31. ராகுலன் கதை

பெரிய மனிதர்கள் எப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தைச் சாதித்தாலும், அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமல் அடக்க மாகவே இருப்பார்கள். அவர்கள் சாதித்த காரியத்தைப் பற்றி வேறு யாராவது பேச முற்பட்டாலும், அந்தப் பேச்சில் கலந்துகொள்ள வெட்கப்படுவார்கள். ஏனென்றால் பெரிய காரியங்களைச் சாதிப்பது அவர்களுக்கு சர்வ சாதாரணம். சின்ன மனிதர்களின் நிலைமை வேறு. சாதாரண காரியங் களைச் சாதிப்பது அவர்களுக்குப் பிரம்மப் பிரயத்தனமாகை யால், தாங்கள் எதைச் செய்தாலும் அதைப் பிரமாதமாக நினைக்கிறார்கள். இதனால் தலைக்கிறுக்கேறி அவர்கள் மனோநிலை புரண்டு விடுவதால் சந்தர்ப்பா சந்தர்ப்பமில் லாமல் தாங்கள் செய்த காரியங்களைப் பற்றிப் பெருமை அடித்துக் கேட்பவர்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணுவ தோடு தங்களையும் பெரிய சங்கடத்தில் மாட்டி வைத்துக் கொள்கிறார்கள். அல்பமான ராகுலன் மட்டும் இந்த விதிக்கு எப்படி விலக்காயிருக்க முடியும்? ஆகவே, மஞ்சத்தில் சாய்ந்து கொண்டு தன் கதையை பலத்த பூர்வ பீடிகையுடன் சொல்ல ஆரம்பித்தான்.

“இந்த ராகுலனை ரொம்ப சாதாரணமானவன் என்று நினைத்த தோரமானாவின் வீரர்கள், நான் குப்த ராஜ்யத் தூதனென்று அறிந்ததும் நடுநடுங்கிப் போனார்கள். ஆகவே, மிகுந்த பயபக்தியுடன் என்னை நீலதுர்க்கம் கொண்டு வந்து சேர்த்தார்கள்...” என்று ஆரம்பித்த ராகுலனைச் சித்ராவின் தம்பி இடைமறித்து, “உங்கள் கதையை ஊருக்குப் போன பின் பேசிக்கொள்ளலாமே” என்று எச்சரித்தான்.

ஆனால், ராகுலனை நிறுத்த அவனால் முடியவில்லை. “மூலஸ்தானபுரம் போகும் வரையில் என்னால் சும்மா யிருக்க முடியுமா?” என்று அவன் சொன்னதும் சித்ராவின் தம்பியின் முகத்தில் கோபம் துடித்தெழுந்தது. “நாம் போகு மிடத்தைப் பற்றி இப்பொழுது எதற்காகப் பிரஸ்தாபிக்க வேண்டும்? நாம் தனிமையில் இல்லை என்பதைக் கவனித் தீர்களா?” என்று கேட்டான்.

ராகுலன் பதிலுக்குச் சிரித்தான். “தோரமானாவின் உப சேனாதிபதி அஜித் சந்திரனுக்கே பயப்படாத ராகுலன் கேவலம் இந்த விவசாயி உட்கார்ந்திருப்பதைக் கண்டா பயப்படப் போகிறான்? நான் சொல்லும் விஷயங்களைக் கேட்டு இவன் என்ன செய்ய முடியும்? ஏதாவது வாலை ஆட்டினால் இதோ இருக்கவே இருக்கிறது?” என்று பக்கத்தில் மஞ்சத்தில் கழற்றி வைக்கப்பட்டிருந்த கத்தியைக் காட்டினான்.

ராகுலன் பேச்சு சித்ராவின் தம்பிக்கு அடியோடு பிடிக்கவில்லை. ராகுலனை அடக்குவது சாத்தியமில்லை யென்ற காரணத்தால், ‘எதை வேண்டுமானாலும் உளறட்டும்’ என்று பேசாமல் இருந்து விட்டான்.

ராகுலன் மேற்கொண்டு சொன்னான்: “நீலதுர்க்கத்தில் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியாக ஒரு பெண். அவளை நான் சந்தித்துப் பேசினேன். அந்த சமயத்தில்தான் உபாத்தியாயன் அந்த அறைக்குள் நுழைந்தான். நுழைந்தவன் சும்மாயிருக்கக் கூடாதா? அந்தப் பெண்ணின் பழைய கதையையெல்லாம் கிளறினான். அவன் அவள் வாயைக் கிண்டியது எனக்கு நல்லதாகப் போயிற்று. அந்தப் பெண் ணின் பெயர் காமினி என்பதையும், அவள் உன் தகப்ப னாரிடம் தீரா விரோதம் கொண்டவள் என்பதையும் அறிந்தேன். அடிலனிடம் விரோதம் கொண்டவள். நான்

அடிலன் மாப்பிள்ளையாக வரப்போகிறவன் என்பதை அறிந்தால் என்ன செய்வாள்? அதிதி கிருகத்திலேயே என் மென்னியைத் திருக ஏற்பாடு செய்திருக்கமாட்டாளா? ஆகவே அவள் உத்தரவுப்படி என்னை அதிதி கிருகத்தில் வீரர்கள் விட்டுப்போனதும் நான் சொல்லாமல் கொள் ளாமல் கம்பி நீட்டினேன். குதிரையை அவிழ்க்கப் போனால் தெரிந்துவிடுமேயென்று கால்நடையாகவே சவாரி விட்டேன்..."

சித்ராவின் தம்பி சற்று குறுக்கே பாய்ந்து, "அப்படி யானால் இப்பொழுது நீங்கள் ஏறி வந்திருக்கும் குதிரை ஏது?" என்று கேட்டான்.

"அதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். முதலில் நீல துர்க்கத்தின் விவரங்களைக் கேள். அந்தக் காமினியின் அறையில் வெகு நேரம் இருந்தேன். ஏனென்றால் காமினி தன் கதையை விவரமாகச் சொன்னாள். அத்தனை நேரமும் அந்த உபாத்தியாயனுக்கு என்னை அடையாளம் புரிந்து கொள்ள முடிந்ததா? ஒருக்காலுமில்லை! நான் வெகு சாமர்த்தியமாகத் தலையைக் குனிந்துகொண்டே நின்றேன். அந்த உபாத்தியாயனாவது யாரோ குப்த ராஜ்யத்திலிருந்து வந்திருக்கிறானே என்று என்னை ஏறெடுத்துப் பார்த்தானா? அதுவும் கிடையாது. ஏதோ மகா மேதாவிபோல் அலட்சிய மாக உட்கார்ந்திருந்தான். சுத்த முட்டாள். ஆனால், ஒரு மனிதன் முட்டாள்தனம் இன்னொரு மனிதனுக்கு எவ்வளவு தூரம் பயன்படுகிறது? அவன் என்னைப் பாராததால் நான் நீலதுர்க்கத்திலிருந்து தப்ப முடிந்தது. அவன் அவளைப் பேச வைத்ததால், பழைய விவரங்களையும் நான் நீலதுர்க்கத் திலிருந்தால் யார் கையில் சிக்கியிருப்பேன் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது. நான் கல்யாணப் பெண் மாதிரி தலைகுனிந்து உபாத்தியாயனை ஓரக்கண்ணால் மட்டும்



கவனித்துக் கொண்டிருந்ததால் அவன் முகத்தை நான் பார்க்க முடிந்ததே தவிர அவன் என்னைப் பார்க்க முடிய வில்லை. எப்படி?"

இதற்கு சித்ராவின் தம்பி உடனே பதில் சொன்னான்: "உபாத்தியாயர் கண்களிலிருந்து எதுவும் தப்பாது. நீங்கள் தப்பிவிட்டதாகவே வைத்துக் கொள்வோம்; இந்த விவரங் களைப் பேச இப்பொழுது அவசரமில்லை. நாம் வீடு போனதும் சித்ராவிடமே நீங்கள் இதையெல்லாம் சொல்ல லாம்" என்றான்.

"உனக்கு ஒரு தடவை, சித்ராவுக்கு ஒரு தடவை இரண்டு தடவைகள் சொல்கிறேனே. இதைச் சொல்ல எனக்கு அலுக்குமா?" என்றான் ராகுலன்.

"உங்களுக்கு அலுக்காது."

"இப்பொழுது உனக்கு அலுப்பாயிருக்கிறதா? என்ன சுவாரஸ்யமான விஷயங்களைச் சொல்கிறேன்..."

இந்த சமயத்தில் உபாத்தியாயனும் மௌனத்தை விட்டு, "ரொம்ப சுவாரஸ்யமான விஷயங்கள்" என்று சம்பாஷணையில் கலந்து கொண்டான்.

ராகுலனும், சித்ராவின் தம்பியும் உபாத்தியாயனிருந்த திக்கில் கண்களைச் செலுத்தினார்கள். உபாத்தியாயன் முகம் சரியாகத் தெரியவில்லை. 'இதில் இந்த விவசாயிக்கு என்ன சிரத்தையிருக்க முடியும்!' என்று சித்ராவின் தம்பி நினைத் தான். உபாத்தியாயனுடைய அடுத்த வார்த்தைகள் ராகுலன் உற்சாகத்தைப் பெரிதும் தூண்டிவிட்டன. "மன்னிக்க வேண்டும். ஏதோ தெரியாமல் பேசிவிட்டேன். ஆனால் தோரமானாவின் உபசேனாதிபதியின் கண்கள் மிக் கூர்மையானவை என்பது பிரசித்தம். அவர் முன்பா நீங்கள் வெகுநேரம் நின்றுவிட்டு அவர் உங்களை அடை யாளம் புரிந்துகொள்ளவில்லை என்றால் அது மிகவு

ஆச்சரியம். அந்த ஆச்சரியம் தாங்காமல்தான் நான் சம்பாஷணையில் என்னையும் அறியாமல் புகுந்துவிட்டேன்'' என்றான் உபாத்தியாயன்.

"விவசாயியாயிருந்தாலும் உனக்கு இருக்கும் அறிவு அநேகம்பேருக்குக் கிடையாது. எப்பேர்ப்பட்ட சங்கடத்தை என்ன சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறேன். பார்த்தாயா?'' என்றான் ராகுலன்.

"கேட்பானேன், நீங்கள் செய்திருக்கிற காரியம் சாமானியமானதா? நான் மட்டும் உங்களை நேரில் பார்க்கவில்லை என்றால் இந்த விவரங்களை நம்பக்கூட மாட்டேன்'' என்றான் உபாத்தியாயன்.

"என்னைப் பார்த்தபின் நம்பிக்கை வருகிறதா!'' என்று ராகுலன் குதூகலத்துடன் கேட்டான்.

"உங்கள் முகத்தைப் பார்த்தபின் சந்தேகத்துக்கு இடமேது?'' என்றான் உபாத்தியாயன்.

ராகுலன் நிதானம் தப்பிவிட்டான். "நேருக்கு நேர் நின்று உபாத்தியாயன் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கிளம்பியதற்கே ஆச்சரியப்படுகிறாய். உபாத்தியாயன் உயிர் என் கையிலிருக்கிறது என்று தெரிந்தால் இன்னும் எவ்வளவு ஆச்சரியப்படுவாய்?''

"உபாத்தியாயன் உயிர் உங்கள் கையிலிருக்கிறதா?'' என்று குரலில் மிகுந்த ஆச்சரியத்தைக் காட்டினான் அஜித் சந்திரன்.

இந்த சம்பாஷணையை அறவே ரசிக்காத சித்ராவின் தம்பி தலையில் கையை வைத்துக்கொண்டு பேசாமல் உட்கார்ந்து விட்டான். ராகுலன் மிகுந்த உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தான். "பார்த்தாயா! விஷயத்தைக் கேட்ட போதே வாயைப் பிளக்கிறாய். உபாத்தியாயன் உயிர் என் கையில் எப்படிச் சிக்கியிருக்கிறது என்பதை முழுவதும்



கேள்'' என்று சொல்லிவிட்டு, சித்ராவின் தம்பியிடம் திரும்பி, "நீயும் கேள். ஏனென்றால் பாதசாரியாகப் புறப்பட்ட எனக்குக் குதிரை கிடைத்ததற்கும், உபாத்தியாயன் உயிர் என் கையிலிருப்பதற்கும் அதிக சம்பந்தமுண்டு'' என்றான்.

ராகுலனைப் பார்த்த சித்ராவின் தம்பியின் கண்களில் எச்சரிக்கை பூரணமாயிருந்தது. ஆனால் ராகுலன் அதைச் சட்டை செய்யாமல் பேச ஆரம்பித்தான்:

"நான் நீலதுர்க்கம் கோட்டையை விட்டுச் சிறிது தூரந்தான் வந்திருப்பேன். சாலையில் எதிரே குதிரையில் வந்த ஒரு வீரன் என்னைப் பார்த்ததும் குதிரையை சட்டென்று நிறுத்தினான். சற்று நேரம் என் உடையைக் கூர்ந்து கவனித்தான். குப்த வீரர்கள் உடையாயிருக்கவே, 'நீ யார்?' என்று என்னைக் கேட்டான். அவன் உடையிலிருந்து அவன் குப்த ராஜ்யத்திலிருந்து வந்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். உடனே அவனை என் வலையில் இழுக்க எண்ணிக் குப்த ராஜ்யத்திலிருந்து ரகசியமாக நான் தூது வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னேன். ஆனால், அனுப்பியது யார் என்று மட்டும் சொல்லவில்லை. அந்த வீரன், தானும் ஒரு தூதனென்றும், தான் உபாத்தியாயனுக்கு ஓலை கொண்டு வந்திருப்பதாகவும் கூறினான். நான் உபாத்தியாயன் ஊரிலில்லையென்றும், வர இரண்டு நாட்கள் ஆகுமென்றும் சொல்லி அவனை மெள்ளப் பக்கத்துச் சாலைக்காக அழைத்துச் சென்றேன். அவன் எனக்கு முதுகைக் காட்டிக் குதிரையின் சேணங்களை அவிழ்க்கையில் உடைவாளால் ஒரே குத்தாகக் குத்தி வீழ்த்தி அவனிடமிருந்த ஓலையை எடுத்துப் படித்தேன். உபாத்தியாயன் ஸ்கந்தகுப்தனின் உளவாளியென்பதை அறிந்து கொண்டதும் அந்தக் குப்த வீரனின் குதிரையில் ஏறி ஓடினேன். வழியில்தான் உன்னைச் சந்தித்தேன். அந்த ஓலை இதோ

என் பையிலிருக்கிறது. தோரமானாவிடம் சேர்ப்பித்தால் உபாத்தியாயன் கதி என்னவாகும்?'' என்றான் ராகுலன்.

சித்ராவின் தம்பி பேசவில்லை. உபாத்தியாயனே பேசினான். "நீங்கள் செய்திருப்பது சாமானிய காரியமல்ல'' என்றான்.

"நீ நல்ல புத்திசாலி!'' என்று பதிலுக்குச் சிலாகித்தான் ராகுலன்.

"அதனால்தான் வருந்துகிறேன்.''

"வருத்தம் எதற்கு?''

"இவ்வளவு காரியங்களைச் செய்த உங்களுக்கு ஒரு பழமொழி ஞாபகமில்லையே என்பதால்தான்.''

"என்ன பழமொழி?''

"'பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்.''

"அதற்கென்ன இப்பொழுது?''

"பெரிய காரியங்களையெல்லாம் சாதித்துவிட்டு இந்தச் சின்ன உண்மையை அறியாமல் வீண் பெருமையடித்துக் கொள்வதற்காக அத்தனைக் காரியங்களையும் பயனற்றுப் போகும்படி செய்துவிட்டாயே ராகுலா?'' என்றான் உபாத்தியாயன் கடுமையான குரலில்.

விவசாயி திடீரென்று ஏகவசனத்தில் பேச ஆரம்பித்ததாலும் குரலின் கடுமையாலும் ராகுலன் திகிலுடன் மஞ்சத்திலிருந்து துள்ளியெழுந்து, "நீ யார்?'' என்று வினவினான்.

உபாத்தியாயன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து விளக்கு இருக்குமிடம் வந்து, "நீ இத்தனை நேரம் யாரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாயோ அந்த முட்டாள் உபாத்தியாயன் நான்தான்'' என்றான். உபாத்தி



யாயன் இதழ்களில் ஒரு புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது.

உபாத்தியாயனைக் கண்ட ராகுலன் கல்லாய்ச் சமைந்து விட்டான். ஆசனத்திலிருந்து எழுந்த சித்ராவின் தம்பியின் முகத்திலும் சற்று திகில் தெரிந்தது. உபாத்தியாயன் ராகுல னையும் சித்ராவின் தம்பியையும் மாறிமாறிப் பார்த்தான். கடைசியாக ராகுலன் முகத்தில் அவன் கண்கள் நிலைத்ததும் இதழ்களிலிருந்த புன்முறுவல் சற்று மறைந்தது. "குப்த தூதனைக் கொலை செய்து நீ திருடிய அந்த ஓலையை எடு'' என்று உபாத்தியாயன் அதட்டினான்.

"எடுக்காவிட்டால் என்ன செய்து விடுவாய்? நீ ஒருவன், நாங்கள் இருவர் என்பதை கவனித்தாயா?'' என்று அசட்டுத் தைரியத்துடன் கேட்டான் ராகுலன்.

பதிலுக்கு உபாத்தியாயன் லேசாகச் சிரித்துக்கொண்டே "முகுந்தா!'' என்று கூப்பிட்டான். கதவு திறந்தது. உருவிய வாட்களுடன் முகுந்தனும் மற்ற மெய்க்காவலரும் உள்ளே நுழைந்தனர்.

# 32. தம்பியும் காதலனும்

உள்ளே நுழைந்த வீரர்களைக் கண்டதும் ராகுலனுடைய அசட்டுத் தைரியம் வந்த வேகத்தில் போய்விட்டது. அவன் உடம்பு உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை நடுங்கி ஓய்ந்தது. உபாத்தியாயனிடம் சிக்ஷை பயின்ற சித்ராவின் தம்பியின் முகத்தில் மட்டும் எந்தப் பீதியுமில்லை. காரியம் தலைக்கு மிஞ்சி விட்டது என்பதை அறிந்த சித்ராவின் தம்பி ராகுலனை ஒருமுறை மிகுந்த ஏளனத்துடன் பார்த்தான். பிறகு மீண்டும் ஆசனத்தில் உட்கார்ந்து சற்று லேசாகச் சிரிக்கவும் தொடங்கினான். உபாத்தியாயனிடத்தில் தன் கைவரிசை செல்லாதென்பதை உணர்ந்த ராகுலனுக்குச் சித்ராவின் தம்பியின் சிரிப்பு ஆத்திரமூட்டவே கோபத்தையெல்லாம் அவன்மீது திருப்பி, "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று எரிந்து விழுந்தான்.

சித்ராவின் தம்பி தன் ஹாஸ்ய ரஸத்தைச் சிறிது காட்டினான். "நீங்கள் உங்கள் கதையை சித்ராவிடம் சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்காது போல் தோன்றுகிறதே என்பதை நினைத்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்றான்.

"சிரிக்கும் சமயமா இது?" என்று ராகுலன் மீண்டும் அதட்டலான குரலில் கேட்டான்.

"சமயம் பார்த்தா நீங்கள் கதை சொன்னீர்கள்?" என்று கத்தினான் சித்ராவின் தம்பி.

இந்த சம்பாஷணை உபாத்தியாயனிடமிருந்து சிரிப்பை வரவழைத்தது. "ராகுலன் நல்ல சமயம் பார்த்துத்தான் கதையைச் சொன்னான். நீங்கள் வரும் வழியிலேயே கதை



முடிந்திருந்தால் நான் கதை கேட்கக் கொடுத்து வைத்திருப்பேனோ?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

"அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தக் கதையை நூறு தடவை சொன்னாலும் இவருக்கு அலுக்காது! வழியில் கதை முடிந்திருந்தாலும் உபாத்தியாயர் கேட்பதற்காக இங்கு திரும்பவும் ஆரம்பித்திருக்கும்" என்றான் சித்ராவின் தம்பி. இதைச் சொல்லி முடித்ததும் உபாத்தியாயனும் சிஷ்யனும் பலமாகச் சிரித்தார்கள். அவர்களைக் கொளுத்தி விடுபவன் போல் மிக உக்கிரமாகப் பார்த்தான் ராகுலன்.

ஆனால் அவன் உக்கிரத்தை அவ்விருவரும் கவனிக்கவில்லை. சிரிப்பை நிறுத்தி மேற்கொண்டு நடக்க வேண்டியது பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். "உன்னைச் சிறை செய்ய எனக்கு உத்தரவில்லை; அவசியமில்லை. ராகுலனைக் கைது செய்யும்படி தோரமானா உத்தரவிட்டிருக்கிறார். ஆகையால் நீ செய்யப் போவது என்ன?" என்று உபாத்தியாயன் சித்ராதேவியின் தம்பியைக் கேட்டான்.

தம்பி பதில் சொல்வதற்குள் ராகுலன் முந்திக் கொண்டான். "டேய் அஜித்! தூதனைத் தோரமானா ஒருக்காலும் கைது செய்ய உத்தரவிட மாட்டான். அதுவும் ஹூணர்களின் அடிமையான உன்னிடம் என்னைப் போன்ற கூர்ஜரப் பிரபுவைக் கைது செய்யும்படி சொல்வானா? நீ ஏதாவது அத்துமீறிச் செய்தால் மலைவாசலில் என் மாமனிடம் ஏற்கெனவே பெற்ற தண்டனையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவிடுவேன்" என்று மீண்டும் கூறினான் ராகுலன்.

உபாத்தியாயன் ராகுலனைக் கவனிக்காமலே, "இவன் மாப்பிள்ளையாவதற்கு முன்பே உன் தகப்பனாரிடம் மாமன் உறவு கொண்டாடுகிறானே, இது உனக்குச் சம்மதமா?" என்று சித்ராவின் தம்பியைப் பார்த்துக் கேட்டான்.

சித்ராவின் தம்பி, 'இந்த மாதிரி ஒரு மந்தியை அப்பா சித்ராவுக்குத் தேர்ந்தெடுத்தாரே' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டே ராகுலனை நோக்கித் திரும்பி, "சற்று நேரம் சும்மா இருக்க உங்களால் முடியாதா?" என்றான்.

தனக்கு மைத்துனனாகப் போகிறவன் எதிரியுடன் சேர்ந்து பேசுவதைப் பார்த்த ராகுலனுக்குக் கோபம் மித மிஞ்சவே, "நமது அடிமை பேசும்போது நாம் எப்படிச் சும்மாயிருக்க முடியும்?" என்று இன்னொரு கேள்வியைக் கேட்டான்.

தன்னிடம் சிக்கிக் கொண்ட எலியிடம் பூனை விளை யாடுவது போல் உபாத்தியாயன் ராகுலனிடம் விளையாடி னான் "முகுந்தா! எஜமான் கைகளைப் பின்னால் சேர்த்துக் கட்டு, பிறகு அவர் சட்டைப் பையில் ஜாக்கிரதையாக வைத் திருக்கும் குப்த ராஜ்ய செய்தியைப் பிடுங்கு" என்று ஏளனம் கலந்த குரலுடன் உத்தரவிட்டான். இந்த உத்தரவால் கோப வெறி கொண்ட ராகுலன் உபாத்தியாயன் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய எத்தனித்தான். அவன் ஓர் அடி எடுத்து வைக்குமுன்பே முகுந்தன் அவன் கைகளைப் பின்னால் சேர்த்துப் பிடித்துக் கொண்டான். மற்றொரு வீரன் அவன் சட்டைப் பையைப் பலவந்தமாகக் கிழித்து மார்புக்கு அருகிலிருந்த செய்திச் சுருளை எடுத்து உபாத்தியாயனிடம் கொடுத்தான். "முகுந்தா! எஜமானை இன்றிரவு மாட்டுத் தொழுவத்தில் ஜாக்கிரதையாக உறங்கச் செய்து காலையில் என்னிடம் கொண்டுவா" என்று அஜித் சந்திரன் உத்தர விட்டதும் வீரர்கள் ராகுலனை இழுத்துச் சென்றார்கள். சித்ராவின் தம்பியும் அவர்களைத் தொடர ஆரம்பித்தான்.

"நீ இங்கேயே என்னுடன் படுத்துக்கொள்ளலாம். தவிர உன்னுடன் பேசவேண்டிய செய்தியும் கொஞ்சமிருக்கிறது" என்று கூறிய உபாத்தியாயன் சித்ராவின் தம்பியை மஞ்சத் தில் உட்காரும்படி சைகை செய்து தானும் அவனுக்கெதிரில்



ஒரு ஆசனத்தை இழுத்துப் போட்டுக் கொண்டான். பிறகு ராகுலனிடமிருந்த குப்த ராஜ்யச் செய்தியைப் பிரித்து விளக்கருகில் நீட்டிப் படித்தான். அதில் ஸ்கந்தகுப்தன் க்ஷீணித்து வரும் தன் தேக ஸ்திதியைப் பற்றியும் ஆனந்த தேவி, பூரகுப்தன் இவர்கள் சூழ்ச்சியைப் பற்றியும் குறிப்பிட் டிருந்தான். அடிலனை உபயோகித்து தான் ஹூணர்களைப் பிளக்கச் செய்து வரும் முயற்சியைப் பற்றிப் பிரஸ்தாபித் திருந்ததோடு, சீக்கிரத்தில் அடிலன் தலைமையில் குப்த ராஜ்யப் படைகள் மூலஸ்தானபுரத்தைத் தாக்குமென்று கடிதத்தில் கண்டிருந்தது. அடிலன் தன்னிடமிருக்கும் விஷயத்தைத் தோரமானாவுக்கு ஆனந்ததேவி எழுதியனுப்பி யுள்ளதால் உபாத்தியாயன் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று ஓலையில் ஆக்ஞையிருந்தது.

ஓலையைப் படித்த உபாத்தியாயன் நீண்ட நேரம் தீவிர யோசனையிலிருந்தான். இந்த ஓலை சரியான சமயத்தில் கிடைக்காததால் மூலஸ்தானபுரத்தை குப்தப் படைகள் தாக்கும் செய்தியைத் தான் முன்னதாகத் தெரிந்துகொள்ள முடியவில்லையென்பதை உபாத்தியாயன் அறிந்து கொண் டான். ஆனால், போன விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பதில் பலன் என்ன என்று ஓலையை எதிரிலிருந்த விளக்கில் காட்டிப் பற்றவிட்டான். அது எரிந்து சாம்பலானதும் உபாத்தியாயன் சித்ராவின் தம்பியுடன் பேச ஆரம்பித்தான்.

"மூலஸ்தானபுரத்தில் சித்ராவும் நீயும் பல்தேவிடம் சிக்கியது நினைவிருக்கிறதா?"

"நினைவிருக்கிறது உபாத்தியாயரே!"

"நீங்களிருவரும் தோரமானாவிருக்குமிடம் போக வேண்டியதென்றும் காமினியைச் சந்திக்க வேண்டிய தென்றும் சித்ராவிடம் சொல்லியனுப்பினேனல்லவா?"

"ஆம்."

"ஏன் அப்படிச் செய்யவில்லை? சித்ராவுக்கு இஷ்டமில்லையா?"

"சித்ராவுக்கு இஷ்டந்தான். எனக்கு இஷ்டமில்லை."

"காரணம்?"

"குடும்ப கௌரவம். சித்ராவின் தம்பி என்பதால் ஏற்பட்ட கடமை."

இந்த பதிலைக் கேட்ட உபாத்தியாயன் சற்று ஆச்சரியத்துடன் சித்ராவின் தம்பியை ஏறெடுத்துப் பார்த்தான். சித்ராவின் தம்பி தலை குனிந்து கொண்டே பேசினான். "உபாத்தியாயரே! சில விஷயங்களைச் சொல்வது சில பேருக்குக் கடினம். ஆனால், பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் சாதாரண சம்பிரதாயங்களைக் கவனித்தால் விஷயத்தைப் புரிந்து கொள்வதும் கஷ்டம். ஆகையால் பட்டவர்த்தனமாகவே சொல்கிறேன் கேளுங்கள். ராகுலன் அயோக்கியனாயிருக்கலாம், அல்பனாயிருக்கலாம். ஆனால் சித்ராவின் கணவனாக என் தகப்பனாரால் நிச்சயிக்கப்பட்டவன். உங்களிடம் சித்ராவுக்கு இருக்கும் பிரியம் எனக்குத் தெரியும். இருந்தாலும் வேறொருவனுக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்ட அவள் உங்களுடன் உறவாட நான் எப்படி அனுமதிக்க முடியும்?"

"சித்ராவுக்குத்தான் மணமாகவில்லையே" என்று குறுக்கிட்டான் உபாத்தியாயன்.

"உண்மைதான், எங்களையும் மீறிய நிகழ்ச்சிகளால் மணம் தடைப்பட்டது. அதற்காக மணமகனுக்கு என் தகப்பனார் அளித்த வாக்கு ரத்தாகிவிடுமா? நாலு பேர் முன்னிலையில் மணமகனாக வரிக்கப்பட்டவனைக் காரணமில்லாமல் தள்ளிவிட முடியுமா? தள்ளினால் மற்ற ஹூணப் பிரபுக்கள் எங்களை என்ன நினைப்பார்கள்?"



"ஹிந்துக்களுக்குள்ள மணவிதிதான் ஹூணர்களுக்குக் கிடையாதே. ஆகையால் குடும்ப கௌரவம் எங்கிருந்து வந்தது? சித்ராவை என்னிடமிருந்து பிரிக்க உனக்குக் கடமை தான் எங்கிருந்து வந்தது?"

"தகப்பனாரிடமிருந்து. தந்தைதான் முன்கண்ட தெய்வம். அவர் அபிலாஷைதான் மகன் கடமை என்று நீங்களே போதிக்கவில்லையா உபாத்தியாயரே? பெண் ஒரு முறை ஒருவனை மனத்தால் வரித்தாலும் அவன் கணவனாகி விடுகிறான் என்று நீங்களே உபதேசிக்கவில்லையா? அப்படியிருக்க மணப்பந்தலில் உட்காரவும் தயாராகிவிட்ட சித்ரா கால விசேஷத்தால் கடமையிலிருந்து மாற முடியுமா?"

சிஷ்யன் தான் சொல்லிக் கொடுத்த பாடத்தைத் தன்னிடம் திருப்பிப் படிப்பதைக் கண்ட உபாத்தியாயனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ஹிந்து தர்மங்களை உபதேசித்தால் ஒரு ஹூணப் பிள்ளையின் மனங்கூட எவ்வளவு பரிபக்குவமடைகிறதென்பதைக் கவனித்த உபாத்தியாயன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான். வாதம் பலஹீனப்படும்போது வேதாந்தத்தில் இறங்குவது சுலபமாகையால் அந்த உபாயத்தைக் கடைப்பிடித்த உபாத்தியாயன், "நீங்கள் யாருக்குச் சித்ராவை நிச்சயித்தாலும் முடிச்சுப் போட்டிருக்கிற இடத்தில்தான் அவள் மாலையிட முடியும். அது இப்பொழுது கிடக்கட்டும், சித்ரா எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"மூலஸ்தானபுரத்தில்."

"அதைத்தான் ராகுலனே சொல்லி விட்டானே. மூலஸ்தானபுரத்தில் எந்த இடத்தில்?"

"இந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது உபாத்தியாயரே!"

"ஏன்?"

“சொன்னால் நீங்கள் சித்ராவைத் தேடிக்கொண்டு அங்கே வருவீர்கள்.”

இதைக் கேட்டதும் உபாத்தியாயன் கோபம் எல்லை மீறிவிட்டது. “டேய் முட்டாள்! நீ சொல்லாமலே என்னால் சித்ராவை வரவழைக்க முடியாதென்றா நினைக்கிறாய்? உனக்காகச் சித்ரா எதையும் செய்வாள் என்பது எனக்குத் தெரியாதா? உன்னையும் ராகுலனையும் சிறையில் தள்ளி அதைப்பற்றி மூலஸ்தானபுரத்தில் தண்டோரா போட்டால் சித்ரா என்னைத் தேடி ஓடி வருவாள். ஆனால் அதற்கு இப்பொழுது அவசியமில்லை. ஏனென்றால் இப்பொழுது உன் தந்தையும் நானும் ஒரே கட்சி.”

“என்ன!” வாரிச் சுருட்டிக்கொண்டு மஞ்சத்திலிருந்து எழுந்திருந்தான் சித்ராவின் தம்பி.

“சந்தேகமாயிருந்தால் ராகுலனைக் கேள். நான் இப் பொழுது சாம்பலாக்கிய குப்த ராஜ்ய ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று நினைக்கிறாய்? உன் தந்தை அடிலனை ஹூணர்கள் தலைவனாகக் குப்த சக்கரவர்த்தி அங்கீகரித்து விட்டார். உன் தந்தையின் தலைமையில் குப்தப் படைகள் மூலஸ்தானபுரத்தை தாக்கப்போகின்றன. நான் குப்த ராஜ்யத்தின் நண்பன் என்பதைத்தான் ராகுலன் சற்று முன்பு சொன்னானே,” என்று உபாத்தியாயன் விளக்கி னான்.

சித்ராவின் தம்பிக்கு உண்மை மெள்ள மெள்ளத் தெளிவுபடத் தொடங்கிற்று. அவன் ஏதோ பதில் சொல்லப் போனான். உபாத்தியாயன் அவனைப் பேசவிடாமல், “உன் தந்தையின் அந்தஸ்து, உயிர், குப்த ராஜ்யத்தின் பிற்காலம் எல்லாம் அடுத்த சில வாரங்களில் தீர்மானமாகும். ஆகையால், வாழ்க்கை சம்பந்தமான சில்லறை விஷயங் களில் சர்ச்சை வேண்டாம். நாளைக் காலை நானும் நீயும் பிரிந்து வெவ்வேறாக மூலஸ்தானபுரம் போவோம். நான்



ராகுலனைச் சிறையிலடைக்கப் போகிறேன். சித்ரா முன்பு எந்த இடத்திலிருந்து தப்பினாளோ அதே இடத்தில்தான் நான் தங்கப் போகிறேன். அந்த இடத்திற்கு சித்ராவை அனுப்பு; என் வாளின்மேல் ஆணை; அவளுக்கு என்னாலோ வேறு யாராலோ எந்தவித ஹானியும் நேராது” என்றான்.

“சித்ரா வர மறுத்தால்?” என்று தம்பி கேட்டான்.

“உன் தந்தையின் எண்ணம் ஈடேறாது. தவிர ராகுலன் மணப்பிள்ளையாயிருப்பது போய் மரணப் பிள்ளையாக நேரிடும்” என்றான் உபாத்தியாயன்.

“இது தர்மமா உபாத்தியாயரே?”

“சாதாரண தர்மத்திற்கும் காதல் தர்மத்திற்கும் வித்தியாசமுண்டு. தந்தையின் இஷ்டத்துக்கு விரோதமாகப் பெண்ணைத் தூக்கிச் சென்ற அரசர்களது சரித்திரத்தை உனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறேனே” என்றான் உபாத்தியாயன்.

இதற்குப் பிறகு இருவரும் பேசாமல் படுத்துக் கொண் டார்கள். விடியற் காலையில் வீரர்கள் வந்து அஜித் சந்திரனை எழுப்பினார்கள். உபாத்தியாயன் ஸ்நானம் செய்து புது உடைகளை அணிந்து வீட்டுக்காரக் கிழவிக்குத் திருப்தியாகும்படியாகச் சில ஸ்வர்ணங்களைக் கொடுத்து விட்டுப் புறப்படச் சித்தமானான். உபாத்தியாயனும் சித்ரா வின் தம்பியும் வெளியே வந்தபோது வாயிலில் குதிரைகள் தயாராக நின்றன. ராகுலனை வீரர்கள் ஒரு குதிரையில் ஏற்றிக் கைகளைப் பின்னாலும் கால்களைப் பக்கவாட்டிலும் கயிறுகளால் கட்டினார்கள். உபாத்தியாயன் குதிரையில் ஏறுமுன்பு சித்ராவின் தம்பியை நோக்கி, “நான் சொன்னது நினைவிருக்கட்டும்” என்று கூறிவிட்டுக் குதிரைமேல் தாவி லகானை இழுத்தான். அடுத்த விநாடி உபாத்தியாயனும் அவன் வீரர்களுக்கிடையில் ராகுலனும் பறந்து சென்றார்

கள். சித்ராவின் தம்பி சற்று நேரம் அவர்கள் போன திக்கைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுத் தானும் குதிரை மீதேறி தீவிரச் சிந்தனையுடன் குதிரையை மெள்ள நடக்க விட்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மூலஸ்தானபுரப் படகுத் துறையின் தர்மசாலையிலிருந்த அந்தப் பழைய அறையில் உபாத்தியாயன் மஞ்சத்தில் சாய்ந்து ஏதோ தீர்க்காலோசனையிலிருந்தான். அறை முன்பிருந்ததைவிடச் சுத்தமாயிருந்தது. உபசேனாதிபதி உட்காரும் இடமாகையால் பல முகங்களுடன் கூடிய பிரும்மாண்டமான குத்துவிளக்கும் நின்று கொண்டிருந்தது. வெளியே படை வீரர்களின் 'பராக்' கோஷமும் தூரத்தில் படகோட்டிகளின் கூச்சலும் கேட்டுக் கொண்டிருந்தன. இத்தனை இரைச்சலும் உபாத்தியாயன் காதில் விழவில்லை. உலகத்தையே மறந்து மனக்குதிரையை எங்கெங்கோ பறக்கவிட்டுக் கொண்டிருந்த உபாத்தியாயன் நினைவை இந்த உலகத்துக்கு இழுக்கக் காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து, "எசமான் தங்களைப் பார்க்க யாரோ ஒரு ஸ்திரீ வந்திருக்கிறாள்" என்று அறிவித்தான்.

வரச்சொல் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் உபாத்தியாயன். காவலன் மறைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் வளையொலி கேட்கவே தலையைத் திருப்பிய உபாத்தியாயன் வாயிற்படியைப் பிடித்துக்கொண்டு ஓவியப் பாவைபோல் சித்ரா நிற்பதைக் கவனித்ததும் உள்ளே எழுந்த பூரிப்பால் எதையும் சொல்ல இயலாதவனாய் அவள் மேல் வைத்த கண் வாங்காமல் சிலையாகிவிட்டான். சிற்பி செதுக்கிய சிலையென வாயிற்படியில் நின்ற சித்ராதேவியும் மெள்ள மெள்ள உபாத்தியாயனை அணுகினாள். அதே சமயத்தில் வாயிற்படிக்கருகில் தோன்றிய இன்னொரு உருவம் கதவுக்கருகில் மறைந்து நின்று உள்ளே நடப்பதைக் கவனிக்கலாயிற்று.

## 33. அதே அறையில்...

உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு உபாத்தியாயன் சிறிதுகூட அசையவே இல்லை. எழுந்திருந்து சித்ராதேவியை வரவேற்கவும் முடியவில்லை. வாய் திறந்து வாவென்று ஒரு வார்த்தை சொல்லவும் முன்வரவில்லை. அவள் வந்து விட்டாள் என்பதைக் கேட்ட விநாடியில் அவன் உள்ளத்தில் துள்ளி எழுந்த பூரிப்புக்கூட எழுந்த வேகத்தில் அடங்கி விட்டது. நெடுநாள் அவன் தேடிய அதே சித்ராதேவி அந்த அறைக்குள் நுழைந்தும் மகிழ்ச்சிக்குரிய எந்த அடையாளத்தையும் அவன் முகம் காட்டவில்லை. இதழ்களில் அடிக்கடி தவழ்ந்து கொண்டிருக்கும் புன்சிரிப்புக்கூட மறைந்து கிடந்தது. சித்ராதேவி நெருங்கிக் கொண்டிருப்பதைக் கூர்ந்து நோக்கிய ஈட்டிகள் போன்ற அவன் இருவிழிகள் மேலும் கீழுமாக இருமுறை அசைந்தனவேயொழிய முகத்தில் வேறெந்த பாகத்திலும் எவ்வித அசைவும் கிடையாது.

கற்சிலையென உபாத்தியாயன் உட்கார்ந்திருந்த காரணத்தை சித்ராதேவி நன்றாக உணர்ந்திருந்தாள். ஆகவே அவன் அமர்ந்திருந்த ஆசனத்தை நோக்கி நடக்கக்கூட அவள் கால்கள் கூசின. கதவுக்கும் உபாத்தியாயன் உட்கார்ந்திருந்த இடத்துக்கும் இடையே பத்தடி தூரந்தான் இருக்கும். ஆனால், காத தூரம் கால் கடுக்க நடந்ததால் ஏற்படக்கூடிய கஷ்டம், அந்தச் சிறிய தூரத்தைக் கடப்பதில் அவளுக்கு ஏற்பட்டது. அதே அறையில் அன்றொரு நாள் மின்னல் வேகத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் அவள் புத்தியில் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து நின்று அவள் உணர்ச்சிகளைப் பல திக்குகளிலும் பிடித்திழுத்து

அலைக்கழித்தன. பல்தேவ் வலியப் பெண்டாள முயன்ற காட்சியும் தன்னை மீட்பதற்காக உபாத்தியாயன் சொந்த உயிரை அபாயத்துக்குள்ளாக்கிக் குத்துவிளக்கால் பல்தேவை அடித்த சம்பவங்களும், பின்னால் உபாத்தியாயனை விட்டுப் பிரிய மனமில்லாமல் அவனை இதே அறைக்குள் தான் இழுத்த சந்தர்ப்பங்களும் அவள் அறிவை ஆட்கொண்டு, அந்தப் பத்தடி தூரத்தைக் கடப்பதற்குள் அவளைப் படாத பாடு படுத்தியபடியால் சித்ராதேவிக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டு, தலை சுற்றும் ஸ்திதிக்கு வந்து விட்டது. பாதி தூரம் நடந்ததும் கால்கள் தள்ளாடின.

உபாத்தியாயன் அவள் நிலையைக் கவனிக்கத்தான் செய்தான். வேறொரு சமயமாயிருந்தால் அவள் தள்ளாடியதும் ஒரே பாய்ச்சலில் அவளை அணுகி, அவள் உடலைத் தாங்கித் தழுவிப் பிடித்திருப்பான். ஆனால், அன்றைய மனோநிலை அத்தகைய பாசத்துக்கோ அனுதாபத்துக்கோ இடம் கொடுக்கவில்லை. சித்ராதேவியே மெல்ல ஒரு விநாடி நின்று தன்னைச் சமாளித்துக்கொண்டு வந்து உபாத்தியாயனுக்குச் சற்றுத் தூரத்தில் தலை குனிந்து நின்றாள். உபாத்தியாயன் அவளை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். அதே சமயத்தில் அவனைப் பார்க்க அவளும் தலையை லேசாகத் தூக்கவே இருவர் கண்களும் சந்தித்தன. சித்ராதேவியின் கண்களில் துக்கம் சமுத்திரம் போல் பொங்கிக் கொண்டிருந்ததை அஜித் சந்திரன் கவனித்தான்.

முன்பு சந்தித்தபோது இருந்த தெம்பு சித்ராவிடம் தற்சமயம் இல்லையென்பதை அஜித் சந்திரன் புரிந்து கொள்ள அதிக நேரமாகவில்லை. தேகம் சிறிது இளைத்திருந்தது. இளரத்தத்தால் சற்றே சிவப்போடிருக்கக் கூடிய கன்னங்கள் விடியற்காலைச் சந்திரனைப் போல் சோபையிழந்து வெளுத்துக் கிடந்தன. மிதமிஞ்சிய கவலையால்





ஏக்கமும் துக்கமும் கலந்து துலங்கிய கண்களில் உள்ளத்தே எழுந்து கொண்டிருந்த சோக அலைகள் ஓரிரண்டு நீர்த்துளிகளையும் தேங்க வைத்தன. சித்ராவின் கருவிழிகளிலிருந்து கிளம்பிய வருணாஸ்திரம் அஜித் சந்திரனின் கோபாக்கினியை அணைத்து விடவே, தணலில் தண்ணீரைக் கொட்டியதும் ஏற்படும் 'உஸ்' என்ற ஆச்வாஸ சப்தம் உபாத்தியாயனிடமிருந்தும் கிளம்பியது. அப்படிப் பெருமூச்சு விட்ட உபாத்தியாயன் முதன் முதலில் தானே மௌனத்தைக் கலைத்து, "சித்ராதேவி! இப்படி உட்காரலாமே" என்று பக்கத்திலிருந்த ஆசனத்தைக் காட்டினான்.

சித்ராதேவி பதில் ஏதும் சொல்லாமல் ஆசனத்தில் அமர்ந்தாள். உபாத்தியாயன் பேசும் முறை வழக்கத்துக்கு விரோதமாயிருந்தாலும் அவள் அதன் காரணத்தை உணராமலில்லை. 'தேவி'ப் பட்டத்தை உபயோகப்படுத்தியதாலும், தன்னை உட்காரும்படி சொல்லி மரியாதை செய்வதிலும் உபாத்தியாயன் உள்ளம் குமுறிக் கொண்டிருக்கிறதென்பதை அறிந்து கொண்ட சித்ராதேவி மிக நிதானமாகவே பதில் சொன்னாள். "உபாத்தியாயரே! உங்களுக்கு என் மேல் கொள்ளைக் கோபம் இருக்கலாம். அதற்குக் காரணமும் இருக்கிறது. ஆனால், முழுக் கதையும் தெரிந்து கொண்டால் என் மேல் கோபிக்க மாட்டீர்கள்."

உபாத்தியாயன் மீண்டும் தன் கண்களை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

"முழுக் கதையா! அதென்ன கதை சித்ராதேவி? பாதிக் கதை அதாவது இந்த அறையில் தாங்கள் என்னை முழு முட்டாளாக்கின வரையில், மோகனக் கயிறுகளை வீசி என்னை மதியிழக்கச் செய்த வரையில் எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு நடந்த கதை, நீங்கள் மாயமாய் மறைந்த

கதை. இந்தப் பகுதியை அறியும் பாக்கியத்தைத்தான் தங்கள் அடிமை அடையவில்லையே" என்று சொல்லிக் கொண்ட உபாத்தியாயன் தன் ஆசனத்திலிருந்து எழுந்து இரண்டடி எடுத்து வைத்து சித்ராதேவிக்கு வெகு அருகில் வந்து நின்றான்.

தாழ்த்திய தலையை சித்ரா உயர்த்தவில்லை. ஆனாலும் 'தங்கள்,' 'அடிமை' போன்ற பதங்களை உச்சரிக்கையில் அவன் குரலில் இருந்த வெறுப்பையும், கேலியையும், உஷ்ணத்தையும் அறிந்திருந்தாள். ஆகையால், அவன் முகம் எப்படி இருக்கும் என்பதை மனக்கண்ணால் நன்றாகப் பார்த்தாள். அவனைச் சாந்தப்படுத்தும் நோக்கத்துடன் மீண்டும் மன்றாடினாள். "உபாத்தியாயரே! கசப்பு ஏற்பட்ட மனத்தில் எழும் எண்ணங்களும் கசந்தே இருக்கும்! என்னைப்பற்றி ஏதேதோ தவறாக நினைத்துப் பேசுகிறீர்கள். இந்த அறையில் அன்றொரு நாள் நடந்தது..." என்று ஆரம்பித்த அவள் வார்த்தைகளை, "வெறும் நாடகம், சுய நலத்தைத் தவிர வேறொன்றையும் அறியாத ஒரு ஹூண மகளின் சாகஸமும் காமவெறியும் கலந்த மிகக் கேவலமான நாடகம்" என்று அஜித் சந்திரன் குறுக்கே பாய்ந்து வெட்டினான்.

இதைக் கேட்ட சித்ராவும் ஆசனத்திலிருந்து சரேலென எழுந்தாள். கவிழ்ந்திருந்த அந்த ஹூண மகளின் தலை மிகக் கம்பீரமாக எழுந்து நின்றது. சற்றுமுன் நீர் தேங்கியிருந்த கண்களில் தீப்பொறிகள் சிந்தின.

"உபாத்தியாயரே! பேசுவதை யோசித்துப் பேசுங்கள். உங்களைத் தவிர என்னிடம் வேறொருவன் இந்த வார்த்தைகளைப் பேசியிருந்தால் அவனை அதே இடத்தில் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டிருப்பேன்" என்று சீறினாள்.



"உங்கள் ஜாதிக்கு கொலை செய்வது இயற்கை என்பதை நீ சொல்லத் தேவையில்லை சித்ரா! ஹிந்துஸ்தானம் முழுமையுமே அதை உணர்ந்து கொண்டிருக்கிறதே" என்றான் உபாத்தியாயன்.

"என்னைப் பார்த்து நகைக்கவோ, நான் பிறந்த ஜாதியைப் பழிக்கவோ இது சமயமில்லை, உபாத்தியாயரே! உங்களை எதிர்த்து வாதாட எனக்கு சக்தியில்லை. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி என்னைத் தூற்றினாலும் அவற்றுக்குப் பதில் கூறும் திராணியும் எனக்கில்லை. ஏற்கெனவே புண்ணாயிருக்கும் என் இதயத்தில் நீங்களும் ஒரு கத்தியைச் சொருகலாம். ஆனால், இது ஓர் உபசேனாதிபதிக்கு அழகல்ல," என்று மிகப் பரிதாபமான குரலில் சித்ரா பதில் சொன்னாள்.

கோபத்தையும் தாபத்தையும் மாறிமாறிக் காட்டும் அந்தப் பெண்ணைப் பார்த்த அஜித் சந்திரன் மனம் சற்று இளகினாலும், அவன் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே பதில் சொன்னான்: "இல்லாதது பொல்லாதது எதையும் நான் சொல்லவில்லையே சித்ரா! பல்தேவின் பிடியினின்று நான் உன்னைத் தப்பவைத்த பின்பும், நீ இவ்விடத்திலிருந்து போக மறுத்தது பொய்யா? 'நீங்கள் வராவிட்டால் நான் போகமாட்டேன்' என்று நீ சொன்னது பொய்யா? ஆசை காட்டி என்னை இதே அறைக்கு நீ அழைத்து வந்ததும் பொய்யா? இவற்றில் எது பொய்? உன் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கும் பக்ஷத்தில், உன் உள்ளமே சொல்லுமே இவை அத்தனையும் உண்மையென்று" என்றான்.

இந்தப் பழைய கதையைக் கேட்க அவள் உடலில் எல்லையற்ற மகிழ்ச்சி பரவியது. வெட்கம், தலையை மீண்டும் குனிய வைத்தது. "இதையெல்லாம் உண்மையல்ல

வென்று யார் சொன்னது?" என்ற வார்த்தைகூட அவள் வாயிலிருந்து மெல்லவே வெளிப்பட்டன.

"இவை அனைத்தும் உண்மையானால், உன்னுடைய அன்றைய நடவடிக்கைகளுக்கு என்மேலுள்ள ஆழ்ந்த அன்பு காரணமானால், என் உத்தரவுப்படி நீ நேராகக் காமினியிடம் போயிருக்க வேண்டும். அவ்விடத்தில் என் வரவை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்தாயா? இல்லை, எங்கோ உன் தம்பியுடன் மறைந்து விட்டாய். ஆம்; அடிச்சுவடே தெரியாதபடி மறைந்து விட்டாய். உன் அன்பு நிலையானதாய் இருந்திருந்தால் நீ என்னிடம் வந்து சேர்ந்திருக்க வேண்டும். நீ வரவில்லையென்றால் அன்று நடந்தது வெறும் சாகச நாடகமாயிருக்க வேண்டும். அல்லது ஹூணர்களுக்கே இயற்கையான காமவெறியாயிருக்க வேண்டும். வேறு எந்த விதமாக உன் நடவடிக்கைக்குச் சமாதானம் கூறமுடியும்?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

"உபாத்தியாயரே, நீங்கள் என்னைத் தூற்றலாம். உங்களுக்கு அதற்குப் பூரண உரிமை இருக்கிறது. நிகழ்ச்சிகளுக்குக் காரணத்தைக் கற்பிக்க முயன்றால் நீங்கள் சொல்லும் விஷயங்களில் எவ்வளவோ உண்மை இருக்கலாம். ஆனால், காரணங்களையும் மீறி ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் உண்டாவதில்லையா?" என்றாள் சித்ராதேவி.

உபாத்தியாயன் ஏதும் புரியாமல் அவளைப் பார்த்தான். சித்ராதேவியின் இதழ்களில் வருத்தமான புன்முறுவல் ஒன்று ஏற்பட்டது. "நான் சொல்வதன் அர்த்தம் விளங்கவில்லையா உபாத்தியாயரே... என்னைத் தூற்ற மாத்திரம் காரணங்களை வரிசையாக அடுக்கினீர்களே! அதுவும் சரியான வகையில் அடுக்கினீர்களா! ஒழுங்காய் காரணங்களைத் தொகுத்திருந்தால் உண்மை புலப்பட்டிருக்குமே, கோபம் உங்கள் நிதான புத்தியைச் சிதற அடித்துவிட்டது. நன்றாய் யோசியுங்கள். அன்று மயக்கமருந்தால் உணர்விழந்த பின்பு நீங்கள் சொன்னபடி வண்டியேறி ஓடியிருக்கலாம். ஆனால், ஏன் நிதானித்தேன்? பலநாள் உங்களிடம் அருகில் அமர்ந்து பாடம் படித்த என் புத்தியில் திடீரென ஆபத்து சூழ்ந்த அந்த இரவில்தானா காமவெறி துளிர்த்திருக்கும்...?" இங்கு சற்று நிதானித்த சித்ரா, "ஒரு பெண் இதற்குமேல் எப்படிச் சொல்வாள்... உபாத்தியாயரே..." என்று முடித்தாள்.



அஜித் சந்திரன் அவளை உற்றுப் பார்த்தான். அவன் பார்வையில் தன் பார்வை அடிபடாதிருக்க முகத்தை மறுபடியும் திருப்பிக்கொண்டாள் சித்ரா. உபாத்தியாயன் மனக்கடலிலும் கொந்தளிப்பு சிறிது அடங்கி விடவே "அப்படியானால் சென்ற இடம் தெரியாமல் நீ ஒளியக் காரணம்?" என்று மெல்ல விசாரித்தான்.

"காரணம் நான் பெண்ணாக இருப்பதுதான். உங்களோடு நான் மீண்டும் பேச்சுவார்த்தை வைத்துக் கொள்வதை என் தம்பி அடியோடு விரும்பவில்லை. வயதில் சிறியவனானாலும் அவன் ஆண்பிள்ளையல்லவா? உங்களை நான் அடைய தகப்பனார் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார் என்று தம்பி ஒரேயடியாகச் சாதித்தான். அதுவும் எங்களிடம் அடிமையாய் இருந்தவரோடு நான் மறைந்தேன் என்பது ஹூணப் பிரபுக்களிடம் பரவினால்..."

"உன் தந்தை அவமானத்தால் குனிய வேண்டி இருக்கும்."

இதற்கு சித்ரா பதில் ஏதும் சொல்லவில்லை. உபாத்தியாயன் அறையில் மௌனமாகச் சிறிதுநேரம் உலாவினான்.

"உன் வாழ்க்கையைப் பற்றி இவ்வளவு தூரம் தீர்மானம் செய்திருக்கும் உன் தம்பி இப்பொழுது எதற்காக உன்னை

என்னிடம் அனுப்பினான்?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

"ஒரு முக்கியக் காரணமாக."

"என்ன காரணம் அது?"

"ஓர் உயிரை யாசிக்க."

"யார் உயிர்?"

சித்ரா சொன்ன பதில் அஜித் சந்திரனைத் திடுக்கிட வைத்தது.

"சிறையிலிருக்கும் அவருடைய உயிரைத்தான்" என்றாள் சித்ராதேவி.

விதியின் விசித்திரத்தை நினைத்து உபாத்தியாயன் வாய் விட்டுப் பெரிதாய்ச் சிரித்தான்.

# 34. லஞ்சம்

உணர்ச்சிகளை எப்பொழுதும் உள்ளடக்கிப் பிறரையே ஆழம் பார்க்கும் சுபாவமுள்ள உபாத்தியாயன் அப்படிப் பயங்கரமாக வாய்விட்டு உரக்கச் சிரித்தது சித்ராவுக்குப் பெரும் ஆச்சரியமாய் இருந்தது. அத்துடன் தன் கோரிக் கைக்கு அவன் இணங்குவானோ மாட்டானோ என்ற பயமும் கலந்து கொண்டது.

அவனைத் தான் யாசிக்கும் பரிசு எத்தன்மையது என்பதை சித்ரா நன்றாகவே உணர்ந்து கொண்டிருந்தாள். இருந்தாலும் அவள் என்ன செய்ய முடியும்? தகப்பனாரின் வாக்குறுதி தம்பியின் உத்தரவு இரண்டையும் மீறி அவள் உபாத்தியாயன் பக்கம் மாறுவதென்பது இலேசான காரியமா? அப்படியே மாறினாலும் மூர்க்க குணமுள்ள ஹூணர்கள் உபாத்தியாயனையும் தன்னையும் சமயம் பார்த்து ஒழித்துவிட மாட்டார்களா?

ஹூணர்கள் நாடோடி ஜாதியாய் இருந்தாலும் சில முக்கியக் கட்டுப்பாடுகள் அவர்களிடமுண்டு. தங்கள் வர்க்கப் பெண், ஜாதி முறை மீறி நடந்தால் அவளையோ அவள் தங்களை விட்டுச் செல்வதற்கு காரணமாயிருந்தவர் களையோ கொலை செய்யுமுன் தூங்க மாட்டார்கள்! ஹூணர்கள் நாடோடிகள்தான்; காட்டுமிராண்டிகள்தான். ஆகவே காட்டில் திரியும் புலிக்கும் சிங்கத்துக்கும் உள்ள வர்க்க அபிமானம் அவர்களுக்கும் உண்டு. மூர்க்கர்கள்தான்; ஆனால் முட்டாள்களல்ல. எது தவறு, எது சரியென்று பாகுபாடு செய்யும் அறிவு அவர்களுக்கு இருந்தது. அந்தப் பாகுபாடு இந்து சமூக விதிகளுக்கு ஒவ்வாததாய் இருக்

கலாம். ஆனால், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பல வகுப்பு களைப் போல ஹூணர்களும் தங்களுக்கென சில விதி களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். தன் மகளுக்கு ஒருவனைக் கணவனாகத் தகப்பன் வரித்து விட்டால் அந்தப் பெண்ணின் திருமணம் சம்பந்தப்பட்ட வரையில், அதுதான் முடிவு. ஆண் சொல்படி பெண் கேட்டாக வேண்டும் என்ற திட்டத்துடன் ஹூண வகுப்பினர் நடந்து கொண்டதால் தான், அநேக நாடுகளைக் கவர்ந்து ஆங்காங்கு வேரூன்றிய பல வருஷங்களுக்குப் பின்னரும் ஹூணமரபு அழியாம லேயே இருந்து வந்தது. ஹூணப் பிரபுக்கள் பிற மங்கை களை மணந்தார்களேயொழிய ஹூண மகளிர் வெளி ஜாதியாரை மணக்க அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கெடுபிடியில் அந்த ஜாதியிருந்ததால் கூர்ஜர ஹிந்து ஸ்திரீ களை அவர்கள் மணந்து, பிற்காலத்தில் ராஜபுத்திர வம்சங்கள் இந்தியாவில் தோன்றியபோது ஹூணர்களின் வீராவேசமும் தங்கள் வம்சப் பெண்களின் கௌரவத்துக் காக உயிரைக்கூட விடும் துணிவும் அவர்களுக்கு இருந்து வந்தது. பிற்கால ராஜபுத்ர சந்ததிகளைப் போலவே, முற்கால ஹூணர்களும் முறை தவறும் தங்கள் பெண்களிடமும் அவர்களை நாடும் பிற ஆண்களிடமும் தீராத பகை கொள்ளுவது வழக்கம்.

ஆகவே, முன் தடவை தர்மசாலை அறையிலிருந்து சித்ரா காலங்கடந்து வெளியே வந்து வண்டியில் ஏறியதும் அவள் தம்பி அவள்மீது சொல்லொணாத சந்தேகங்கள் கொண்டான். உபாத்தியாயன் உத்தரவுப்படி காமினியிடம் போக உத்தேசித்ததை அவன் கண்டித்தான். முதலில் சித்ரா அவன் சொன்ன வார்த்தைகளைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. பிறகுதான் அவன் விளக்கினான்.

“சித்ரா! ஒருவேளை தகப்பனார் உயிரோடிருந்து திரும்பி வந்து உபாத்தியாயனை நீ மணந்துகொண்டாய்



என்று கேள்விப்பட்டால் உபாத்தியாயனைக் கொல்லும் வரையில் தூங்கமாட்டாரே, தெரியுமா?” என்று கேட்டான்.

அதைக் கேட்ட சித்ரா திகைத்தாள். உபாத்தியாயன் உடம்பில் ஒரு ஊசி குத்தினாலும் சகிக்காத அந்த ஹூண மகளின் இதயம், அவன் உயிருக்கே ஹானி ஏற்படும் என்பதை அறிந்தபின்பு தம்பியின் போதனையைக் கேட்கவே தூண்டியது. ஆகையால் தம்பியுடன் மறைந்துவிட்டாள்.

ஆனால் இன்று அவள் உபாத்தியாயனிடம் தன் மனோ நிலையையோ, அவன் அபாயத்திற்கு உள்ளாகக் கூடாது என்பதற்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்வதையோ எடுத்து விளக்க முன்வரவில்லை.

தகப்பன் இஷ்டத்துக்காகவும், தம்பியின் கட்டளைக்காக வும் தன் கடமையை உத்தேசித்துமே ராகுலன் உயிரை யாசிப்பதாகப் பாவனை செய்தாள். அவள் பாவனை உபாத்தியாயனுக்கு உண்மையென்றே பட்டது.

என்ன புத்திசாலியாயிருந்தால்தானென்ன; பெண்ணின் பாவனையில் ஏமாறாத புருஷன் உலகத்தில் ஏது?

ஆகையால்தான் உபாத்தியாயன் சிரித்தான். பெண் களின் சலன புத்தியைப் பற்றி பெரியோர்கள் சொல்லி யுள்ள ஆயிரம் சுலோகங்கள் அவன் நினைவுக்கு வந்தன. காற்றின் சலனத்தையும் கல்லின் கடினத்தையும் விஷத்தின் கொல்லும் தன்மையையும் ஒன்றாகச் சேர்த்துப் பெண்களை சிருஷ்டித்தான் என்ற ஆன்றோர் வாக்கு அவன் மனத்தில் எழுந்து ரீங்காரம் செய்தது. இந்த எண்ணங்களால் அவன் சிரிப்பு நின்று முகத்தில் வெறுப்பும் இதழ்களில் ஒரு கேலிப் புன்முறுவலும் தோன்றின. சித்ராவை உற்று நோக்கிய உபாத்தியாயன், “ஓகோ சித்ராதேவி! வருங்காலக் கணவன் உயிரை யாசிக்க வந்திருக்கிறீர்களோ? நல்ல விசித்திரம்!” என்றான்.

அவன் இதழ்களில் இருந்த கேலிச் சிரிப்பையோ பேச்சில் தொனித்த பரிகாசத்தையோ அவள் கவனிக்கத் தவறவில்லை. ஆனால், தன்னால் அவனுக்கு எவ்விதக் கெடுதியும் வரக்கூடாதென்ற உறுதியில், அவனுக்குத் தன் மேல் ஓரளவு வெறுப்பும் ஏற்படக்கூடிய முறையில் பதில் சொன்னாள்:

"புருஷனாகப் போகிறவரை, விடுவிக்க ஒரு பெண் முயல்வதில் விசித்திரமென்ன இருக்கிறது உபாத்தியாயரே?" என்று கேட்டாள் சித்ரா.

"புருஷனாகப் போகிறவர் மேல் இவ்வளவு காதல் எத்தனை நாட்களாக ஏற்பட்டது சித்ரா?" என்றான் அஜித்.

"காதல் என்பதைவிடக் கடமை என்று சொன்னால் உசிதமாயிருக்குமே உபாத்தியாயரே! இது நீங்கள் அறியாததா?" இதைச் சொன்ன சித்ரா தலையைக் குனிந்து கொண்டாள்.

உபாத்தியாயன் அவள்மேல் வைத்த விழியை வாங்காமலே, "முன்னால் ஏற்பட்ட காதலைவிடப் பின்னால் உற்பத்தியான கடமை முக்கியமானதா சித்ரா?" என்று கேட்டான்.

"அறியாத உள்ளங்களில் ஆயிரம் ஆசைகள் எழலாம். ஆனால், அவை கைகூடுவது, சமூகம் அவற்றை எவ்வளவு தூரம் சகிக்கும் என்பதைப் பொறுத்திருக்கிறது. பருவகாலம் காதலுக்கும் இடம் கொடுக்கிறது. சமூகம் அதற்கு இடம் கொடுத்தால்தான் வாழ்க்கை சந்துஷ்டியாக இருக்கும். ஒரு பெண் கல்யாணத்திற்கு முன் ஒருவர்மேல் அன்பு கொள்வது குற்றமாகாது. ஆனால் அந்தப் புருஷன் தனக்குக் கிட்டமாட்டான் என்று தெரிந்ததும், அந்த அன்பைப் பெண் அணைக்க முயல்வதுதான் நியாயம். குடும்பமும் சமூகமும்



நிர்ணயிக்கும் புருஷனிடம் உண்மையாக நடந்துகொள்வது அவள் கடமை."

"கடமை சரிதான்; இயற்கை..."

"இயற்கையை ஜயிப்பது மனிதன் கடமை; இந்திரியங்கள் இயற்கையின் வழியாக நம்மை இழுத்துச் செல்கின்றன. அவற்றை ஜயிப்பதுதான் விவேகம் என்று நீங்களே பாடம் சொல்லியிருக்கிறீர்களே!"—சித்ராவின் தர்க்கம் உபாத்தியாயன் பொறுமையையும் சோதித்து விட்டது.

"சித்ரா, வீண் வாதத்தை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். இந்திரியங்களை அடக்கும் நீதி முறைகள் உனக்கும் எனக்கும் ஏற்பட்டனவல்ல; முற்றும் துறந்த சந்நியாசிகளுக்காக ஏற்பட்ட நியாயங்கள் அவை. வாழ்க்கைச் சமுத்திரத்தில் ஊசலாடும் நாம் சதா உணர்ச்சி அலைகளால் தூக்கி எறியப்படுகிறோம். காதலிக்கும் பருவத்தில் துறவறத்தையும் துறக்க வேண்டிய வயதில் காமத்தையும் இச்சிப்பவர்கள் ஒன்று, பெரிய மகான்களாய் இருப்பார்கள்; அல்லது முட்டாள்களாயிருப்பார்கள். நாமிருவரும் மகான்களின் கோஷ்டியில் சேர முடியாது. முட்டாள்தனத்தையாவது விட்டு விடுவோம். நீ சற்று முன்பு என்ன சொன்னாய்; நீ இப்பொழுது என்ன கேட்கிறாய் என்பதை யோசித்துப் பார். கடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பார். சண்பகத் தோட்டத்தில் உன்னிடம் அன்பைத் தெரிவித்து உன் தந்தையிடம் சாட்டையால் அடிபட்டது முதல் இன்று வரை உனக்காக நான் பட்டுள்ள பாடுகளை எண்ணிப் பார். குடும்பத்தையும் சமூகத்தையும் பற்றி நீ பேசுகிறாய். உன்னிடம் மனத்தைப் பறிகொடுத்தது முதல் நான் குலத்தை யோசித்தேனா? சமூகத்தைப் பற்றிச் சிந்தித்தேனா? இல்லை, உலகத்தைப் பற்றித்தான் கவலைப் பட்டேனா! இல்லையே. சித்ரா! காதல் ஒரு தனி உலகம். அதில் இன்னொரு உலகத்துக்கு இடம் கிடையாது.

குடும்பமும் சமூகமும் அதை என்றும் கட்டுப்படுத்தியது கிடையாது; கட்டுப்படுத்தியிருந்தால் தகப்பனை மீறி ஓடிய மங்கையையும், எளிய ஏந்திழையாரின் அன்புக்காக அரச பீடத்தை உதறிய மண்டலாதிபதிகளையும் நாம் சரித்திரத்தில் படித்திருக்க முடியுமா? காதலுக்காக எதையும் செய்ய மனம் துணியும்! அப்படியிருக்க நீ ராகுலன் விடுதலையை என்னிடம் யாசிக்கிறாய்! தான் காதலிக்கும் பெண்ணின் கையில் இன்னொரு புருஷனை ஒப்புவிக்க நான் என்ன பைத்தியமா? முடியாது சித்ராதேவி! முடியவே முடியாது" என்று கடகடவென உபாத்தியாயன் பொழிந்து தள்ளினான்.

அவன் பேசிய வேகம், சொற்களை உச்சரித்த திடம், கண்களிலிருந்த உறுதி அத்தனையையும் சித்ரா கவனித்தாள். இத்தகைய ஒரு வீரனைக் காதலனாகப் பெற்றதால் ஓர் இன்பம் அவள் உடல் முழுவதும் பரிமளித்தது. அங்கங்கள் ஒவ்வொன்றும் அவன் அணைப்பை எதிர்பார்த்துத் துடித்தன. உபாத்தியாயன் அந்த சமயம் அவளைத் தழுவிப் பிடித்திருந்தால் கதை வேறு போக்கில் திரும்பியிருக்கும். ஆனால், அவள் மன ஓட்டத்தைச் சிறிதும் அறியத் திறனில்லாமல் அடித்தது உபாத்தியாயனின் கோபம்.

தான் இழக்கப் போகும் அருஞ்செல்வத்தை நினைத்து, அவள் கண்களில் திரண்ட நீர்த்துளிகளை உபாத்தியாயன் தவறாக அர்த்தம் செய்துகொண்டான். ராகுலனை விடுவிக்க முடியாததால் ஏற்பட்ட துன்பத் துளிகளாகவே அவற்றைக் கருதிய உபாத்தியாயனின் கோபம் பன்மடங்காகியது.

அவன் கோபத்தை அவள் கவனித்துத் தன்னை திடப் படுத்திக்கொண்டாள். அவன் கோபத்தை இன்னும் கிளறி அவன் பூரணமாகத் தன்னை வெறுக்கும்படி செய்தால் உபாத்தியாயன் ராகுலனை விடுவிப்பான். அவனை மணப்பதால் தன் வாழ்க்கை பாழாகும். ஆனால், தான் காதலிக்கும் உபாத்தியாயனுக்கு ஹூணர்களால் எந்தத் தீங்கும் நேரிடாது. அவனைக் காப்பாற்ற தான் பாழாவதில் ஒரு தனி இன்பம் அவள் உள்ளத்தே எழுந்தது. ஆகவே தன் கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்தாள். மடியிலிருந்த ஒரு சம்புடத்தை மெல்ல எடுத்து உபாத்தியாயனை நோக்கிச் சித்ரா நீட்டினாள். "உபாத்தியாயரே! இதைப் பெற்றுக் கொண்டு அவரை விட்டுவிடுங்கள்" என்று நடுங்கும் குரலில் கூறினாள்.

அந்தச் சம்புடத்தைப் பார்த்து உபாத்தியாயன் முகத்தில் எல்லையற்ற வெறுப்பும் கோபமும் கலந்து தாண்டவமாடின. பழுக்கக் காய்ச்சப்பட்ட ஈட்டிகளைவிட அவன் கண்கள் பயங்கரமாக ஜொலித்தன. சம்புடத்தை அவள் கையிலிருந்து பிடுங்கிய உபாத்தியாயன் அதைத் தன் கையால் திறந்து பார்த்தான். வைர வைடூரியங்கள் அடங்கிய அந்தப் பழைய சம்புடந்தான்.

சம்புடத்திலிருந்து சித்ராவின்மீது திரும்பிய கண்களில் இருந்த வேகம் உபாத்தியாயன் குரலிலும் இருந்தது. "அடி பாதகி, லஞ்சம் கொடுத்து என்னை விலைக்கு வாங்கி விடலாம் என்றா நினைக்கிறாய்? இத்தனை நாட்களுக்குப் பின்னர் என்னைப் பற்றி நீ அறிந்து கொண்டது இவ்வளவு தானா? இந்தா இதை எடுத்துக்கொண்டு உடனே ஓடிவிடு. இனி என் முகத்தில் விழிக்காதே!" என்று சம்புடத்தை அவள் காலடியில் வீசி எறிந்தான். விலையுயர்ந்த வைர வைடூரியக் கற்கள் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின.

அதுவரை பொறுத்துக் கொண்டு கதவருகில், ஒளிந்திருந்த உருவம் மறைவிடத்தை விட்டு வெளியே வந்து அறைக்குள் நுழைந்தது. திரும்பிப் பார்த்த சித்ராவின் முகத்தில் சொல்லொண்ணாத கிலி படர்ந்தது.

# 35. சேனாதிபதியின் ஊகம்

உதடுகளில் லேசான புன்முறுவல் தவழக் கண்களில் விஷமம் விளையாடத் தோரமானா அவ்விருவர் எதிரிலும் நின்றான். அவனைக் கண்ட சித்ராவின் உள்ளத்தில் எண்ண அலைகள் பல எழுந்து மோதின. தங்கள் சம்பாஷணையை அவன் எவ்வளவு தூரம் கேட்டிருப்பான். எவ்வளவு விஷயங்களை அவற்றிலிருந்து ஊகித்திருப்பான் என்ற பயம் அவளைச் செயலிழந்து நிற்கும்படி செய்து விட்டது. உபாத்தியாயன் நிலையிலும் திடீர் மாறுதல் ஏற்படத்தான் செய்தது. ஆனால் அந்த மாறுதல் சித்ராவின் மாறுதலைப் போன்றதல்ல. அபாயங்களிலேயே சிக்கிச் சிக்கி உழன்று நன்றாகக் கடைசல் பிடிக்கப்பட்ட மனத்தை உடைய ராஜதந்திரியின் மாறுதல் அது.

அஜித் சந்திரன் முகத்திலிருந்த கோபம் தோரமானாவைக் கண்டதும் அரை விநாடியில் அகன்று விட்டது. முகத்தில் சந்தோஷச் சாயை படர்ந்தது. யாரும் அறிந்து கொள்ள முடியாத, வழக்கமான அந்த ஆழமான பார்வை கண்களில் நிரம்பியது. புயலினால் கொந்தளித்த கடல் மீண்டும் அமைதியடைந்தாலும் பேராழத்துடன் விளங்குவதைப் போல இருந்தது, உபாத்தியாயனின் நிலையும்! வழக்கமான நிலையை அடைந்துவிட்ட உபாத்தியாயன் தோரமானாவை நோக்கி, "சேனாதிபதியவர்கள் இங்கு வரும் விஷயம் எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இந்த மாதிரி ஓர் அசந்தர்ப்ப நிலையில் இந்த அறையை வைத்திருக்க மாட்டேன்" என்றான்.



"இரு காதலர்களிடையே அசந்தர்ப்பமாகக் குறுக்கிட்டதற்கு நான்தான் மன்னிப்புக் கேட்க வேண்டும். யுத்த அவசரம் ஒன்றுமட்டுமில்லாவிட்டால், இப்படி நான் சமய சந்தர்ப்பமில்லாமல் உள்ளே நுழைய மாட்டேன்; அதுவும் சித்ராதேவியைப் போன்ற ஓர் அழகியின் அந்தரங்க விஷயங்களில் நிச்சயமாகப் புகுந்திருக்க மாட்டேன். ஆனால், என்ன செய்வது? அவசர ராஜாங்க வேலை" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் தோரமானா பேசினான். ஆனால், அவன் பேசின அத்தனையும் பாசாங்கு என்பதையும், தங்களை ஆழம் பார்க்கவே தோரமானா இப்படி அடங்கியதுபோல் வேஷம் போடுகிறான் என்பதையும் மற்ற இருவரும் உணர்ந்தே இருந்தார்கள். உணர்ந்த இருவரில் சித்ராதேவி ஏதும் பேச முடியவில்லை. காதலரிருவரைப் பற்றி அவன் பிரஸ்தாபித்தபோது பெண்ணான சித்ரா எப்படிப் பேசுவாள்? ஆகவே, உபாத்தியாயனே சம்பாஷணையில் ஈடுபட்டான்.

"சேனாதிபதியவர்களின் ஊகம் சரியானதல்ல. இங்கு காதல் நாடகம் ஏதும் நடக்கவில்லை. அதற்கு முற்றும் புறம்பான நாடகமே நடந்திருக்கிறது. இங்கு இதோ கீழே சிதறியிருக்கும் வைரங்கள் எனக்காகச் சித்ராதேவி கொண்டு வந்திருக்கும் வரதட்சணையல்ல! அவர்கள் தமது வருங்கால கணவனை விடுவிப்பதற்காக அளிக்கும் சிறு காணிக்கை! சேனாதிபதியவர்கள் மட்டும் இப்படித் திடும் பிரவேசமாக வராமல் சற்று முன்னதாகவே வந்து வெளியில் பத்து நிமிஷங்கள் நின்றிருந்தால் நான் சொல்லும் உண்மையை நேரிடையாகவே தெரிந்துகொண்டிருக்கலாம்" என்றான் உபாத்தியாயன்.

தோரமானாவின் கண்களில் சந்தேகச் சாயை படர ஆரம்பித்தது. தான் ஏற்கெனவே வந்ததை உபாத்தியாயன் அறிந்துகொண்டுதான் பேசுகிறானா, அல்லது அகஸ்மாத்

தாக அப்படிப் பேசுகிறானா என்று தோரமானா யோசித் தான். அப்படித் தான் மறைவில் நின்று கவனித்ததை உபாத்தியாயன் ஏற்கெனவே கவனித்திருந்தால் வைரக் கற்களை வீசி எறிந்து தன்னை ஏமாற்ற உபாத்தியாயன் கையாண்ட நாடகமாக இருக்குமோ என்று சிந்தித்தான். தோரமானா ஆழ்ந்து யோசிப்பதைப் புரிந்து கொண்ட உபாத்தியாயன் அவன் சிந்தனையைப் பாதியில் வெட்டி, "சேனாதிபதியவர்கள் மஞ்சத்தில் உட்காரலாமே; நின்று கொண்டு எத்தனை நேரம் பேசுவது. தவிர வெகு தூரம் பிரயாணம் செய்திருக்கிறீர்கள். கொஞ்சம் தாகசாந்திக்கு ஏதாவது கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்று உபசாரம் செய்ய ஆரம்பித்தான். வெறும் பேச்சோடு நிற்காமல் மஞ்சத் தையும் தட்டி, "டேய் யாரங்கே?" என்று குரலும் கொடுத் தான். உள்ளே நுழைந்த முகுந்தனை நோக்கி கீழே கிடக்கும் வைர, வைடூரியக் கற்களைப் பொறுக்கிச் சம்புடத்தில் அடைக்கும்படி உபாத்தியாயன் உத்தரவிட்டான். அத்துடன் சித்ராவின் கையையும் பிடித்து மெள்ள அழைத்துப்போய் ஓர் ஆசனத்தில் உட்கார வைத்தான். உபாத்தியாயன் செய்த ஏற்பாடுகளைக் கவனித்த தோரமானாவும் மேற்கொண்டு ஏதும் பேச வழியில்லாமல் அறையின் நடுவேயிருந்த மஞ்சத் தில் அமர்ந்தான். முகுந்தன் வைரக் கற்களைச் சம்புடத்தில் போட்டு மூடியதும், அதைச் சித்ராவிடம் கொடுத்த உபாத்தி யாயன், முகுந்தனை அறைக்கு வெளியே காவல் இருக்கும் படியாக உத்தரவிட்டு, தோரமானாவுக்கு எதிரில் மிகுந்த மரியாதையுடன் நின்றான்.

உபாத்தியாயனைச் சற்று நேரம் கூர்ந்து கவனித்த தோர மானா, "உபாத்தியாயரே! நான் இங்கு வந்தபோது சித்ரா தேவியைச் சந்திப்பேனென்று நினைக்கவே இல்லை. இவர் களைப் பார்த்து வெகுநாளாகிறது. போன தடவை நாம்



மூவரும் சந்தித்தது சித்ராதேவியின் மாளிகையில்" என்று பேச்சைத் துவங்கினான்.

"ஆம் மகராஜ்! அப்பொழுது நீங்களிருவரும் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருந்தீர்கள். நான்..." இதை உபாத்தி யாயன் சொல்லுகையில் ஏக்கம் கலந்த பெருமூச்சொன்று சித்ராதேவியிடமிருந்து கிளம்பியது. ஆகவே உபாத்தியாயன் அதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதை நிறுத்தினான்.

தோரமானா நிறுத்தவில்லை. பழைய கதையை நினைவு படுத்தினான். "அப்போது எங்கள் தலைவர் அடிலன் செய்தது எனக்குப் பொறுக்கவில்லை. சித்ராதேவிக்கும் பொறுக்கவில்லை" என்று, கதையைத் தொடர்ந்தான்.

"அந்தப் பழைய கதையை இப்பொழுது எதற்காகப் பேச வேண்டும்?" என்று உபாத்தியாயன் இடைமறித் தான்.

தோரமானா லேசாகச் சிரித்தான். "அந்தப் பழைய கதைக்கும், இன்றைய நிகழ்ச்சிக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்பதைக் கவனித்தீர்களா உபாத்தியாயரே! நாம் மூவரும் சந்தித்த அன்றும் சித்ராதேவி லஞ்சம் கொடுத்தாள்! இன்றும் லஞ்சம் கொடுக்கிறாள். பணம் எந்த இடத்திலும் வேலை செய்யும் என்பது சித்ரா தேவியின் சித்தாந்தமா யிருக்க வேண்டும். ஆனால் அன்றைய நிகழ்ச்சிக்கும் இன்றைய நிகழ்ச்சிக்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. அன்று உபாத்தியாயர் ஹூணர்களின் அடிமை, கைதி. இன்றோ— உபசேனாதிபதி! அன்று சித்ராதேவி உமக்காக லஞ்சம் கொடுத்தாள்; இன்று உமக்கே லஞ்சம் கொடுக் கிறாள். மனித வாழ்க்கையைக் கடவுள் எப்படி எப்படியெல் லாம் விசித்திரமாகப் பின்னிக்கொண்டு போகிறார்!" என்று விவரித்த தோரமானா, தன் பேச்சால் அவர்களிடை எழக் கூடிய உணர்ச்சிகளைக் கவனித்தான்.

தோரமானாவின் பிரசங்கமோ, பிரசங்கத்தில் கண்ட தர்க்கமோ, தர்க்கத்தில் விளைந்த கடவுளைப் பற்றிய உண்மையோ, எதுவுமே உபாத்தியாயனைச் சிறிதும் பாதித்த தாகத் தெரியவில்லை. உபாத்தியாயன் பொதுவாக பதில் சொன்னான்: "நம் எல்லோர் வாழ்க்கையிலும் மலைவாசல் பெரிய பெரிய சம்பவங்களைச் சிருஷ்டித்திருக்கிறது. மலை வாசலில் படையெடுக்கப் போய் நான் அடிமையானேன். அடிமையானதால் சித்ராதேவிக்கு உபாத்தியாயனானேன். உபாத்தியாயனானதால் அவர்கள் அன்பிற்குப் பாத்திர மானேன். அன்புக்குப் பாத்திரமானதால் எனக்கு உயிர்ப் பிச்சையளிக்க வேலைக்காரர்களுக்கு லஞ்சம் கொடுத்ததால் வேலைக்காரர்கள் என்னைத் தூக்கிச் சென்றார்கள். தூக்கிச் சென்றதால் சேனாதிபதியவர்கள் அவர்களைப் பின்தொடர நேர்ந்தது. பின்தொடர நேர்ந்ததால் ஆனந்ததேவியைச் சந்திக்க முடிந்தது. ஆனந்ததேவியைச் சந்தித்ததால் எனக்கும் அனுகூலம். தங்களுக்கும் அனுகூலம். தாங்கள் சேனாதிபதி யானீர்கள். தங்களிடம் உபசேனாதிபதியாகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. உபசேனாதிபதியானதால்..." என்று கதை சொல்லிக் கொண்டு போன அஜித் சந்திரனைத் தோரமானா இடைமறித்து, "தக்ஷசீலத்திற்குப் போகும் வழியில் வில்லவர்கள் புரட்சியிலிருந்து சித்ராதேவியைக் காப்பாற்ற முடிந்தது" என்று வாக்கியத்தை முடித்தான்.

"உண்மைதான் மகராஜ்! அந்தப் புரட்சிக்குப் பயந்து சித்ராவின் தந்தை ஓடிவிட்டதால் தங்கள் அதிகாரம் ஹூணர்களிடையே பூரணமாக நிலைத்து விட்டது அல்லவா?" என்றான் அஜித் சந்திரன்.

தோரமானா உபாத்தியாயனை ஒரு விநாடி ஏறெடுத்துப் பார்த்தான். பிறகு, "சித்ராவின் தந்தை ஓடிவிட்டது உண்மைதான். ஆனால் திரும்பவும் வர முயல்கிறாரே தெரியுமா உபாத்தியாயரே?" என்று கேட்டான் தோரமானா.



ஒன்றும் புரியாததுபோல் உபாத்தியாயன் தோரமானாவைப் பார்த்தான். தோரமானாவின் கண்களில் சந்தேகமும் குரூரமும் கலந்து தாண்டவமாடின. "உபாத்தியாயரே! நான் வெகு தொலைவிலிருந்து வருகிறேன். நீர் எதிரிகளுக்கு வெகு அருகிலிருக்கிறீர். நதிக்கு அக்கரையிலிருக்கும் குப்த ராஜ்யப் படைகளைச் சித்ராவின் தந்தை அடிலன் தலைமை வகித்து நடத்துகிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் உபாத்தியாயன் உள்ளத்தில் பகீரென்றது. நதிக்கு அக்கரையிலிருக்கும் குப்தப் படைகளுக்கு அடிலன்தான் தலைமை வகிக்கப் போகிறானென்பது ராகுலனிடமிருந்து கிடைத்த ஓலையில்தானே இருந்தது. அதைப்பற்றி தோரமானா எப்படித் தெரிந்து கொண்டான்? ராகுலனிடமிருந்து கிடைத்த ஓலையில் மேற்படி தகவல்கள் ஆனந்ததேவி தோரமானாவுக்கு எழுதியிருப்பதாகக் கண்டிருந்ததே? ஆனால், ராகுலன் குப்த ராஜ்யத்திலிருந்து தோரமானாவுக்குக் கொண்டு வந்த ஓலையில் அந்தத் தகவல் இல்லையே? இன்னொரு தூதனையும் ஆனந்ததேவி அனுப்பியிருப்பாளா? அப்படியானால் பூரா திட்டமும் தோரமானாவுக்குத் தெரிந்திருக்குமா?

இப்படிப் பலவாறாக யோசித்த உபாத்தியாயன் தோரமானாவை நோக்கி, "குப்த ராஜ்யப் படைகளை அடிலனா தலைமை வகித்து நடத்தப் போகிறான்? இருக்காது மகராஜ்! இதற்குக் குப்த சக்கரவர்த்தி ஒப்புக் கொள்ளமாட்டாரே!" என்றான் ஏதும் தெரியாதது போல.

"ஏன் ஒப்புக்கொள்ளமாட்டார்? குப்தப் படைகளின் ஒரு பகுதிக்கு அடிலனைத் தலைவனாக்கி அவனுக்கு அருகே ஒரு உபசேனாதிபதியை நியமித்தால் அடிலன் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளலாம். தவிர,

அடிலனைத் தலைவனாக வைத்துப் படையெடுத்தால் ஹூணர்களிடை பிளவுண்டாக்கலாம். இவ்வளவு சௌகரியங்கள் இருக்கும் போது குப்த மன்னர் ஒப்புக் கொள்ளாமலா இருப்பார்? ஒப்புக்கொண்டு விட்டார், உபாத்தியாயரே! அப்படி ஒப்புக்கொண்டு படைகளும் அக்கரையில் தயாராயிருக்கும் செய்தி எங்கோ இருந்த எனக்குத் தெரிகிறது. அருகிலிருக்கும் உமக்குத் தெரிய வில்லை என்கிறீர்? இது விந்தையாயில்லையா!''

“இதில் விந்தை ஏதுமில்லை. சேனாதிபதி அவர் களுக்குக் குப்த ராஜ்யத்தில் இருக்கும் வசதிகள் எனக் கில்லை?''

உபாத்தியாயன் ஆனந்ததேவிக்கும் தனக்குமுள்ள தொடர்பைப் பிரஸ்தாபிக்கிறான் என்பதை உணர்ந்த தோரமானாவும் ஒரு வெடியை வீசினான். “ஏன் இல்லை என்கிறீர்கள். இஷ்டப்பட்டால் மன்னரே உங்களுக்குத் தகவல் கொடுக்கமாட்டாரா?'' என்று தோரமானா கேட்டான்.

“உபாத்தியாயன் காதலுக்காகக் குப்த ராஜ்ய விரோதி யாகி விட்டான் என்ற விஷயம் குப்த ராஜ்ய மக்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும். சேனாதிபதியான தாங்களும் அதைத் தெரிந்துதான் என்னை உபசேனாதிபதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது குப்த சக்கர வர்த்தி என்னிடம் நம்பித் தகவலை ஏன் கொடுக்க வேண்டும்?'' என்றான் உபாத்தியாயன்.

“மக்கள் அறியாததை மன்னன் அறிந்திருக்கலாம்'' என்றான் தோரமானா.

உபாத்தியாயன் முகத்தில் சிறிது சந்தேகக் குறி தோன்றியது. “நீங்கள் சொல்வது புரியவில்லை'' என்றான் கடைசியாக.



“புரிய வைக்கிறேன்'' என்று கூறிய தோரமானா அறைக்கு வெளியே சென்று முகுந்தனைக் கூப்பிட்டு “மாடிப்படிகளுக்குக் கீழே இருவர் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து வா!'' என்று உத்தரவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மாடிப்படிகளில் சிலர் ஏறிவரும் சப்தம் கேட்டது. வருகிற பேர்வழிகள் யாரா யிருக்கலாம் என்று உபாத்தியாயன் சிந்தித்தான். சித்ராவும் இதைப்பற்றி யோசிக்கவே, இருவர் கண்களும் ஒரு முறை சந்தித்தன. அடுத்த விநாடி அக்கண்கள் அறை வாயிலை நோக்கின. பின்னால் வருபவர்களுக்கு வழிவிட்டு முகுந்தன் நின்றான். உருவிய வாளுடன் பல்தேவ் பின் தொடர மிரண்ட பார்வையுடன் ராகுலன் உள்ளே நுழைந்தான்.

# 36. உபாத்தியாயன் தந்திரம்

தோரமானாவுக்கும் அஜித் சந்திரனுக்குமிடையே நிகழ்ந்த அத்தனை சம்பாஷணைகளிலும் குறுக்கிடாமல் சிலையென உட்கார்ந்திருந்த சித்ராதேவியைக்கூட சென்ற அத்தியாயத்தின் இறுதிச் சம்பவம் ஓர் உலுக்கு உலுக்கியே விட்டது. ராகுலன் பிரவேசித்ததனால் பலவித உணர்ச்சிகளுக்கு வசப்பட்ட அவள், மஞ்சத்தில் நிம்மதியுடன் உட்கார இயலாதவளாய் எழுந்திருந்து, சாளரத்தருகே சென்று முகத்தை வெளிப்பக்கமாக நீட்டி வீதியைக் கவனித்துத் தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். தோரமானா அந்தப் பழைய புன்முறுவலுடனேயே அந்த அறையில் இருந்த இதர நாடகப் பாத்திரங்களைக் கவனித்தான். ராகுலன் உள்ளே வந்ததும் தோரமானாவிடம் மரியாதையால் கத்தியைச் சற்றே தாழ்த்திய பல்தேவும் உபாத்தியாயனைப் பார்த்து லேசாக நகைத்தான்.

உபாத்தியாயன் மூளை வெகு துரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது. தோரமானா திடீரென மூலஸ்தானபுரம் வந்ததுதான் விசித்திரமேயொழிய அவன் ராகுலனைச் சந்தித்ததில் எந்த விசித்திரமும் இல்லை என்பதை உபாத்தியாயன் உணர அதிக நேரமாகவில்லை. ராகுலனை உபாத்தியாயன் சிறைப்பிடித்து வந்தது படைத்தலைவனான பல்தேவுக்குப் புதிதல்ல. அடிலன் மாப்பிள்ளையாக வரவிருந்தவனும் குரூரச் செயல்களுக்குப் பெயர் போனவனுமான ராகுலனின் பெயர் எல்லோருக்கும் தெரியும். ஆகவே ஏற்கெனவே தன்னிடம் விரோதமுள்ள பல்தேவ் ராகுலனைத் தீர விசாரித்திருப்பான் என்பதிலோ தன்னை ஒழிப்ப



தற்காகச் சகல விவரங்களையும் ராகுலன் பல்தேவிடம் உளறியிருப்பானென்பதிலோ உபாத்தியாயனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. தோரமானா மூலஸ்தானபுரம் வந்ததும் முதன் முதலாகப் பல்தேவ் ராகுலன் கதையைத் தோரமானாவிடம் சொல்லியிருப்பான் என்பதும் வெட்ட வெளிச்சம். ஆகவே குப்த மன்னர் தனக்குச் செய்தி அனுப்பிய விஷயம் தோரமானாவுக்குத் தெரிந்திருந்ததில் உபாத்தியாயனுக்கு வியப்பில்லை. மாளவத்தின்மேல் படையெடுக்கத் திட்டம் போட்டிருந்த தோரமானா அதை நிறுத்திவைத்து அவசரமாக மூலஸ்தானபுரம் வரவேண்டிய காரணமென்ன என்பதைப் பற்றித்தான் உபாத்தியாயன் ஊகிக்க முயன்றான்.

ஆனால், அந்த ஊகத்திற்கெல்லாம் சமயமில்லாததால் ராகுலன் தோரமானாவுக்கு அளித்த செய்தியால் ஏற்பட்ட அபாயத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதில் மட்டும் உபாத்தியாயன் தன் புத்தியைச் செலுத்தலானான். ஆகவே ராகுலன் பிரவேசத்தை ஏதோ சாதாரண சம்பவம் போல் பாவித்து, "தங்கள் உத்தரவுப்படி ராகுலனை நான்தான் கைது செய்துகொண்டு வந்தேன். அவன் உயிரைச் சித்ராதேவி யாசித்ததும் தங்கள் உப்பைச் சாப்பிடும் நான் அவர்கள் அளித்த லஞ்சத்திற்கு உடன்படாததும் தாங்கள் அறிந்ததுதான். என்மேல் வேறு எவ்விதக் குற்றத்தைச் சுமத்தினாலும் இங்கிருக்கும் சில கொள்ளைக்காரர்களைப் போல் பண விஷயத்தில் நான் ஆசைப்படுகிறேன் என்ற குற்றத்தை மட்டும் என்மீது சுமத்த மாட்டீர்கள் என்பது நிச்சயமாகத் தெரியும்" என்றான் உபாத்தியாயன்.

தோரமானாவுக்குப் பதில் சொல்லும் பாவனையில் தன்மீது உபாத்தியாயன் ஓர் அம்பைத் தூக்கியெறிவதைக் கண்ட பல்தேவின் உள்ளத்தில் சற்று கிலி ஏற்பட்டதால் இருந்த இடத்திலேயே தன்னை லேசாக அசைத்துக் கொண்டு சங்கடப்பட்டான். சாளரத்திற்கு வெளியே தலையை நீட்டிக்

கொண்டிருந்த சித்ராதேவியும் திரும்பி உபாத்தியாயனை ஒரு கணம் கவனித்தாள். ஆனால், உபாத்தியாயன் முகம் கல்லாயிருந்தது.

தோரமானா உபாத்தியாயனுக்கு உடனே பதில் சொல்ல வில்லை. உபாத்தியாயனை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்து, அவனது தைரியத்தைத் தனக்குள் மெச்சிக் கொண்டான். பிறகு மெள்ளச் சொன்னான்: "உபாத்தியாயரே! உங்கள் சொந்த உபயோகத்திற்கென்று நீங்கள் பணத்தில் எப் பொழுதும் ஆசை வைத்ததில்லை என்பது எனக்குத் தெரியும்" என்று.

"சேவை செய்யும் எஜமானனுக்காகப் பணம் திரட்டு வதை சொந்த ஆசையென்று சொல்ல முடியாதே" என்று உபாத்தியாயன் பதில் சொன்னான்.

"எந்த இடத்திலிருந்துகொண்டு யாருக்குச் சேவை செய்கிறோம் என்பதை பொறுத்தது அது. சேவை செய்யும் இடத்துக்கும், செல்வம் பெருகும் இடத்துக்கும் வித்தியாசம் இருந்தால் அதை 'துரோகம்' என்றுகூடச் சொல்வதுண்டு" என்றான் தோரமானா.

தான் குப்த ராஜ்யத்திற்கு அனுப்பிய ஏராளமான செல்வத்தைப் பற்றித் தோரமானா பிரஸ்தாபிக்கிறா னென்பதை அஜித் சந்திரன் தெரிந்து கொண்டான். என்ன காரணத்திற்காகப் பணம் அனுப்பப்படுகிறதென்பதையும் தோரமானா தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறான் என்ற விஷயத்திலும் அஜித் சந்திரனுக்குச் சந்தேகமில்லை. இருந் தாலும் சங்கடமான நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு வேண்டிய தந்திரங்களை உபாத்தியாயன் சாமர்த்தியமாகப் பிரயோகித்தான்.

"சேவை செய்யும் இடத்தின் க்ஷேமத்திற்காகச் செல்வம் வேறு இடத்திற்கு அனுப்பப்படுமானால் அதைத் 'துரோகம்'



என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்று உபாத்தியாயன் மரியாதை ததும்பும் குரலில் கேட்டான்.

வலையை எப்படிப் பின்னினாலும் உபாத்தியாயன் தப்பித்துக் கொள்வதைப் பார்த்த தோரமானா, அவன் சாமர்த்தியத்தை உள்ளூர வியந்தான். "நீலதுர்க்கத்தில் காமினியிடம் சொல்லியனுப்பியபடி குப்த ராஜ்யத்திற்குத் தங்கப்போன விஷயமாக உபாத்தியாயன்மீது நேரிடையான குற்றத்தைச் சாட்ட முடியாது. சரியான குற்றச்சாட்டில் லாமல் உபாத்தியாயனை விசாரணைக்குக் கொண்டு வர முடியாது. இவனைப் பதவியிலிருந்து நீக்குவதும் அபாயம். பதவியிலிருக்கும் வரை இவனைக் கண்காணிக்கவாவது வழியுண்டு. உபாத்தியாயன் நமது பிடியிலிருந்து தவறினால், பிறகு அவன் என்னென்ன தீங்கிழைப்பானோ?" என்று மனத்திற்குள்ளேயே சிந்தித்த தோரமானா, ராகுலனை உபாத்தியாயனுக்கு எதிராக உபயோகிக்கத் தீர்மானித்து, "உபாத்தியாயரே! ராகுலனிடமிருந்து நீர் ஒரு கடிதத்தை வாங்கி எரித்தது உண்மையா?" என்று வினவினான்.

விஷயம் நேருக்கு நேராக வருவதைக் கண்ட உபாத்தி யாயன் அதை வேறு பக்கம் திருப்ப முற்பட்டான். ராகுலனை ஒருமுறை கூர்ந்து கவனித்த பிறகு கடைசியாக தோரமானாவைப் பார்த்து, "மகராஜ்! தாங்கள் இந்த ராகுலனின் குற்றத்தை மன்னித்து விடுவதானால் நான் அந்தக் கடிதம் சம்பந்தமான உண்மையைச் சொல்லி விடுகிறேன்" என்றான்.

ஏற்கெனவே பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த ராகுலன், "மகராஜ்! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. இந்த உபாத்தியாயனை நம்பாதீர்கள்" என்று கூவினான். அவனது நடுக்கமும், திகிலும் சித்ராதேவிக்குப் பெருத்த அவமானமாக இருந்தது. இந்த மாதிரிப் பயங்கொள்ளியை

அப்பா தனக்குத் தேர்ந்தெடுத்தாரே என்று நினைத்தாள். உபாத்தியாயனுடைய அடுத்த வார்த்தைகள் ராகுலன் விஷயத்தில் அவளுக்கு இன்னும் அதிக பீதியை விளை வித்தன.

"மகராஜ்! குப்த ராஜ்யத்திலிருந்து தங்களுக்கு வந்த தூதனை இந்த ராகுலன் கொலை செய்திருக்கிறான்! உண்டா, இல்லையா என்று விசாரியுங்கள்" என்றான் உபாத்தியாயன்.

"பொய், பொய், சுத்தப் பொய். தூதன் தங்களை நாடி வரவில்லை. உபாத்தியாயனை நாடி வந்தான்" என்று ராகுலன் கத்தினான்.

உபாத்தியாயன் கடுமையாகப் பேசினான். "யாரை நாடி வந்தான் என்பதிருக்கட்டும். நீ அவனை முதுகில் குத்திக் கொன்றது உண்மையா, இல்லையா?"

"கொன்றேன். அவன் சேனாதிபதியவர்களுக்குத் துரோகி என்பதால் கொன்றேன்," என்று சமாளித்துக் கொள்ளப் பார்த்தான் ராகுலன்.

"சேனாதிபதியவர்களிடம் உனக்குள்ள பக்தியை மெச்சு கிறோம். அவ்வளவு பக்தியுள்ள நீ எதற்காக நீலதுர்க்கத் திலிருந்து மறைந்தாய்? நீ யார் என்பதை ஏன் அப்பொழுதே சொல்லவில்லை?" என்று உபாத்தியாயன் கேட்டான். மந்த புத்தியுள்ள ராகுலன் திருதிருவென்று விழித்தான்.

"மகராஜ்! இவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏதேதோ சொல்லுகிறான். இவன் பெரிய வேஷக்காரன்! இவன் குப்த மன்னருக்குக் கையாள்" என்று ராகுலன் உளறினான்.

"மாறு பெயரில் ஹூண ராஜ்யத்திற்குள் பிரவேசித்த உன்னைப் போன்ற அயோக்கியன் வேவுகாரனா, அல்லது வருஷக்கணக்கில் ஹூண உபசேனாதிபதியாக ஊழியம் புரிந்து பல யுத்தங்களில் வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத் திருக்கும் நான் வேவுகாரனா என்பதை சேனாதிபதி அவர்களே தீர்மானிக்கட்டும். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்! குப்த ராஜ்யத் தூதனை நீ கொன்றதுண்டா இல்லையா?" என்று அதட்டினான் உபாத்தியாயன்.



"நான்— நான்—" என்று ஏனோ இழுத்தான் ராகுலன்.

உபாத்தியாயன் அவனை வெறுப்புடன் பார்த்துவிட்டுத் தோரமானாவின் பக்கமாகத் திரும்பினான். "குப்த ராஜ்யத் திலிருந்து தூதன் வந்தது உண்மைதான். ஆனால் அவன் தங்களுக்குச் செய்தி கொண்டுவந்தான். அவனைக் குத்திக் கொன்று கடிதத்தை அபகரித்ததைப் பற்றி இவன் பெருமை யடித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான் இவனைக் கைது செய்தேன்" என்றான் அஜித் சந்திரன்.

தோரமானாவின் புத்தியே குழம்பும் ஸ்திதியில் வந்து விட்டது. இருவரில் யார் சொல்வது உண்மை என்பதை அறிய முடியாத நிலையைத் தோரமானா அடைந்தான். எந்த நிலைமையையும் தனக்கு அனுகூலமாக்கிக் கொள்ளும் தன் புத்தியைப் பற்றித் தோரமானாவுக்குச் சந்தேகம் இல்லாத தால் இன்னும் ஒரு கேள்வியைக் கேட்டான், "எனக்கு வந்த கடிதமானால் அதை நெருப்பிலிட்டுக் கொளுத்துவானேன்?" என்று.

"தங்களுக்கு ஏற்கெனவே தெரியாத செய்தி அதில் ஏதுமில்லை. மூலஸ்தானபுரத்தைத் தாக்கும் விஷயத்தைப் பற்றியே பிரஸ்தாபித்திருந்தது. அதைப்பற்றி, நானே நீல துர்க்கத்தில் தங்களிடம் தெரிவித்து விட்டேன். கடிதம் அந்தரங்கக் கடிதமானதாலும் நானும் அதிகப் படைத் துணையின்றி நாலைந்து மெய்க்காவலாளர்களுடன் பிரயாணம் செய்ததாலும் கடிதத்தை வைத்திருப்பது அபாயமென்று தீர்மானித்தேன்" என்றான் உபாத்தியாயன்

உபாத்தியாயன் சமாதானம் தேவையாயிருந்தது. ஆனால் ராகுலன் விடவில்லை. தன் உயிருக்கு ஆபத்து நேர்ந்து விடப் போகிறதே என்பதற்காக "மகராஜ்! அந்தச் செய்தி தங்களுக்கு வரவில்லை. என் வார்த்தையை நம்புங்கள்! வேண்டுமானால் நான் சொல்வதை நிருபிக்க முடியும். அந்தச் செய்தியை இவன் எரித்தபோது நான் மட்டுமில்லை, இன்னொருவனும் இருந்தான்..." என்ற ராகுலன் பேச்சை உபாத்தியாயன் இடைமறித்து, "ராகுலா! நீ சொல்லிய பொய்கள் போதும். இதுவரை சொன்னதற்காக நீ தூக்கி லிடப்படப் போகிறாய்" என்று, அவன் மேலே பேசாமல் தடுத்தான்.

ராகுலன் நிற்கவில்லை. "மகராஜ்! என்னுடன் சித்ரா வின் தம்பியும் இருந்தான். அவனை விசாரியுங்கள், அவன் இருப்பிடம் சித்ராவுக்குத் தெரியும்" என்று கூறினான்.

இதைக் கேட்ட தோரமானாவின் புருவங்கள் ஒருமுறை நெற்றியில் உயர்ந்து தாழ்ந்தன. சித்ராவின் மூச்சு நின்று விடும் போலிருந்தது. தன் தம்பி தோரமானாவிடம் சிக்கி னால் அவன் கதி அதோகதியாகிவிடுமே என்று சொல்ல வொண்ணாத திகைப்படைந்த அவள், ராகுலனை எரிக்கும் விழிகளுடன் பார்த்து, "சீ! நீ ஒரு மனிதனா? உன் உயிரை யாசிக்க நானும் வேலையற்று இவ்வளவு தூரம் வந்தேனே" என்று சீறினாள்.

அடிலன் பிள்ளை தன்னிடம் சிக்கப்போகிறான் என்ற உவகையால் தோரமானா மெல்லச் சிரித்தான்.

# 37. சித்ராதேவிக்குச் சிறை

சித்ராவின் சீற்றத்தைப் பற்றியோ, தம்பியைக் காட்டிக் கொடுத்ததால் அவளுக்குத் தன்மேல் ஆயுள் பூராவும் ஏற்படக்கூடிய வெறுப்பைப் பற்றியோ ராகுலன் சிறிதும் கவலைப்படவேயில்லை. அற்பமான மனிதன் ஆபத்தில் சிக்கிக்கொண்டால், தான் தப்பும் வழியைப் பார்ப்பானே யொழிய தன் நடவடிக்கைகளால் ஏற்படக் கூடிய விளைவு களைப் பற்றிக் கவலைப்படவே மாட்டான். அந்த வர்க்கத் தைச் சேர்ந்த ராகுலனும் தோரமானாவிடமிருந்து தப்ப யாரை வேண்டுமானாலும் பலி கொடுக்கத் தயாராயிருந் தான். ஆகையால், தன்மேல் சீறிய சித்ராவை ஏறெடுத்துப் பார்த்து, "அஜித் சந்திரன் என்மேல் பயங்கரமான குற்றத்தைச் சுமத்தும்போது நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்? தம்பியிருக்குமிடத்தைச் சேனாதிபதியவர்களிடம் சொல்வதில் எந்தவிதத் தவறுமில்லை. நம்முடைய எதிரிகள் வகுப்பைச் சேர்ந்தவனும் ஹூணர்களை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவனுமான குப்த மன்னரின் உளவாளி யிடம் நம்பிக்கை வைப்பதை விட, நமது ஜாதியைச் சேர்ந்த சேனாதிபதி தோரமானாவிடம் நம்பிக்கை வைப்பது நல்ல தல்லவா? நன்றாக யோசித்துப் பார்!" என்றான்.

எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளுவது போலிருந்தது சித்ராவுக்கு. சுட்டுப் பொசுக்கிவிடும் விழிகளால் அவனைப் பார்த்தாள். அவன் முகத்திலிருந்த பயமும் அவன் அல்ப உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தன்னுடைய தம்பியைப் பலி கொடுக்க வந்த அவன் தன்மையையும் பார்த்த சித்ரா தேவியின் உள்ளத்தில் கோபம் மறைந்து இகழ்ச்சி வேரூன்றி

யது. இகழ்ச்சி ஊன்றியது போல் அவள் உள்ளத்தின் உணர்ச்சி, வெறுப்புக்கும், நகைப்புக்குமே இடம் கொடுத்தது. "தங்களுக்குச் சேனாதிபதியவர்களிடம் எத்தனை நாளாக இவ்வளவு அபரிமித நம்பிக்கை ஏற்பட்டது? அவ்வளவு நம்பிக்கையுள்ள நீங்கள் மலைவாசலில் எங்கள் மாளிகை எரிக்கப்பட்டதும் நேராக சேனாதிபதியவர்களிடம் வராமல் எதற்காக நமது வகுப்பினரின் விரோதியான குப்த மன்னனிடம் ஓடினீர்கள்?" என்று கேட்டுச் சிறிது நகைக்கவும் செய்தாள்.

ராகுலன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். ஆனால், மெள்ளச் சமாளித்துக்கொண்டு, "நானாகப் போக வில்லை, உன் தகப்பனார்தான் என்னைப் பலவந்தமாக அழைத்துச் சென்றார்" என்றான் ராகுலன்.

முதலில் சித்ராவின் தம்பியைக் காட்டிக் கொடுத்து விட்டு இப்பொழுது அவள் தகப்பன் மேலும் ராகுலன் பழி சுமத்துவதைப் பார்த்த தோரமானா நகைத்தான். அதுவரை மௌனமாக இருந்த அஜித் சந்திரன்கூட களுக்கென்று சிரித்தான். அஜித் சந்திரன் சிரிப்பு அந்த அறையிலிருந்த எல்லோரையும் சற்று நிதானிக்க வைத்தது. சேனாதிபதி முன்பாக வேவுகாரன் என்று குற்றஞ்சாட்டப் பட்டு விசாரணையிலிருக்கும் அஜித் சந்திரன் சிரித்தது பல்தேவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சித்ராவுக்கு அது அசந்தர்ப்பமாகப் பட்டது. தோரமானாவின் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பியது. ராகுலனுக்கு பயத்தை விளைவித்தது.

இப்படி ஒருமுறை சிரித்ததால் பலபேருடைய பல அபிப்பிராயங்களைக் குழப்பிவிட்ட அஜித் சந்திரனைத் தோரமானா சற்று ஏற இறங்கப் பார்த்தான். அஜித் சந்திரன் இதழ்களில் லேசான புன்முறுவல் காணப்பட்டது. "சேனாதி



பதியவர்கள் மன்னிக்கவேண்டும். இவன் எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஏதேதோ உளறித் தன் கழுத்துக்குத் தூக்குக்கயிற்றைச் சம்பாதித்துக் கொள்கிறானே என்பதை நினைத்ததால்தான் சிரிப்பு வந்தது" என்றான் அஜித் சந்திரன்.

அறையிலிருந்த மற்றவர் கண்களும் அஜித் சந்திரன் மேல் திரும்பின. அஜித் சந்திரனின் பேச்சு ராகுலனின் பயத்தை அதிகமாகக் கிளறிவிடவே, "சேனாதிபதியவர்களே, இந்த அஜித் சந்திரனைப் பேச விடாதீர்கள். இவன் உண்மையையெல்லாம் பொய்யாகத் திருப்பிவிடுவான். நான் சொல்லுவதை நம்புங்கள். இவன் உண்மையில் உங்கள் விரோதி, வேவுகாரன்" என்று கூவினான்.

"ராகுலா! சேனாதிபதிக்கு முன்பாக இரைச்சல் போடாதே! நீ எதைச் சொல்வதாயிருந்தாலும் அடக்கமாகச் சொல். ஓரிரண்டு விஷயங்களைத் தெளிவுபடுத்திவிட்டால் சேனாதிபதியவர்களுக்கு உன்மேல் திடமான நம்பிக்கை பிறக்கும்" என்றான் அஜித் சந்திரன்.

"எந்த விஷயங்களைத் தெளிவுபடுத்தச் சொல்கிறாய்?" என்று ஆக்ரோஷத்துடன் கேட்டான் ராகுலன்.

"சித்ரா கேட்ட கேள்விக்கு நீ முதலில் பதில் சொல்ல வேண்டும். வில்லவர்கள் அடிலன் மாளிகையைக் கொளுத்தியதும் நீ நமது சேனாதிபதியிடம் வராமல் எதிரிகளிடம் நம்பிக்கை வைத்து, குப்த ராஜ்யத்திற்கு ஏன் ஓடினாய்? இரண்டாவதாக குப்த ராஜ்யத்துக்கு நீயும் அடிலனும் ஒன்றாகவே போயிருக்க, அடிலன் குப்தப் படைத்தலைவனாகவும், நீ ஆனந்ததேவியின் தூதனாகவும் மாறியது எப்படி? விளக்கமாகச் சொல்," என்று அஜித் சந்திரன் கேள்விகளை வீசினான்.

ராகுலனும் விடவில்லை. இந்தக் கேள்வியால் அஜித் சந்திரன் சரியாகச் சிக்கிக்கொண்டதாக எண்ணித் தைரிய மாகவே பதில் சொன்னான். "சேனாதிபதியவர்கள் எங்கள் மாளிகையைக் கொளுத்தச் சொல்லியதாக நீதான் மலை வாசலில் எங்களுக்குத் தகவல் கொடுத்தாய். உன்னை நம்பித்தான் நாங்கள் குப்த ராஜ்யத்திற்கு ஓடினோம். அங்கு சிறையிலடைக்கப்பட்ட என்னை ஆனந்ததேவியின் மகன் பூரகுப்தன் விடுவித்ததால் நான் அவர்களுக்குத் தூத னானேன்..."

அவன் பேச்சைக் கேட்கக் கேட்க அஜித் சந்திரன் முகத்தில் சந்தோஷக் குறி அதிகமாகப் படர்ந்தது.

"ராகுலா! நீ சொல்வதை உண்மையென்றே வைத்துக் கொள்வோம். ஆனால், நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லையே! நீயும் அடிலனும் குப்த ராஜ்யத் திற்குச் சேர்ந்தே போயிருக்கிறீர்கள். நீயோ அடிலனுக்கு மருமகனாகப் போகிறவன். அப்படியிருக்க குப்த மன்னன் உனக்குச் சிறைவாசமும், உன் வருங்கால மாமனாருக்குப் படைத்தலைமைப் பதவியையும் ஏன் அளித்தார்?" என்று கேட்டான்.

ராகுலன் மனத்தில் மீண்டும் பயம் அதிகரிக்கத் தொடங்கியது. பதில் சொல்லவோ வழியில்லை. 'நான் அடிலனைக் காட்டிக் கொடுக்கப் பார்த்தேன். அதற்காக குப்த மன்னர் என்னைச் சிறையிலடைத்தார்' என்றால் சித்ராதேவியை மணம் புரிவது குதிரைக் கொம்பாகிவிடுமே என்று நினைத்தான். மரணமில்லாவிட்டால் போதும் என்ற நினைப்பில் உண்மையைக் கக்கினான்.

"சேனாதிபதியவர்களே! அடிலன் முதலில் குப்த வீரர் களிடம் சிக்கவில்லை. என்னைத்தான் பிடித்துக்கொண்டு போனார்கள். நான் தங்கள் விரோதியான அடிலனைத் தொலைப்பதற்காக அவனைக் குப்தமன்னனிடம் காட்டிக் கொடுத்தேன். நான் தங்களுக்குச் செய்திருக்கும் சேவையை சொல்லப்போனால் தங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும்" என்றான் ராகுலன்.



"சேனாதிபதிக்கு மட்டுமல்ல ராகுலா? எங்கள் எல்லோ ருக்குமே ஆச்சரியமாக இருக்கிறது. பெண்ணைக் கொடுக்க விருந்த மாமனுடன் குப்த ராஜ்யத்திற்கு ஓடுகிறாய், அங்கு நீ தப்ப அவனைக் காட்டிக் கொடுக்கிறாய்; ஆனால், குப்த மன்னர் உன் போன்ற அயோக்கியர்களுக்கு இடம் கொடுப்ப தில்லையாகையால் உன்னைச் சிறையிலடைத்து ஜன்ம விரோதியான அடிலனை உபசரிக்கிறார். சிறையிலிருந்து தப்பிய நீ சேனாதிபதியவர்களுக்கு ஓலை கொண்டு வருகிறாய்! இப்பொழுது எங்களிடம் சிக்கிக்கொண்ட நீ இங்கு தப்புவதற்காக வருங்கால மைத்துனனைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறாய்! ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விட்டாய் ராகுலா! சேனாதிபதியவர்கள் குப்த மன்னனுக்குச் சிறிதும் தாராளத்தில் சளைத்தவரல்ல. அங்கு நீ காட்டிக் கொடுத்த அடிலனுக்குப் பதவியளித்து உன்னைக் குப்த மன்னன் சிறையிலடைத்தது போல், இங்கு சித்ராதேவியின் தம்பிக்குப் பதவியளித்து உன்னைச் சேனாதிபதியவர்கள் சிறையிலடைக்க மாட்டார்களென்பது என்ன நிச்சயம்? சித்ராவின் தம்பி நேர் எதிரியாக இருக்கலாம். ஆனால் நேர் எதிரியை நம்பலாம். உன்னைப்போல் சுயநலத்திற்காக எதையும் செய்யக்கூடியவனை யார் நம்புவார்கள்?" என்று கேட்டான்.

உபாத்தியாயன் சம்பாஷணையை ஏதேதோ மார்க்கத் தில் திருப்பித் தன்னை அதலபாதாளத்தில் ஆழ்த்த பார்ப்பதை அறிந்த ராகுலன் என்ன சொல்லுவதென்று புரியாமல் வாயடைத்து நின்றான். மிக ஆபத்தான நிலை யைத் தன் தம்பிக்கு அனுகூலமாக உபாத்தியாயன் திருப்

வதை அறிந்த சித்ராதேவி நன்றி ததும்பும் கண்களால் அவனைப் பார்த்தாள்.

தோரமானா தீவிரமான யோசனையிலிருந்தான். உபாத்தியாயன் மீண்டும் பேசி அவன் யோசனையில் குறுக்கிட்டான். "சேனாதிபதியவர்களுக்கு நான் யோசனை சொல்ல வேண்டியதில்லை. இது மிகவும் எளிதான விஷயம். அடிலன் தங்களுக்குப் பகிரங்க எதிரி. எதிரியின் மகள் தங்களிடம் சிக்கியிருக்கிறாள். அவளைக் கொண்டு அவள் தம்பியைப் பிடிப்பது சுலபமென்று நினைக்கலாம். ஆனால் சித்ராவையும் அவள் தம்பியையும் நன்கு அறிந்த தாங்கள் அப்படி நினைக்கமாட்டீர்கள். சித்ராதேவி இஷ்டப்படா விட்டால் தம்பியிருக்கும் இடத்தைப் பற்றி அவளிடமிருந்து எந்தத் தகவலும் வராது என்பது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. ஆனால், இந்த யுத்த காலத்தில் ஹூண சாம்ராஜ்யம் உருவாகிவரும் சமயத்தில் ராகுலன் போன்ற சந்தர்ப்பவாதிகள் சாட்சியத்தைக் கொண்டு பெரிய முடிவுகளில் இறங்குவது அபாயம். சித்ராவின் தம்பியை நாம் சிறைப்பிடிப்பதாக வைத்துக் கொள்வோம். இது அடிலனுக்குத் தெரிந்தால் உடனே மூலஸ்தானபுரத்தைத் தாக்கலாம். மூலஸ்தானபுரத்தின் சைன்னிய பலம் தங்களுக்குத் தெரியும். பல்தேவ் உட்பட எல்லோரும் கட்டுப் பாட்டுக்கு உட்படாத கொள்ளைக்காரர்கள். கண்மூடிக் கண் திறப்பதற்குள் மூலஸ்தானபுரம் எதிரிகள் வசமாகிவிடும். வைதஸ்தாவின் இக்கரையில் குப்தப் படைகள் ஊடுருவி னால் இங்கு நீங்கள் எதிரியைச் சமாளிக்கும்படி இருக்கும். சாம்பல் நதியைத் தாண்டி நாகர்கள் பிரதேசத்தை வெட்டி மாளவத்தை ஆக்ரமிக்க முடியவே முடியாது" என்று உபாத்தியாயன் விளக்கினான்.

உபாத்தியாயன் சொல்வது பூராவும் உண்மையென்பதை தோரமானா உணர்ந்தான். 'மூலஸ்தானபுரம் எதிரிகள்



வசமாவது மிகச் சுலபம். பிள்ளை பிடிபட்ட செய்தியை அறிந்தால் அவசரக் குடுக்கையான அடிலன் உடனே மூலஸ் தானபுரத்தைத் தாக்கினாலும் தாக்கலாம். அந்தப் பிராந்தியத் தில் கடும் போர் மூண்டால் மாளவப் படையெடுப்பை எப்படி நடத்துவது? எதிரியை இருபுறங்களில் சமாளிப்பது சுலபமல்லவே' என யோசித்தான். ஆகவே உபாத்தியாயனை நோக்கி, "இப்போது என்னதான் செய்யலாம்?" என்று கேட்டான்.

"இங்கு எதுவும் நடக்கவில்லையென்ற ஏமாற்றத்திலேயே அடிலனை வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அடிலன் தாக்குதலை நிதானமாக நடத்துவான். சித்ராவின் தம்பி சுதந்திரமாக உலாவுவதால் எந்த நஷ்டமுமில்லை. ராகுலனை விடுவித்தால் அடிலன் நல்லெண்ணத்தைப் பெற்று, சித்ராதேவியைப் பெற அவன் தங்களைக் காட்டிக் கொடுக்க அடிலனிடம் ஓடலாம்..." என்று பேசிக்கொண்டு போன உபாத்தியாயனின் பேச்சில் குறுக்கே ராகுலன் புகுந்து, "சேனாதிபதியவர்களே! இந்த அயோக்கியனை நம்பாதீர்கள்; நான் தங்களுக்குத் துரோகம் செய்யமாட்டேன்" என்று கூவினான்.

தோரமானா பார்த்த பார்வையில் ராகுலனின் கத்தல் அடங்கியது. உபாத்தியாயன் மேலும் சொன்னான் "இருவரை நாம் காவலில் வைத்திருக்க வேண்டும். ஒன்று ராகுலன், இரண்டாவது சித்ராதேவி."

சித்ரா அவனை உற்றுப் பார்த்தாள். ஆனால், உபாத் யாயன் தோரமானாவைப் பார்த்தே பதில் சொன்னான் "சித்ராதேவி தம்பியிடம் மீண்டும் போனால் இங்கு இருக்கு நிலைமையைப் பற்றி அவனுக்குத் தகவல் கொடுக்கலா பிறகு இவள் தம்பி அடிலனுக்குச் செய்தி அனுப்பலா மூலஸ்தானப் படை பலவீனமும், ராகுலன் அடிலனை

பற்றிய தகவல்களை உடைத்துவிட்ட விஷயமும் நாம் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு விட்டோம் என்கிற விவரமும் அடிலனுக்குத் தெரிந்தால் அவன் உடனே இந்த நகரத்தைத் தாக்கலாம். இதனால் ஹூணப் படைகளின் யுத்தநிலை பாதிக்கப்படும். ஆகவே இருவரையும் பாதுகாப்பில் வைக்க வேண்டும். ஆனால் ஒரு வேண்டுகோள், சித்ராதேவியைப் பல்தேவ் ஏற்கெனவே கற்பழிக்க முற்பட்டிருக்கிறான். அவனுடைய காவலில் மாத்திரம் வைக்காதீர்கள்'' என்றான் உபாத்தியாயன்.

ராகுலனை மாட்டி வைத்ததோடு உபாத்தியாயன் தன்னையும் சங்கடத்தில் மாட்டிவைக்க ஏற்பாடு செய்வதைக் கண்ட பல்தேவ் வெலவெலத்துப் போனான்.

தோரமானாவைத் தவிர வேறொரு மனிதனாயிருந்தால் இந்த நிலையில் என்ன செய்வதென்பதை அறியாமல் குழம்பிப் போயிருப்பான். ஆனால் தெளிவான புத்தியுள்ள தோரமானா வெகு சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்தான்.

"ராகுலனை சிறையிலடைத்து வை. அவன் தப்பினால் நீ தூக்கிலாட வேண்டியிருக்கும்'' என்று பல்தேவுக்கு உத்தரவிட்டான். பெரிய கண்டத்திலிருந்து தப்பிய பல்தேவ் துரிதமாக ராகுலனை அறைக்கு வெளியே இழுத்துச் சென்றான். அவர்கள் சென்றதும் "உபாத்தியாயரே! மூலஸ்தானபுரத்தை நான் நேரில் கவனித்துக் கொள்கிறேன். மலைவாசல் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. கபீசத்திலுள்ள தலைவன் அந்தப் பிராந்தியத்தில் நுழைய ஏற்பாடு செய்வதாகக் கேள்விப்படுகிறேன். நீங்கள் மலைவாசலுக்குச் சென்று அந்த ஆபத்தைச் சமாளியுங்கள். உங்கள் அபிப்பிராயப்படி சித்ராதேவியையும் காவலில் வைக்க வேண்டியதுதான். ஆனால் அவள் தப்பாமல் கவனிக்க உங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. உங்களிடம்



அவளை ஒப்படைக்கிறேன். ஜாக்கிரதையாகக் காவல் புரியுங்கள்,'' என்று புன்முறுவலுடன் உத்தரவிட்டு, வெளியே செல்ல ஆசனத்தை விட்டு எழுந்தான்.

உபாத்தியாயன் மூளை துரிதமாக வேலை செய்தது. அடிலன் பெண் மலைவாசலில், பிள்ளை மூலஸ்தானபுரத்தில், வருங்கால மாப்பிள்ளை சிறையில்! சிறிது நேரத்தில் அடிலனிடம் பிணைக்கப்பட்ட பாத்திரங்களை எப்படிக் கத்தரித்து பாரதத்தின் பல மூலைகளில் விசிற விட்டான் தோரமானா! தவிர, தானும் மலைவாசலில். இனி எந்தச் செய்தியை குப்த ராஜ்யத்திற்கு அனுப்புவதானாலும் ஒரு மாதமாவது ஆகும். தன் உதவியின்றி குப்தப் படைகள் என்ன செய்யும்? இவற்றைச் சிந்திக்கச் சிந்திக்க குப்த ராஜ்யத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகம் உபாத்தியாயனைச் சூழ்ந்துகொண்டது.

உபாத்தியாயனின் யோசனையை தோரமானாவின் சொற்கள் கலைத்தன. "நான் வருகிறேன் உபாத்தியாயரே! உடனே மலைவாசலுக்குக் கிளம்பத் தயாராகுங்கள்?'' என்று கூறிவிட்டு வெளியே சென்றான் தோரமானா. அவன் சென்றதும் உபாத்தியாயனை அணுகிய சித்ராதேவி, "உபாத்தியாயரே! சேனாதிபதியின் உத்தரவுப்படி என்னைச் சிறை செய்யலாமே'' என்றாள்.

உபாத்தியாயன், அவளுக்கு வெகு அருகில் சென்று, "சித்ரா! அந்தச் சிறை உனக்குச் சம்மதம்தானே?'' என்றான். அவன் கரங்கள், மென்மையாகத் துவண்டு நின்ற அவள் அழகிய உடலைச் சுற்றிச் சென்று தனக்காக இழுத்து அவளைச் சிறைப்படுத்தத் தொடங்கின.

# 38. பூரகுப்தன் ஓலை

பாடலிபுத்ரத்து அரண்மனை ஆசார வாசலில் உதய தாரைகள் ஊதி நின்றன. மன்னனை எழுப்ப மங்கையர் முன்னறையில் மீட்டிய வீணைகளின் ஒலியும் சுவர்களைத் தாக்கி இன்னிசை எதிரொலி கிளப்பி மெல்ல மெல்ல ஓய்ந்து கொண்டிருந்தது. அரசன் அறைக் கதவை ஓசைப் படாமல் லேசாகத் திறந்த பணிப் பெண்ணொருத்தி உள்ளே தலையை நீட்டினாள். இரவு முழுதும் விழித்ததால் செந் தாமரை போல் சிவந்திருந்த கண்களுடன் ஸ்கந்தகுப்தன் தலைப்பாகத்தில் அமர்ந்திருந்த தாஸி பணிப்பெண்ணை வெளியே போகும்படி சைகை செய்துவிட்டு அடிமேலடி வைத்து அறையின் குறுக்கே நடந்து மன்னன் மஞ்சத்துக்குச் சற்று எட்ட இருந்த சாளரங்களைத் திறந்தாள். காலைச் சூரியன் தன் கிரணங்களில் சிலவற்றை ஏவி தன் வம்சத்துக் குழந்தையான குப்த சக்கரவர்த்தியின் நலிந்த உடலை ஆறுதலுடன் தடவிக் கொடுத்தான். அதனால் சுரணை பெற்ற சக்கரவர்த்தியின் அவயவங்கள் மெதுவாக அசையத் தொடங்கின. பக்கத்து ஆசனத்தில் பளபளத்து நின்ற தங்கக் கிண்ணத்தின் மூடியைத் திறந்து தாஸி அதிலிருந்த பன்னீரில் கையை நனைத்து மன்னர் விழிகளில் மென்மை யாகத் தடவினாள். கண்களைத் திறந்து தாஸியைப் பார்த் தான் ஸ்கந்தகுப்தன். அதுவரை தாஸியின் உள்ளத்திலிருந்த கவலை பெருமூச்சாக வெளிவந்து அவளுக்குச் சற்று சாந்தியை அளித்தது. கவலை நீங்கினாலும் ஸ்கந்தகுப்தன் தேகம் படும் கஷ்டத்தின் காரணமாக அவள் கண்களில் இரண்டு நீர்த்திவலைகள் தேங்கித்தான் நின்றன.



அவளைப் பார்த்த ஸ்கந்தகுப்தன் புன்முறுவல் செய்தான். அவள் ஆயாசத்தைவிட அவன் புன்முறுவல் தாஸிக்குப் பெருத்த வேதனையை அளித்தது. ஒவ்வொரு நாளும் உயிருக்கு மன்றாடிக்கொண்டு குப்த ராஜ்யத்தின் நலனுக்கும் மன்றாடும் மன்னனை உற்றுப் பார்த்த தாஸி, “மகாராஜா! இன்று உடம்பு எப்படியிருக்கிறது?” என்று விசாரித்தாள். மன்னன் புன்முறுவல் தனக்கு ஆறுத லளிக்கவே ஏற்பட்டதென்பதையும், உடல்நலத்தால் இயற்கை யாக எழுந்த உவகையால் அந்தப் புன்சிரிப்பு ஏற்படவில்லை யென்பதையும் தாஸி நன்றாக அறிந்திருந்தாள்.

அவள் கேள்விக்கு ஸ்கந்தகுப்தன் உடனே பதில் சொல்லவில்லை. “அஜித் சந்திரனிடமிருந்து ஏதாவது தகவல் உண்டா?” என்று கேட்டான்.

“மகாராஜா! நான் உங்கள் உடல் நிலையைப் பற்றிக் கேள்வி கேட்டேன்” என்று தாஸி ஞாபகப்படுத்தினாள்.

“நானும் அதற்குத்தான் பதில் சொல்கிறேன்” என்றான் ஸ்கந்தகுப்தன்.

“என்னிடம் விளையாடுகிறீர்களா மகாராஜா?” என்று தாஸி சற்றுக் கடிந்துகொண்டாள்.

ஒரு சொல்லில் ஆயிரக்கணக்கான வீரர்களை இஷ்டப் படி அசைக்கவல்ல ஸ்கந்தகுப்தன் தாஸியிடம் கெஞ்சிப் பேசினான்.

“விளையாட்டல்ல தாஸி. உண்மையாக உன் கேள்விக்குத்தான் பதில் சொன்னேன்” என்று மீண்டும் சொல்லிப் பக்கத்தில் நின்ற அவள் கையைத் தன் கையால் பிடித்துக் கொண்டான்.

“உங்கள் உடல்நிலை எப்படியிருக்கிறதென்று நான் கேட்டேன்” என்றாள் தாஸி அன்புடன், ஆனால் சற்று அழுத்தமாக.

"உடல்நிலை உள்ளத்தின் நிலையைப் பொறுத்தது. என் உள்ளத்தின் நிலை ராஜ்ய நிலையைப் பொறுத்தது. ராஜ்ய நிலை அஜித் சந்திரனைப் பொறுத்திருக்கிறது. ராஜ்ய மிருந்து செய்தி வந்து மாதம் ஒன்றாகிறது. அவனிட நாளும் அவன் கடிதத்தை எதிர்பார்க்கிறேன். ஒவ்வொரு வரை உள்ளத்தில் அமைதியில்லை. கடிதம் வராத வரை..." உள்ள அமைதியில்லாத

"உடல்நிலை ஒழுங்காயிருக்காது. நல்ல லட்சணம் மகா ராஜா! இப்படியே பிரதி தினமும் உள்ளம் உருகி உருகி நீங்கள் நைந்து போகவேண்டியது. நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது," என்று கோபமும் வருத்தமும் கலந்த குரலில் மன்னனை இடைமறித்துப் பேசினாள் தாஸி.

"மக்களை நினைத்து மன்னன் உருகவில்லையென்றால் வேறு யார்தான் உருகுவார்கள்? அவர்கள் நலனை எண் ணாதவனுக்கு ஆட்சிபீடம் எதற்கு?" என்று ஸ்கந்தகுப்தன் கேட்டான். இந்தக் கேள்வியைக் கேட்டபோது சக்கரவர்த்தி யின் பார்வை சாளரத்தைத் தாண்டி தொலைதூரத்தில் போய்க் கொண்டிருந்தது. "தாஸி! இந்தப் பரந்த உலகில் பிறக்கும் மக்களுக்குக் கணக்கு வழக்கில்லை. இத்தனைபேர் பிறக்கும்போது ஏதோ சிலருக்கு மட்டும் அரசாளும் சக்தி யைக் கடவுள் ஏன் கொடுக்கிறார்? ஒரே நகரத்தில் ஒரு பிரஜை தரையில் படுக்கிறான்; அவனை ஆள்பவன் பஞ்சணையில் துயில்கிறான்; இன்னொருவன் பட்டினி கிடக்கிறான்; அவனை ஆளும் அரசன் அறுசுவை உணவு உண்டு சுவைக்கிறான். மனிதனுக்கும் மனிதனுக்கும் கடவுள் ஏன் இந்தத் தாரதம்மியத்தை ஏற்படுத்துகிறார்? பொறுப்பு அதிகமுள்ளவனுக்கு அதிக சுகத்தையும் ஆண்டவன் அளிக் கிறான். பொறுப்பு அதிகமானால் உடலுக்கும் அதிக வேலை; உள்ளத்துக்கும் அதிக வேலை. அந்த வேலையைச் சரிவரச் செய்யக் கடவுள் அளிக்கும் வசதி சுகம். மக்கள் உழைப்பின் காரணமாகக் கிடைக்கும் சுகபோகங்களை மட்டும் ஏற்றுக்



கொண்டு கடமையைக் கைவிடுபவன் எப்படி அரசனா யிருக்கத் தகுதியுடையவன்?" என்று ஸ்கந்தகுப்தன் தானாகப் பேசிக்கொண்டே போனான்.

தாஸி கேட்டாள். "அளவுக்கு மீறிய அலுவலால் அரசனே அழிந்துவிட்டால்?"

"ஒரு அரசன் போனால் இன்னொரு அரசன் வருவான்; உலகத்தில் ஆள்பவர்களுக்குக் குறைவில்லை. கடமையை அறிந்து ஆள்பவர்கள்தான் குறைவு. பின்னால் வருபவர் களுக்குக் கடமையை உணர்த்துவது முன்னால் செல்பவர் களின் கடமை. ஸமுத்திரகுப்தனும் குமாரகுப்தனும் சென்ற வழியில் நான் செல்கிறேன். என் வழியில் அடுத்த குப்தன் வந்தால் குப்தராஜ்யம் நிலைக்கலாம். இன்றேல் அழிந்து விடும். அப்படி அழிவதானால் அதை நான் நிறுத்த முடியாது. என் கடைசி மூச்சு வரையில் நான் கடமையைச் செய்தாக வேண்டும். ஸமுத்திரகுப்தனால் நிறுத்தப்பட்ட சாம்ராஜ்யம் ஸ்கந்தகுப்தனால் அழிந்தது என்ற பெயர் சரித்திரத்தில் வரக்கூடாது தாஸி. அதை நினைவில் வைத்துக் கொள்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

அவன் சொற்கள் திரும்பத் திரும்பத் தாஸியின் இதயத் தைத் தாக்கவே மளமளவென்று கண்களிலிருந்து நீர்த் துளிகள் உதிர்ந்தன. ஸ்கந்தகுப்தன் அவள் கையை மெல்லத் தடவிக் கொடுத்துக்கொண்டே, "தாஸி! இரவும் பகலும் கண் விழித்து என் சொந்தத் தாயைப்போல் என்னைக் கவனிக்கிறாய். வீரமாதாவான நீ கண்ணீர் விடலாமா? என் உடல் உயிரற்றுத் துவண்டு உன் மடியில் விழும்போது உன் கண்களில் நீர் துளிர்க்கலாகாது. வீரமாதாக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஸ்கந்தகுப்தன் செவிலித்தாய் ஓர் உதாரணம் என்று மக்கள் பேசும்படி நடந்துகொள்ள வேண்டாமா?" என்று கேட்டான்.

"இப்படிப் பேசுவதைவிட நீங்கள் என்னைக் கொன்று விடலாம் மகாராஜா! நான் வீரமாதாவல்ல. உங்கள் உடலி

உறுத்தும் துரும்புகூட என் இதயத்தில் உறுத்தும்போது நான் எப்படி வீரமாதாவாக இருக்க முடியும்? எனக்கு அந்தப் பட்டம் வேண்டாம் மகாராஜா! நான் இந்த ஜன்மத்தில் தங்கள் பணிப்பெண்ணாகவே இருந்து விடுகிறேன். உங்கள் உடல் துவண்டு என் மடியில் விழவும் வேண்டாம்...'' என்று பேசிக்கொண்டே போனவள் மேலும் பேச இயலாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

ஸ்கந்தகுப்தன் தாஸியைத் தன் பக்கத்தில் உட்கார வைத்து வெகுநேரம் அவள் கைகளைத் தடவிக் கொடுத்தான். எந்த அழுகைக்கும் நிற்கும் நேரம் உண்டல்லவா? தாஸியின் துக்கமும் மெல்லத் தணிந்தது, முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். அவளைப் பார்த்த ஸ்கந்தகுப்தன், "உன்னைப் போல அன்புள்ள தாஸிகளால் எவ்வளவு அரசர்கள் பிழைத்திருக்கிறார்கள் என்பதை சரித்திரம் சொல்லுகிறது தாஸி! இந்த அன்புக்கு ராஜ்யங்களையும் கொடுக்கலாம்! ஆனால் ஸ்கந்தகுப்தன் உனக்கு என்ன கொடுக்கப் போகிறான்?'' என்று கேட்டான்.

"ஒன்றும் கொடுக்க வேண்டாம். நான் சொல்கிறபடி சக்கரவர்த்தி கேட்டால் போதும்'' என்றாள் தாஸி.

"அப்படியே கேட்கிறேன். சோதித்துப்பார்.''

"இப்பொழுது காலை அனுஷ்டானங்களை மெள்ள முடித்துக்கொண்டு நான் கொடுக்கும் ஆகாரத்தைச் சாப்பிட வேண்டும்.''

"சாப்பிடுகிறேன். அதற்கு முன்பு அஜித் சந்திரனிடமிருந்து தகவல் வந்ததா என்று தெரிய வேண்டும். பிரதம மந்திரிக்குக் கொஞ்சம் சொல்லியனுப்புகிறாயா?''

"நீங்கள் சாப்பிட்ட பிறகு பிரதம மந்திரியைப் பார்க்கக் கூடாதா?''

"முதலில் பிரதம மந்திரியைப் பார்த்துவிட்டால் பிறகு மனநிம்மதியுடன் சாப்பிடுவேன்,'' என்று ஸ்கந்தகுப்தன் கெஞ்சினான்.



மண்டலாதிபதியே கெஞ்சும்போது சாதாரண தாஸி என்ன செய்வாள்? ஆகாரம், நித்திரை சகலத்திற்கும் ராஜ்ய சேவைக்கு அடுத்த இடத்தையே ஸ்கந்தகுப்தன் அளித்திருந்தான் என்பதை அந்தத் தாஸியைவிட அறிந்தவர் யார்? ஆகவே, மன்னன் கட்டளைப்படி அவனை மெள்ளத் தூக்கித் தலையணைகளை உயரமாகப் போட்டு அதில் சார்த்திப் படுக்க வைத்தாள். பிறகு கங்காஜலமும் வாசனைப் பொடியும் கொண்டுவந்து பல் துலக்கச் செய்து உயர்ந்த பட்டுகளால் அவன் முக மண்டலத்தையும் உடலையும் துடைத்தாள். இத்தனையும் முடிந்ததும், "மகாராஜா! நான் போய்ப் பிரதம மந்திரியை அழைத்து வரட்டுமா?'' என்று கேட்டாள். அந்த சமயம் முன்னறிவிப்பின்றிப் பிரதம மந்திரியே அவசர அவசரமாக உள்ளே நுழைந்தார்.

ஸ்கந்தகுப்தன் கண்கள் அவரை ஏறெடுத்துப் பார்த்தன. கண்களிலிருந்த கேள்வியைப் பிரதம மந்திரி புரிந்துகொண்டு, "மகாராஜாவுக்கு நான் நல்ல செய்தி கொண்டு வரவில்லை!'' என்று ஆரம்பித்தார்.

"செய்தியைச் சொல்லுங்கள்,'' என்று ஸ்கந்தகுப்தன் உத்தரவிட்டான்.

"அடிலன் இறந்துவிட்டான்'' என்றார் பிரதம மந்திரி, சுருக்கமாக.

"ஹா!'' என்று அலறினாள் தாஸி.

ஸ்கந்தகுப்தன் முகத்தில் எந்த மாறுதலுமில்லை.

"மூலஸ்தானபுரத்தை அடிலன் தாக்கினானா?'' என்று விசாரித்தான்.

"ஆம், மகாராஜா!''

"யார் உத்தரவின்மேல் தாக்கினான்?''

"பூரகுப்தன் உத்தரவின் மேல்.''

"உத்தரவு எழுத்துப்பட இருக்கிறதா?''

"இருக்கிறது மகாராஜா! இதோ அந்த ஓலையையே நமது ஒற்றர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று பிரதம மந்திரி ஓலையை நீட்டினார். அரசன் அதைப் படிக்கும் போது பிரதம மந்திரி இன்னொரு தகவலையும் சொன்னார். "மூலஸ்தானபுர சைன்னியத்தைத் தோரமானாவே நேரில் நடத்தி அடிலனை முறியடித்துக் கைது செய்து பிறகு தூக்கிலிட்டானாம்" என்று விவரித்தார்.

அடிலன் மரணத்தைப் பற்றி ஸ்கந்தகுப்தன் அதிக அக்கறை காட்டவில்லை. பூரகுப்தன் ஓலையைத் திரும்பத் திரும்பப் படித்தான். மெள்ள மெள்ள மன்னன் முகத்தில் சந்தேகக் குறி படருவதைக் கண்ட பிரதம மந்திரியும் தாஸியும் வியப்படைந்து நின்றார்கள். "இந்த ஓலை குப்த ராஜ்யத்தை அடுத்த பத்து வருஷங்களுக்குக் காப்பாற்றும். ஹூணர்களின் அட்டூழியங்களிலிருந்து மக்களுக்கு அது வரை விடுதலை உண்டு," என்று ஸ்கந்தகுப்தன் மகிழ்ச்சியுடன் கூறியபோது அவ்விருவர் வியப்பும் உச்சநிலையை அடைந்தது.

அவர்கள் வியப்பைக் கண்ட ஸ்கந்தகுப்தன், "உங்களுக்கு இப்பொழுது புரியாது. நான் சொல்வது எவ்வளவு உண்மையென்பதைச் சரித்திரம் எடுத்துக் காட்டும்" என்று கூறி, ஓலையைப் பத்திரமாகத் தலையணைக்கு அடியில் வைத்துவிட்டு, "தாஸி! சரி! நீ போய் ஆகாரம் கொண்டு வா!" என்றான்.

அவள் சென்றதும் பிரதம மந்திரியிடம் சில முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தான் மன்னன். அவற்றைக் கேட்ட பிரதம மந்திரி, "மலைவாசலுக்கா? அங்கு போய்ச் சேருவது கஷ்டமாயிற்றே" என்று பயத்துடன் கூறினார்.

"என்ன கஷ்டமானாலும் போய்ச் சேர்ந்துதான் ஆக வேண்டும்" என்றான் ஸ்கந்தகுப்தன் ஆவேசத்துடன்.

# 39. சயன அறைக் கைதி

அடிலன் மாளிகையின் மேல்தளத்திலிருந்து சுற்றுப் புறத்தைக் கவனித்த அஜித் சந்திரன் அந்த ஐந்து வருஷ காலத்தில் மலைவாசல் எவ்வளவு தூரம் மாறிவிட்டதென்பதை நினைத்து மிகவும் ஆச்சரியப்பட்டான். அடிலன் மாளிகைக்கும் புருஷபுரத்து வில்லவர் வீடுகளுக்குமிடையே இருந்த நிலப்பரப்பில் பெரிய பெரிய வீடுகள் பல எழுந்து உதிரியாய் நின்ற அடிலன் மாளிகையை புருஷபுரத்தோடு சங்கிலிபோல் இணைத்து நின்றன. அந்த வீடுகளிலிருந்து ஹூண வீரர்கள் ஆயுதபாணிகளாய் சாரிசாரியாய் சஞ்சரித்து மலைவாசலைக் கபீசத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த வீடுகளின் மேற்குக் கோடியில் கணவாய்க்கருகிலிருந்த வில்லவர் வீடுகளும் பெரிய அரண்கள் போலவே காட்சியளித்தன. ஐந்து வருஷத்திற்குள் மலைவாசலைப் பெரிய ராணுவ ஸ்தலமாகத் தோரமானா மாற்றியதைக் கண்டதால் தோரமானாவைப்பற்றிய ஒரு கௌரவமும், குப்த ராஜ்யத்தின் பிற்காலத்தைப்பற்றிய ஒரு கவலையும் அஜித் சந்திரன் மனத்தில் உதயமாயின. தோரமானாவுக்கு அடுத்தபடி மலைவாசலிலுள்ள அத்தனை சைன்னியங்களுக்கும் தானே அதிகாரியென்பதை அஜித் சந்திரன் உணர்ந்திருந்தான். ஆனால், தோரமானா தனக்கு அளித்துள்ள இத்தனை அதிகாரத்தோடு தன்னைச் சதா வேவு பார்க்க ஒற்றர்களையும் நியமித்திருக்கிறான் என்பதும் அஜித் சந்திரனுக்குச் சந்தேகமறத் தெரிந்தது. தான் சற்று அஜாக்கிரதையாகயிருந்தாலும் திட்டத்திலிருந்து ஒரு படி தவறினாலும் தன் கதி அதோகதிதானென்பதிலோ அடிலனுக்குக் கிடைத்த தூக்குக் கயிறு தன் கழுத்தையும் அலங்

கரிக்கும் என்பதிலோ உபாத்தியாயனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. தன் உயிர் ஒன்று மட்டும் அபாயத்திலிருந் தால் அஜித் சந்திரன் அச்சப்படமாட்டான். தன் உயிருடன் குப்த ராஜ்யத்தின் பிற்காலமும் இணைந்திருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற உறுதி யுடன் இருந்தான். உபாத்தியாயன் உயிரைப் பற்றிய இந்த உறுதி உதயமானதும் அடுத்துக் கீழே இருந்த மாளிகை வெளி முற்றத்தை உபாத்தியாயன் கவனித்தான். அந்த வெளி முற்றத்தில் தன் உயிர் போக இருந்த நிலையையும் சித்ரா தேவி தன்னைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட சிரமத்தையும் எண்ணிப் பார்த்தான்.

விதியின் விசித்திரச் செயலை நினைத்த உபாத்தியாயன் வெறுப்புடன் சிரித்தான். அதே அடிலன் மாளிகை! முன்பு அங்கு அடிமையாயிருந்து அடிபட்டு உயிர் துறக்க இருந்த அஜித் சந்திரன், இன்று யார் உயிரையும் போக்க அதிகாரம் படைத்த உபசேனாதிபதி! அதே இடத்தில் எஜமானியாக இருந்த சித்ராதேவி, அதே அடிமையின் கையில் கைதி. காலம் ஜீவராசிகளின் அந்தஸ்தை எப்படி மாற்றி மாற்றித் தூக்கி எறிகிறது என்று சிந்திக்கத் தொடங்கினான். இத்தகைய வேதாந்தம் மனிதன் மனத்தில் ஊன்றினால் அவன் உலகச் சூழ்நிலையில் தன் கடமையை நிறைவேற்ற மாட்டான். ஆகையால் வேதாந்த மனப்பான்மையை அவ்வப் பொழுது அகற்றக் கடவுள் மாயையையும் படைத்திருக்கிறார். அந்த மாயை அஜித் சந்திரன் மனத்திலும் புகுந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அடுத்த விநாடி, ‘இந்த மாளிகையில் அதிகாரம் செலுத்தி வந்த சித்ரா இன்று கைதியாயிருக்கிறாளே’ என்று அனுதாபப்படுவானா?

சித்ராவிடம் ஏற்பட்ட அனுதாபத்தால் உபாத்தியாயனிட மிருந்து பெருமூச்சொன்று வெளிவந்தது. சித்ராவின் நினைப்பு வந்துவிடவே அவளைப் பார்ப்பதற்காகத்



தளத்தை விட்டுக் கீழே செல்ல மெத்தைப் படிகளில் இறங்கலானான். இறங்கிக் கீழ்த்தளத்துக்கு வந்த உபாத்தி யாயன் பணிப்பெண்ணொருத்தியைக் கூப்பிட்டு, “சித்ரா தேவி எங்கிருக்கிறாள்” என்று விசாரித்தான். “சயன அறையில் இருக்கிறாள்” என்று பணிப்பெண் கூறவே அந்த அறையை நாடி நடந்தான்.

அநேக நாட்களுக்கு முன்பு சண்பகத் தோட்டத்திலிருந்து வந்த உபாத்தியாயனை நினைத்து இன்ப வேதனையில் ஆழ்ந்த அதே சயன அறையில் இன்றும் சித்ராதேவி படுத் திருக்கிறாள். ஆனால், பழைய நிலையிலிருந்து எத்தனை மாறுதல்! அன்று அவள் எட்டாக்கனி. பறிக்க ஆசைப் பட்டான் அஜித் சந்திரன். இன்றோ அவள் அவன் கைக்குக் கிட்டிய கைதி. ஆனால், அவளை அணுகவும் பயந்தான் அஜித் சந்திரன். சித்ராவின் மனோநிலை அப்படியிருந்தது. தகப்பனைத் தோரமானா தூக்கிலிட்டான் என்ற செய்தி அவள்மீது இடிபோல் விழுந்தது. ஒரு வார காலம் என்ன செய்கிறோம் என்ற உணர்வில்லாமல் காலங் கழித்தாள். குழந்தைப் பருவத்திலிருந்தே ஜனங்கள் கொல்லப்படுவதைப் பார்த்த அந்த ஹூண மகளுக்குத் தகப்பன் கொல்லப் பட்டது பிரமாதமாகத் தோன்றவில்லை. ஆனால் அவன் தோரமானாவின் கையால் அழிந்தானே என்ற ஆத்திரம் மாத்திரம் உள்ளூர இருந்துகொண்டிருந்தது. தகப்பன் மரணத்தைக் கேட்ட சித்ரா, குலுங்கி அழவில்லை. அந்தச் செய்தியை அவளுக்கு அஜித் சந்திரனே அறிவித்தான். கம்பீர மாக எழுந்து நின்று செய்தியைக் கேட்ட சித்ராதேவி ஒரு விநாடி ஸ்தம்பித்துப் போனாள். மறுகணம் அவள் கண் களிலிருந்து நீர்த்துளிகள் உருண்டோடின. ஆனால், அவள் உடல் சிறிதுகூட அசையவில்லை. கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்ட சித்ராதேவி, “உபாத்தி யாயரே, நான் தனியாக இருக்க விரும்புகிறேன்” என்றாள்.